



| மாலை 7 | January 1942, விஷு ௵ தை | முத்து 1 |
|---|---|---|


# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| கார்த்திகைச் சீர் | 5 | ரஸிகன் |
| அரிசி | 24 | ஆ. வெ. ஜயராமன் |
| பிராயச்சித்தம் | 30 | எச். வைத்யநாதன் |
| பாத்திரமறிந்து பிச்சை இடு | 35 | பாரமார்த்திகன் |
| அடை ஜபம் | 36 | வ. வேணுகோபாலன் |
| அஹிம்ஸை | 40 | கா. சி. வேங்கடரமணி |
| ஸ்வேதாரண்ய ஆச்ரம பால பாடம் | 42 | கா. சி. வேங்கடரமணி |
| தலைக்கு வந்தது தலைப்[illegible]கையுடன் போனது | 44 | ய. மஹாலிங்க சாஸ்த்ரிகள், எம்.ஏ;பி.எல். |
| புத்தக விமர்சனம் | 46 | |
| உதிர்ந்த மணிகள் | 47 | |



ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
5, வேங்கடேச அக்ரகாரம், மயிலாப்பூர், மதராஸ்,

வருஷச் சந்தா : உள்நாடு ரூ. 3. வெளிநாடு ரூ. 5.


---

“பாரத[illegible]ணி”யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் [illegible]பயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

REGD. No. 1506

அசோகா

MILD SCENTED

ASOKA

ரிஜிஸ்டர். நெ. 1506

# அசோகா சுகந்த பாக்குத்தூள்

தயாரிப்பவர் :—

## M. K. கிருஷ்ணசெட்டி

கோயமுத்தூர்

---

மதராஸ் விற்பனையாளர் :—

## V. கனகய்ய செட்டி & Co.,


நைனியப்ப நாயகன் தெரு, பார்க் டவுன்,

மதராஸ்.

டெலிகிராம்ஸ் : "ஷேர்யோபிளாஸ்ட்ஸ்" டெலிபோன் : ஸௌத் 430 & 43

# பெங்கால் ஷேர் டீலர்ஸ் ஸிண்டிகேட் லிமிடெட்

தலைமை ஆபீஸ் :—ஸதர்ன் அவின்யூ, கல்கத்தா.



சௌரங்கி ஸ்கோயரில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் எங்கள் சொந்த கட்டிடங்கள். ஷை கட்டிடத்தின் அஸ்திவாரக் கல்லை, 1941ளு ஜூலைமீ 31உயன்று ஆச்சார்யா ஸர் பி. ஸி. ராய் அவர்கள் நாட்டினார்.

●

கிளை ஸ்தாபனங்கள் :
ஜம்ஷெட்பூர்,
பெரிஸ், பகல்பூர்,
மாங்கிர், பாட்னு,
கோமில்லா,
கர்ஸியாங், தி'நுகா
பாங்கூறு, & மதறாஸ்

---

அதிகாரம் பெற்ற மூலதனம்
ரூ. **25** லக்ஷம்

சேகரித்த மூலதனம்
ரூ. **8,90,000**

வசூலிக்கப்பெற்ற மூலதனம்
ரூ. **2,95,000**

கம்பெனி வேலை செய்யத் தொடங்கிய முதல் வருஷத்திலேயே 10% வீதம் டிவிடண்ட் (வருமான வரி இன்றி) வழங்கப் பெற்றது. 1941ளு செப்டம்பர்மீ முடிய இரண்டாவது வருஷத்தின் முற்பாதிக்கு ஓர் இடைக்கால டிவிடண்ட் வழங்க உத்தேசித்திருக்கிறது.

பிக்ஸட் டிபாஸிட்டுகள் ஒரு வருஷத்திற்கு 5% வட்டி வீதம் நாங்கள் பெற்றுக் கொள்ளுகிறோம்.

**நாங்கள் எல்லாவிதமான பங்கு விற்பனைகளிலும், கவர்ன்மெண்ட் ஸெக்யூரிட்டிகளிலும் லேவாதேவி செய்கிறோம்.**

எங்கள் "மாதாந்திர ஷேர் மார்க்கேட் ரிப்போர்ட்"டுக்கு எழுதவும். வருஷ சந்தா ரூ **3** மாதிரி பிரதிக்கு எழுதுங்கள்.

இந்த ஸிண்டிகேட்டின் பாக்கி ஷேர்களை விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை

---

எங்கள் சென்னை கிளை ஆபீஸ் ஆகஸ்ட் 1உ முதல், மாஜி ரயில்வே ரேட்ஸ் அட்... ஸூப்பிரண்டண்ட்டாயிருந்த ராவ் சாஹேப் நடேச அய்யர் அவர்களின் நிர்வாகத்தின் ... செட்டித தெருவில் நடத்தப்படுகிறது.

தேசமெங்கிலுமுள்ள

அழகிய

மாதர்கள்

உபயோகிப்பது



மைசூர் சந்தன சோப்

மேனியின் அழகைப் பாதுகாக்கிறது. தங்கள் மேனி அழகிற்கு மேன்மை அளிக்கவல்ல சோப் இது ஒன்றே என இவர்கள் நம்புகின்றனர்.

மைசூர்

சந்தன சோப்

கவர்ன்மெண்ட் சோப் பாக்டரி,

பெங்களூர்.

# கார்த்திகைச் சீர்

ரஸிகன்

●

அங்கம் I காக்ஷி 1.

[மூசூர் ஓர் சிறிய பட்டணம் அதன் கிழக்குக் கோடியில் கிழக்கு மேற்கு அக்கிரகாரத்திற்கு நடுவிலுள்ள தெற்குப் பார்த்த பெரிய வீட்டுத் திண்ணையில் சமுக்காளம் விரித்து ஐந்தாறு பேர் படுத்துக் கொண்டும் உட்கார்ந்துக் கொண்டும் தாம்பூலம் போட்டுக் கொண்டுமிருக்கிறார்கள். பகல் 12 மணியிருக்கும். நல்ல வெயில் திண்ணையின் கீழுள்ள ஆளோடிக்கு வெளியில் நீட்டிய தாழ்ந்த சாய்ப்பினால் திண்ணையில் வேடை அதிகமாகத் தெரிய வில்லை. இருந்தாலும் கை விசிறிகள் மும்முறமாய் வேலை செய்கின்றன.]

ஒரு ஒற்றைமாட்டு வண்டி வாசலில் வந்து நிற்கிறது. சுமார் 40 வயதுள்ள ஒருவர் வண்டியிலிருந்து இறங்கி ஒன்றன்பின் ஒன்றாய் ஒரு பெரிய பிரம்புப் பெட்டியையும், ஒரு மடிஸஞ்சியையும் எடுத்து ஆளோடியில் வைத்து விட்டு வண்டிக்காரனுக்குச் சில்லரை கொடுத்து விட்டு வீட்டுப் பக்கம் திரும்புகிறார். இடுப்பில் பஞ்ச கச்சமும், தூக்கி முடிந்த குடுமியும் கட்டுக் கட்டாய் இட்டு வியர்வையில் கொஞ்சம் அழிந்திருக்கும் விபூதியும், காதில் அணிந்திருக்கும் வைரக் கடுக்கனும் வலது கை ஆள் காட்டிவிரலில் விளங்கும் பவித்திரமும் அவர் லௌகிகத்திலும் வைதிகத்தையே அனுஸரிக்கும் கிராமாந்தர பிராசுதாரரென விளக்குகின்றன.

திண்ணையை நோக்குகிறார். ஒருவரும் எழுந்திருக்கவில்லை. அவர் வரவை கவனித்ததாகவே தெரியவில்லை. சற்றுத் திகைத்தவர் போல் நின்று திரும்பவும் ஒரு கனைப்புக் கனைத்துக் கொண்டு ஆளோடியில் ஏறி மூட்டைகளைத் தூக்கி சின்னத் திண்ணையில் வைக்கிறார். பெரிய திண்ணையில் முதல் அங்கணத்தில் மாப்பிள்ளை தலையணையில் தலையும் தண்டியத்தில் காலுமாய்ப் படுத்திருந்த சுந்தரமையர்—அந்த வீட்டு மாப்பிள்ளை, ராமநாதையரின் மாப்பிள்ளைக்கு மூத்த தமக்கை புருஷன்—கால் கைகளை மடக்காமலே, வெற்றிலையும் புகையிலையும் கன்னகைத் துருத்திபோல் உப்பச் செய்ய, வந்த மனுஷ்யனை வரவேற்காமலே, ஆகாசத்தைப் பார்த்த வண்ணம் மேலக் கோடியில் படுத்திருந்த தன் மைத்துனனைக் கூவிச்சொல்லுகிறார்.]

சு.—நடராஜா, மாமனார் வந்திருக்காப் போலிருக்கே?

ந.—நல்ல காரியம், அதுக்கென்னையென்ன பண்ணச் சொல்லரேள்?

[சுந்தரமையருக் கடுத்தாப் போல் படுத்து, அவரைப்போல் வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருக்கும் பத்து வயதுள்ள அவர் பெண் ருக்மிணி கொஞ்சம் பதட்டமாயும், ஒரு விஷமச் சிரிப்பும் சிரித்துக் கொண்டு,]

ரு.—மாமாவுக்குக் கார்த்திகைச் சீர் வந்திருக்காப்பிலேருக்கு! (என்று சொல்லி சூள் கொட்டுகிறாள்.]

ந.—சீ! சும்மாயிரு, தடிக்கழுதை! மொளைச்சு மூணு எலை ஆகல்லெ, வம்புக்கு நாக்கெ நீட்டரது பாரு!"

[நடராஜன் படுத்திருக்கும் இடத்திற்கருகாமையிலுள்ள ஜன்னலுக்குப் பின்புறம் நின்று கொண்டு ராமநாதைய்யர் வரவை கவனித்திருந்த சுமார் 50 வயதுள்ள அவன் தாயார் காவேரியம்மாள்—காதில் வெள்ளை போலேயும் தூக்கிச் சுருக்குப்

போட்ட அரை நரைத் தலைமயிரும், பேட்டுப் போட்டத் ரவிக்கை துண்டும் அவள் கொஞ்சம் ராங்கிக்காரி என்பதை எடுத்துக் காட்டுகின்றன — இதைக் கேட்டு ஆத்திரம் தொனிக்குங்குரலில்]

கா.—ஆமாண்டாப்பா, ஆமாம், அவளொத்தான் அதிகாரம் பண்ணலாம், பொண்டாட்டி கிட்டப் பேசினுப் பல்லுனுப் போயிடும்!

நட.—சரி, சரி, பேசாமயிரு, போரும்.

கா.—மெதுவாடா, என்னெ அவையடக்கம் பண்ணவாண்டாம்! பண்ணவேண்டியவாளெப் பண்ணு.

---

## காக்ஷி 2.

[இதற்குள் பேத்தி ருக்மிணி, மூஞ்சியைத் தூக்கிக்கொண்டு திண்ணையிலிருந்து ஆளோடியில் குதித்து உள்ளே போகிறாள். ராமநாதையரும மெல்லப் பெட்டியை ஒரு கையிலும் மடிஸஞ்சியை ஒரு கையிலுமாய் எடுத்துக் கொண்டு பின்னே செல்லுகிறார். இடைக் கட்டு வாசப்படிக்கப்புற மிருக்கும் கிழண்டைப் பக்கமாயுள்ள சின்னத் தாழ்வாரத்தில் சாமான்களை வைக்கிறார். வீட்டு எஜமான் கலியாணமையர் கூடத்து ஊஞ்சற் பலகையில் உட்கார்ந்து பேப்பர் படிக்கிறார். கூடத்தையொட்டின தாழ்வாரத்திலுள்ள தூணைப பிடித்துக் கொண்டு நிற்கிறாள் ருக்மிணி. சாமான் வைத்த சத்தத்தைக் கேட்டு, திரும்பிப் பார்த்து, ஸம்பந்தி நிற்புதைக் கண்டு, எங்கேயோ பார்த்துக் கொண்டு அரைகுறையாய்]

கலி.— எப்ப வந்தாப்பலே!

ரா.—இப்பொதான் (என்று, பின்னும் ஏதோ சொல்ல வாயெடுத்தவர், கலியாணமையர் தன்னை முற்றிலும் மறந்தவர் போல் பேப்பரில் மும்முற மாயிறங்கி விட்டதைக் கண்டு, ருக்மிணியைப் பார்த்து) அம்மா, ரெண்டு தாம்பளம் வாயிண்டு வாயேன்.

[அந்தப் பெண் பதில் சொல்லுவதற்கு முன், காவேரியம்மாள் தாழ்வாரத்துள் வாசற்படியில் நின்றபடி, தன் பேத்தியைப் பார்த்துச் சொல்லுபவள் போல,]

கா.—ஏன், மாமாவுக்கு அடுக்கடுக்கா தாம்பாளம் சீர்வந்திருக்கே, அதிலே எடுத்துண்டு வரப்போறையோ? வெக்கமில்லே, இங்கே என்னத்துக்கு நிக்கரே, ஒன்னெக் கண்டாலேயே தான் ஆகல்லேயே, உள்ளே தொலேயேன்.

கலி.—எதுக்கு டீ கொழந்தையைக் கோவிச்சுக்கரே? அம்மா, ருக்கு, நீ எங்கிட்டவா" (என்று கொஞ்ச, பேத்தி வந்து மேலே சாய்ந்து கொண்டு ஊஞ்சலில் உட்காருகிறாள். ராமநாதையர் சற்று நின்று விட்டு வாசற்பக்கம் திரும்புகிறார்.)

---

## காக்ஷி 3.

[ராமநாதய்யர் உள்ளே போனதும், ருக்குமணிக்கப்புறம் திண்ணையில் படுத்திருந்த பிச்சுக்குப்பன் படுத்தபடியே சுந்தரமய்யர் பக்கம் நகர்ந்து மெதுவாய் விளாப்புரத்தில் கிமிண்டுகிறான். இவனுக்கு 35 வயதிருக்கும். விட புருஷனைக் காலங்கழித்து கைக்காசைத் துலைத்துப் பிறர் துடையில் கயிறு திரித்துக் காலந் தள்ளுபவனுகத் தெரிகிறது. சுந்தரமய்யர் அவன் பக்கம் திரும்ப, மெதுவாய் இருவருக்கும் ஸம்பாஷணை நடக்கிறது.]

பி.—ஒங்காட்டிலே—இல்லே யில்லே, என் காட்டிலே—மழை பெஞ்சுதுரா, சுந்தரம்! வெண்ணையெ வெச்சுண்டு நெய்க்கழுவானே?

சு.—என்னங்காணும், புதிரு போடரே.

பி.—எது, இன்னும் விஷயம் விளங்கல்லே! என்ன இன்னிக்கி இவ்வளவு மந்தம்! ஏண்டா, ஐயர்வாள் வந்திருக்காரே, இம்மே பணத்துக் கென்னடா பஞ்சம்?

சு.—ஆமாம், அய்யர்வாள் மூட்டை கட்டிக் கொணந்திருக்கார், நீவாயிண்டு போகலாம்!

பி.—அது ஒனக்கென்ன, நானுச்சு பணத்தெ வஸூல் பண்ண. நீ மட்டும் நான் சொன்னத்தைப் பண்ணு.

சு.—(கொஞ்சம் வெருண்ட பார்வையாய்க் கோடி அங்கணத்தில் படுத்திருக்கும் தன் மைத்துனனைப் பார்த்தபடியே) —சீ, சீ, அந்தப்படுவெட்டி ஏதாவது கோணமாணுனு பேசும், ஒன் வெவஹாரமெல்லாம் இங்கே வாண்டாம்.

பி.—அப்பொ, எம்பணத்தெக் கீழே வெச்சுட்டு மறு வேலே பாரு! ஏதோ, வெகு கால சினேகமாச்சேன்னு சொல்லி மொடைக்கு வாங்கிக் குடுத்ததுக்கு எனக்கு நல்ல பலன்!

சு.—பணம் பணம்னு புடுங்கரையே, என்ன ஒங்காத்துப் பொட்டிலேருந்து எடுத்துக் குடுத்தது பாழெபோறது? சீட்டாட்டத்திலே யாராரையோ கொள்ளேயடிச்சு வந்ததிலே 50 ரூபா கொடுத்தயாக்கும், ரூபா 100க்கு எழுதிவாயிண்டே, ஒரே மணியிலே கொடுத்த 50 ரூபாயும் திருப்பி அடிச்சுண்டு போய்டே!

பி.—அடே, கம்மனுட்டி, சீட்டாடத் தெரியாபோனு அங்கே வந்து மேலே விழுவானே இந்த 50 ரூபாய்க்கி என்னிண்டே டிங்கியடிச்சதிலே கொரச்சலில்லயே! வருஷம் ரெண்டாச்சு, காப்பைசா வட்டியெக் காணும், அந்தப்பாவி ராமகிருஷ்ண செட்டி என்னெ உயிரெ வாங்கரான். தினம் போது விடிஞ்சா, ‘ஒனக்குப் பணத்தெ வசூல் பண்ணத்துப்பில்லேன்னு நோட்டெ மேடோவர் பண்ணியெறியுங் காணும், நாளேக்குப் பணத்தெக் கதரிண்டு கொணந்து கொட்டச் சொல்ரேன்'ன்னு வாதிக்கிருன். நீயானு மீனமேஷம் பாக்கறே! இம்மே ஒரு நிமிஷங் கூட சும்மாயிருக்க முடியாதப்பா. ஒண்ணு, நாஞ் சொன்னபடி பண்ணணும், இல்லே, நோட்டு செட்டி பேரிலே மேடோவர் தான். தறந்த கோர்ட்டிலே போட்டுடுவான்.

சு.—(நயமாய்)—அது சரி, அப்பா, பணம் எப்படி களம்பப் போறது? ராமநாதையன் ஏதோ ஏராளமா சீரு செய்யப் போருன், அதிலே நான் ஒரு கை வாரி ஒங்கிட்டக் குடுத்துடலாமுன்னு நெனச்சுண்டிருக்கையா? அவன் கலியாணத்தும் போது போடரேன்னு சொன்ன நகையைப் போடல்லேன்னு கிழவனும் கிழவியுமா அவனெ வறுத்துக் கொட்டிண்டிருக்காளே!

பி.—அதெல்லாம் பத்தி ஒனெக்கென்ன? நான்னு ஆளாச்சு. என்ன, சொல்லு, ஒரு சின்ன வேலே செய்யட்டுமா?

சு.—(அஸ்வாரஸ்யமாய்)—எந்த எழவோ பண்ணு, பணத்தெமட்டுங் கேக்காதேயென்னே, எங்கிட்டக் காலணுயில்லே.

[இது ஸமயம் ராமநாதையர் வெளி வரவே, பிச்சுக்குப்பன் திண்ணையை விட்டு ரொம்ப பரபரப்போடு இறங்கி, வாயெல்லாம் பல்லாய்ச் சிரித்துக் கொண்டு கும்பிடு போட்டு]

பி.—வாங்கோ, அண்ணு, எப்போ வந்தது? நீங்க உள்ள போனதெப் பாக்க வேல்லியே! சோத்து மயக்கத்திலே சித்தே கண்ணசந்துட்டேன் போலேருக்கு. ஊர்லே எல்லாரும் சௌக்கியந்தானே? பார்த்து ரொம்ப நாளாச்சு.

ரா—சௌக்கியந்தான்....மன்னிக்கணும், தங்களேத் தெரியல்லேயே.

சுந்தரம்—வாருங்கோ, மாமா, நம்ம பிச்சுக்குப்பன் தெரியாது ஒங்களுக்கு? நம்மூரு மேலக் கோடி வாஞ்சி மாமா புள்ளே.

ரா—ஓகோ, அப்படியா? ரொம்ப சந்தோஷம், சரி, வெயிலாப் போறது, ஆத்தங்கரைக்குப் போயிட்டு வறேன்.

பி.—அடடா, இத்தனே நாழிக்கிமேலே அவ்வளவு தூரம் போகணமே. எதுக்கு, (தாழ்வாரத்துள்ளே நோக்கிய படியே சற்று மெதுவான குரலில்) கொழந்தை மங்களத்தெக் கொஞ்சம் வென்னீரு போடச்சொன்னு ஒரு நிமிஷம் போட்டுடரா.

ரா.—(அவஸரமாக) வேண்டாம், வேண்டாம், வெயில் பொசுக்கறது, வென்னீரென்னத்துக்கு. காலம்பர ஊரிலே ஸ்நானம் பண்ணி பூஜை பண்ணிப்பிட்டேன். ரயில் தீட்டாயிருக்கே, ஸ்நானம் பண்ணித்தான் சாப்படணும். தவிர, சித்தெக் கடைக்கும் போய்ட்டு வரணும்.

பி.—அதுக்கென்ன, ஸாயந்தரம் போனாப் போறது, வெய்யல் தாழ்ந்தாப்பிலே.

ரா.—இல்லெ, ரெண்டு தாம்பாளம் வாய்ண்டு வரணும், இப்பொ வேண்டிருக்கு.

பி.—அப்பொ ஸரி, ஸ்நானம் பண்ணிப்பிட்டு வர வழியிலே சின்னக் கடைத் தெருவிலே ராமனுஜஞ் செட்டி கடை தெரியுமோல்லியோ, அங்கே வாங்கலாம், நாணயமாயிருக்கும்.

[ராமநாதையர் ஆற்றை நோக்கிப் போகிறார். பிச்சுக்குப்பன் சுந்தரப்பையருக்குக் கண்ணடித்து விட்டு உள்ளே போகிறான்.]

---

காக்ஷி 4.

[கூடத்தில் பேபர் பார்த்துக் கொண்டிருக்கும் கலியாணமையருக் கருகாமையில் ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு காவேரியம்மாள் நிற்கிறாள். ஏதோ ஆத்திரமாய்ப் பேசிக் கொண்டிருந்தாப் போல் படுகிறது முக ஜாடையைப் பார்த்தால். பிச்சுக்குப்பன் இது நோட்டம் தெரிந்து கொண்டு, சின்னத் திண்ணையில் இருக்கும் சாமான்களைப் பார்த்து]

பி.—என்ன, அம்மாமி, மாட்டுப் பொண்ணுக்கு உலுப்பெ வந்திருக்காப்பிலேருக்கு!

கா.—ஆமாம், வாரி வெய்க்கரத்துக்குப் பாத்தரந்தான் இல்லை. ஐயர்வாள் தாம்பாளங் கொண்டரச் சொல்லி உத்தரவு பண்ணிப்புட்டார், என்னவோ சொன்னாளாம், கொட்டாங்கச்சி நெல்லு கமுக்கட்டையில் அடுக்குன்னு.

பி.—ஓகோ, அதுக்குத்தான் தாம்பாளம் வாங்கப் போராரா ஸம்பந்தி அவ்வளவு அவஸரமா? புரிஞ்சுது புரிஞ்சுது.

கா.—அவன் தாம்பாளமும் வேண்டாம், மோறையும் வேண்டாம், இங்கே யெதாவது கொண்டு வந்து வெச்சா எடுத்து நடு வாசல்லே எறிஞ்சுடுவேன். (தன் புருஷனைப் பார்த்து வெகு கடுமையாய்) என்ன, ஒரு நாழியாச் சொல்ரேன், வாயடச்சுக் கடக்கே. இந்த அதிசயமான சம்பந்தியெப் பொடச்சுட்டமேன்னு அகமகிழராப்பிலேருக்கு! நங்ங மிங்ஙங்க வாண்டாம். அந்த மனுஷன் வந்தாக்கே, கலியாணத்தும் போது போடரேன்னு சொன்ன கடுக்கனுக்கும் அரணாளுக்குமா 150 ரூபா பணத்தைக் கீழே வச்சா குத்துச் செங்கலேறட்டும், இல்லாட்டாப் பொண்ணை யழச்சுண்டு அடுத்த ரயிலுக்கு நடந்துடட்டும், அனாவசியப் பேச்சு வாண்டாம்.

[தன் தாயாரின் கர்ஜனை காதில் விழவே, நடராஜன் திண்ணையிலிருந்து உள்ளே வருகிறான். ரேழி நடையில் நின்று கொண்டிருக்கும் பிச்சுக்குப்பன் அவனைப் பார்த்ததும், வினயமாய் மத்தியஸ்தம் பண்ணுபவன் போல்]

பி.-கோவிச்சுக்காதேயுங்கோ, அம்மாமி, நல்ல மனுஷன், கையில் இல்லா தோஷந் தானே யொழிய கொடுக்க வாண்டாங்கர எண்ணமிருக்காது. அவாவாளுக்கு தங்க பொண் மாப்பளைக்குச் செய்யரத்துக்கு பொறத்தயார் சொல்லணமா? ஆனால் நடராஜனுக்குக் கடுக்கன் போட்டா நன்னாத்தானிருக்கும். அதுவும் வைரமாயிருந்தா ரொம்ப நன்னா எடுத்துக் காட்டும்.

கா. கொறச்சலில்லே! ஒரு பத்து வராகன் சேப்புக் கடுக்கனுக்கும், 6 பவுன் அரணாளுக்கும் வழியெக்காணுமாம், மாசம் பதினெட்டாச்சு, வைரக்கடுக்கனுக்குப் போக வேண்டியது தான்!

நட.—கடுக்கனில்லேன்னு ஒங்கிட்ட இப்பொ ஆரு பிராது கொடுத்தா?

கா.—அப்பா, நீ எங்கிட்டப் பிராது கீது கொடுக்க வாண்டாம்டா! நாம் பிராதெக் கண்டேனா இன்னொண்ணைக் கண்டேனா? அதெல்லாம் தினம் போது விடிஞ்சா முன்சீப் கோட்டு வாசல்லே கட்டுங் கையுமா நிக்கறவாளுக்குன்னா தெரியும், பொய்ச்சாக்ஷி சொல்ரதும், பொய்ச் சத்தியம் பண்ரதும் ஆஷாட பூதியாட்டமா வேஷம் போட்டாச் சரியாப் போச்சா!

நட.—நான் என்னமோ சொன்ன நீ என்னமோ சொல்ரயே. இப்பொ ஆரு பொய்ச்சத்தியம் பண்ண வந்து நிக்கறு ?

கா.—ஏன், ஒங்க பணக்கார மாமனர் தான், ஏக போக மிராசு ராமநாதையர் வாள். வயசுலே 18 வயசான பொண்ணெ, கோர்க்காலியாட்டமா, வெச்சுண்டு, ஙிய்யா ஙிய்யா கொட்டி அதெப் பண்ணிப் படறேன், இதெப் பண்ணிப்படறேன், காட்டெக் கட்டிப்படறேன், மோட்டெ வெட்டிப்படறேன்னெல்லாம் வா குளுரச் சேதி சொல்லி, இந்த அம்மண்டுவை (மரியாதையாய், பேபரில் அமுங்கியிருக்கும் தன் கணவனைப் பார்த்து) ஏமாத்திப் புட்டு, பொண்ணெக் கொண்டு வந்து என் தானந்தரமான கொழுந்தெ கழுத்திலே கட்டிப்புட்டுப் போனனே, அந்தத் தலப்பு மாத்துக்காரன் !

நட.—போகட்டும், எனக்காக நீ கரைய வாண்டாம். நீங்கள்ளாம் சம்மதப்பட்டுத் தானே கலியாணம் பண்ணினேள் ?

கா.—பண்ணின? சொன்ன பேச்சுப்படி நடக்க வேண்டாமோ? அதுன்ன மனுஷத்தனம் !

பி.—ஏதோ, ஸம்ஸாரிகளுக்குச் சௌகரியம் மின்னப்பின்னே இருக்கறது தான். மாஸச்சம்பளம் வாங்கரவாளுக்கே பணந் தட்டுக் கிட்டுப் போறது. நம்ம சுந்தரத்தைப் பாருங்கோ.

கா.—(அவசரமாய்ப் பேச்சை மாற்ற) ஆமாம், வேணுன்ன வேலிலேயுங்காய்க்கும். எதுக்குக் குடுக்கணும், ஏச்சுப்புடுவோமேங்கரதுதான்.

நட.—(கொஞ்சம் கோபமாய்)—லோகத்திலே நம்மெத்தவிர எல்லாரும் கெட்டவாள் அயோக்கியாள்னு எதுக்கெண்ணனும்? இந்த வருஷங் காச்சல்லே நம்ம ஜில்லா முழுக்கத்தான் வளச்சலில்லேயே, மிராசுதாருக்கு வெரைதசுகூலிக்கும் வாயிதாவுக்குமே வழியில்லேயே.

கா—அடியம்மா ரொம்ப ஒபதேசம் ஏறிப்போச்சுடியோ! ஏது, இன்னும் 6 மாசம் போன எங்க ரெண்டு கெழத்துக்கும் சோறுகூட இல்லேன்னுடுவயோ என்னவோ

[என்று அழும் குரலில் சொல்லிக் கண்ணீருதுக்க ஆரம்பிக்கிருள்.]

நட.—கன்னப்பின்னனு பேசாதே. நீ எதெவாண பண்ணிண்டு போ, எனக்கென்ன? எனக்குக் கடுக்கங்கிடுக்கன் வாண்டாம். அதெத் தான் சொல்ல வந்தேன்.

[காவேரியம்மாள் துக்கம் வலுக்கிறது, விம்மியழ ஆரம்பிக்கிருள். கலியாணமையர் தூக்கம் விழித்தெழுந்தவர் போல், பேபரைக் கீழேயெறிந்துவிட்டு பிள்ளையாண்டான் மேல் சீறி விழுகிருர்.]

கலி.—என்னடா ரொம்ப பெரிய மனுஷனய்ப் போயிட்டதாக எண்ணமோ? ஏட்டிக்குப் போட்டி பேசறயே?

நட.—(அழமாட்டாக் குரலில்) நான் என்னத்தெச் சொல்லிப்பிட்டேன் எனக்குக் கடுக்கன் வாண்டாம்னுதானே சொன்னேன். அம்மா வேணுமானல் அவரை ஒரு தோடு வாங்கிக் குடுக்கச் சொல்லிப் போட்டுக்கட்டுமே !

கா.—போகட்டும், எனக்கு 50 வயசுக்கு மேலே சம்பந்திகிட்ட லொங்கி தோடு வாங்கிப் போட்டுக்க வேண்டியதுதான் ! அப்பா, எங்காது மூளியில்லேடாப்பா. மூளியாகணம்னு ஒம்மனசிலே இருக்கோ என்னவோ ? (தன் மாங்கலியத்திற்குக் குறை வந்து விடுமோவென்ற வெண்ணத்தையே தாங்காதவள்போல், இன்னும் கொஞ்சம் வேகமாய் கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு) எங்கப்பா என்னைப் புக்காத்துக்கனுப்பறபோது காதிலே கழுத்திலேல்லாம் போட்டுதான் அனுப்பிச்சார்.

நட.—தெரியுமே எனக்கு, மீன காதிலே போட்டிருந்தயே அரக்குச் களம்பியிருந்த தோடு, ஒன் சீதனம் !

கலி.—(ஆவேசம் வந்தவர்போல் ஒரு குதி குதித்துக்கொண்டு) அடே அதிகப் பிரஸங்கி! என்ன ஒண்ணும் தலைகால் புரியல்லெப் போலேருக்கு ? பத்து ரூபா சம்பாதிக்க வழியெக்காணும், பேச்சு மட்

டும் திமிரிலே கொறைச்சலில்லே. நாயே, ஒழுங்கா பெரியவா சொல்ர பேச்செக் கேட்டுண்டு மரியாதையா யிருக்கறதா யிருந்தாயிரு, இல்லாபோனு இந்த நிமிஷம் கிளம்பு வெளியே ஓம் பொண்டாட்டியெ அழச்சுண்டு....

பி.—அண்ணண்ணு, என்ன இப்படிக் கோவிச்சுக்கரேளே. அவன் என்னவோ செறு பையன் சலுகைலே சொல்லிப்பிட்டான்னு, அதெ நீங்க காதிலே போட்டுக்கலாமா? வாப்பா, நடராஜா, அப்பா அம்மால்லாம் ஓன் க்ஷேமத்தைத்தானே கோர்ரா. இது தெரியவேண்டாமா ஓனக்கு?

---

காக்ஷி 5

[ஒன்றும் பதில் சொல்லாமல் தலையை ஆட்டிக்கொண்டு நடராஜன் வெளியே போகிறான். ராமநாதையர் ஸ்நானம் பண்ணிவிட்டு, ஈர வேஷ்டி தோளிலும், ஒரு கையில் மடிஸஞ்சியும், இன்னொரு கையில் பிடித்த இரண்டு புதுப் பித்தளைத் தாம்பாளங்கள் கக்ஷத்தில் இடுக்கினபடியும் எதிரப்படுகிறார். அவரைப் பார்த்ததும் தன் தாய் தகப்பன்மேலுள்ள ஆத்திரத்தை அவர் மேல் தாக்கி,]

நட.—ஓம்ம பொண்ணே அழச்சுண்டு இந்த நிமிஷமே வெளியேறும், ஓமக்கு சூடு சொரணேயிருந்தால்,

[இந்த வார்த்தைகளைக் கேட்டு ராமநாதையர் பிரமித்து நிற்கிறார். பிச்சுக்குட்டன் இதுதான் சமயம் என்று கண்டு, அவர் கிட்டச் சென்று கண்ணைக் காட்டிக் கூப்பிடுகிறான். அவர் பொம்மை போல் அவனைப் பின்தொடர இருவரும் குடியிருப்பில்லாத அடுத்த வீட்டுத் திண்ணையில் போய் உட்காருகிறார்கள். நடராஜன் மறுபடி திண்ணையில் படுத்துவிடுகிறான். சுந்தரமையர் இருந்த விடத்தை விட்டு நகராமல் நடக்கும் விஷயங்களைக் கூர்ந்து கவனிக்கிறார்.,]

ரா.—(பரபரப்புடன்) என்னப்பா நடந்தது? மாப்பிள்ளே இவ்வளவு கோவமாய் நான் பாத்ததேயில்லேயே? எல்லாருமே ஒரு தினுஸாயிருக்காளே, என்ன காரணம்?

பி.—காரணமா! அவலே நெனச்சுண்டு ஓரலேயிடிக்கிறதுதான். நீங்க, மாமா, பொரந்த மேனிக்கிப் போரேள், அப்படியெல்லாரும் போராளா?

ரா.—என்ன, நீ சொல்ரது ஒண்ணும் புரியல்லேயே. மாப்பிள்ளேக்கி அவ்வளவு ஆத்திரம் ஏன்?

பி.—ஐயோ பாவம், அவன் நல்ல பையன். ஆனு, அவன் என்ன பண்ணுவான். அவ அம்மா நீலி படுத்தரபாட்டிலே அவன் நடுங்கருன். அவ அப்பா ஜடம் ஒண்ணிருக்கே, அதுவும் சரிதான் இந்தத் தூணுஞ் சரிதான். அவள் நில்லுன்னு நிக்கரது, ஒக்காருன்னு ஒக்காரரது.

ரா.—லோகத்தில் பொகுபேர் அப்படித்தான் இருக்கா.—அவாளுக்கு இத்தென கோவம் வரத்துக்கு நான் என்ன பண்ணினேன்னுதான் தெரியல்லே.

பி.—என்ன மாமா, ஒலகத்து அனுபோகம் இல்லாதவா போலப் பேசரேளே! பொண்ணெக் குடுத்தவா எப்போதும் மட்டந்தானே. அதுவும் கொஞ்சம் சௌகரியமா யிருக்கிறவாளா யிருந்தா அவாளேப் புடிச்சு ஆட்டிவெச்சாத்தானே பணத்தைக் கரக்கலாம்.

ரா.—(வருத்தத்தையும் வெறுப்பையும் குறிக்கும் சிரிப்புச் சிரித்துக்கொண்டு) போகட்டும், ஊரார் நம்மை மதிப்பா நினேக்கிரதும் பாக்கியந்தான் — அதிருக்கட்டும், நாள் கிழமைக்கி ஏதோ என் கையில் ஆப்பட்டதைச் செஞ்சுண்டு தானே யிருக்கேன். இப்பொ கார்த்திகைக்குக்கூட குருவெ நெல்லு விக்கல்லே, அக விலே ரொம்ப மட்டமாயிருக்கு, வெளச்சலும் ஸ்வாரஸ்யமில்லே. ஏதோ அங்கேயிங்கே வாங்கி நல்ல நாளிலே கொழந்தெ கண்ணெ கசக்கப்படாதுன்னு ஏதோ பக்ஷணம் பாடியெப் பண்ணிண்டு வந்தேன்.

பி.—மாமா, இதெல்லாம் கடப்பாரையை முழுங்கிப்பிட்டு சுக்குக் கஷாயம் சாப்படராப்பிலே தோணரது எனக்கு. நீங்க

இவ்வளவு நல்லவளாயிருக்கரத்துக்கு இந்தப்பரதைகளிண்டே வந்து மாட்டிண்டிருக்க வாண்டாம். அவ்வளவுதான் சொல்லுவேன். ஓங்களை ஆலக் கட்டி நீளை இழுப்பாபோலேருக்கு.

ரா.—என்ன சுத்திச் சுத்திச் சொல்லறயே, விஷயத்தைச் சொல்லேன். சும்மாச் சொல்லு, ஏதாயிருந்தாலுந் தெரிஞ்சு கொள்ள வேண்டியதுதானே.

பி.—இல்லெ, நீங்கள் ஸ்நானம் பண்ணப் போயிருந்தபோது, ஏதுரா வந்த பெரிய மனுஷனெ வான்னுகூடச் சொல்லல்லியே என்ன காரணம்னு, அவா உள்ளே பேசிண்டிருந்ததெ கெவனிச்சேன். அந்தம்மா பத்திரகாளியாட்டமாக் களம்பிட்டாள். நீங்க கலியாணத்தும்போது ரூ. 150க்குக் குறையாமல் கடுக்கனும் அரணும் போடறேன்னு சொல்லி ஏச்சுட்டேளாம். "ரூ. 150 பணம் எண்ணிக் கொணந்து வெய்க்காபோனா எம்பேரு காவேரியில்லெ"ன்னு மாருதட்டரா. அந்தக் கெழவனும் எம்பி எம்பிக் குதிக்கிறான். புள்ளெ என்ன பண்ணும், அடங்கின புள்ளெ, ஏதாவது சொன்னா வீட்டெவிட்டு வெரட்டிப்புடுவா. அவனோ பி.ஏ. பாஸ் பண்ணிப்புட்டு வீட்டிலே ஒக்காந்திருக்கான் வேலையில்லாமெ. பொண்டாட்டியெ வேரே கழுத்திலே கட்டியாச்சு, எங்கே போவான்.

ரா.—இதென்ன விசித்திரமாயிருக்கே! கலியாணத்தும்போது அவா கடுக்கன் அரணை போடணும்னு சொன்னது வாஸ்தவம் தான். நல்லதாய்ப் பாத்து வாங்கணும், தீபாவளிக்குள்ளெ பாத்து வாங்கிப் பிடறேன்னு சொன்னேன். அது சரிப்படாது, நாங்க பாத்து வாங்கிக்கிறோம், பணமாக் குடுத்துடுங்கோன்னு சொன்னா. ரூபா 150 கொடுத்துட்டேனே. மறுபடியும் எங்கேயிருந்து வரும்? புடிக்குப்புடி நமச்சிவாயமா?

பி.—அதுவும் அப்படியா? ஆமாம், நான் கூட நெனேச்சேன். அவா சொல்லறபடி, நீங்க ஆட்டம் போடறவாளாத் தோணல்லயேன்னு. சரி, இப்பொ என்ன பண்ணிக்கிறது. பணம் வாங்கி ஜரிச்சுப் போச்சுத் நகை வாங்கல்லே. போராத்துக்கு ஆடி, ஆராமாஸம், ஸ்தாலிபாகம் ஒண்ணுக்கும் சரிவரக் கூப்பிட்டு மரியாதை செய்யல்லையாம், மொழ நீளம் ஜாப்தா அடுக்கிறா அந்தம்மா, இந்த ஸமயம் நீங்க செலவாயிடறதேன்னு யோசிக்காமே ஏதாவது கை நிறையச் செய்தாத்தான் சும்மாயிருப்பாபோலேருக்கு நூறு, இருநூறுவது—

ரா—ஐயோ, நூறுக்கும் இரு நூறுக்கும் நானெங்கே போவேன். ஏதோ காதிலே வைரக் கடுக்கனும் இடுப்பிலே சேலம் வேஷ்டியுமிருக்கே, பணம் ஏராளமா மூட்டெ கட்டிவச்சிருக்கணுமனு நெனெக்கிறயோ? போன வருஷம் கலியாணத்துக்காக வாங்கின கடனுக்கு வட்டி கூடக் கொடுக்கல்லே, நோட்டு எழுதிக் குடுத்துட்டு வந்தேன்.

பி.—ஒங்க குட்டாளிகிப் பணத்துக்கென்ன பஞ்சம்? ஒதட்டையசக்கிறைக் கிறல்லே ஆயிரரூபா வாணாலும் கொடுக்க ஆயிரம் பேர்—ஆமாம், வைரக்கடுக்கன்னதும் ஞாபகம் வந்தது. நீங்க போட்டிருக்கறது நல்ல டாலாயிருக்கு, என்ன விலை? மாப்பிள்ளை நடராஜனுக்கு இந்த மாதிரி ஒரு கடுக்கன் போட்டா ரொம்ப சோபையாயிருக்கும்.

ரா.—இருக்குந்தான், நான் எங்கே போக? இது பெரியவா காலத்துக் கடுக்கன், ஏழுதலெமொறையா எங்காத்திலேயிருக்கு, வெலையை ஆரு கண்டா. பழைய காலத்துக் கட்டடம். இப்போ புதிசு புதிசா வந்திருக்கு, இதெல்லாம் எடுக்காது. ஆனா எங்களுக்கு இது வெலையில்லா வஸ்து. இந்தக் கடுக்கன் தான் குடும்பத்துக்கே அதிர்ஷ்டம்னு எங்க பாட்டி வாய்க்கு வாய் சொல்லுவள்—ஒரதிருஷ்டத்தையுங்காணேன். ஆனா ஏதோ ஸ்வாமி கிருபையிலே வயத்துக்குப் பசிக்காமெ மானமாக் காலந்தள்ளறோமே.

பி.—அதுதான்னா வேணும், வேறென்ன. அதிர்ஷ்டம் அதிலேயுமா இதிலேயும் ஒட்டிண்டிருக்கு, தன் நிழல் தன்னோடே வரது—சரி, அப்புறம் என்ன யோசனைப் பண்ணறேள்? அடடா, மறந்துட்டனே,

மணி 3 ஆகரது, இன்னும் சாப்பிடாமே ஒக்காந்திருக்கேளே. அந்த ராக்ஷஸி படுத்தரபாட்டிலே அந்த வீட்டிலே யாரு கேக்கப் போரா. வாருங்கோ, காப்பி ஹோட்டலில் காப்பியாவது சாப்பிட்டு வரலாம்.

ரா.—(சிரித்துக்கொண்டு) வாண்டாமப்பா, சம்மந்திவிருந்து எனக்கு வயரு சாப்படாமலே ரொம்பிப் போச்சு.

பி.—அதுகள் கடக்குன்ன, அசடுகள். அதுக்காக வருஷத்துக்கொரு நாளு மதுவுமாப் பட்டினி கடக்கவாவதுன்ன?

ரா.—பட்டினி யொண்ணுமில்லே. காலமே ஊரைவிட்டுக் கிளம்பும்போது பலகாரம் பண்ணிக் காப்பி சாப்பிட்டுதான் வந்தேன். நான் சாப்படாதிருக்கட்டும், மேலே பண்ணறதென்ன? எனக்கொண்ணும் புரியல்லியே.

பி.—எனக்கொரு யோசனை தான் தோண்றது. ஏதோ வழிலே போறவன் வாய் புளிச்சுதா வாழப்பழம் புளிச்சுதான்னு பேசிப்பிட்டுப் போறுன்னு நெனைக்காதேயுங்கோ. என் ஸ்வபாவம் பண்ணிப்பிட்டா அஞ்சு நிமிஷம் ஒத்தரண்டே ஸ்நேஹம் அவாளுக்கு நம்மாலே முடிஞ்சதெச் செய்யணும்னு எண்ணறதுதான். என்ன, பணத்தாலே காசாலே செய்யப்போறேமா? ஏதோ தேகத்தாலேயோ வாக் ஸஹாயமோ செய்யறத்திலே என்ன நஷ்டம்?

ரா.—ஆமாம், நீ என்ன சொல்றே?

பி.—நான் சொல்லப் போறது ஒங்களுக்குக் கொஞ்சம் வருத்தமாயிருக்கலாம். ஆனல் வேறேயென்ன பண்ணறதுன்னு புரியல்லே—இந்தக் கடுக்கன் நீங்க போட்டிண்டிருக்கேளே, அதை மாப்பிள்ளைக்குப் போட்டுடுங்களேன். (ராமநாதையர் திடுக்கிடுகிறார்) பணம் கிராக்கியாயிருக்கர காலத்திலே நூறு இருநூறுன்னு ஒப்பொ வாங்க வேண்டியதில்லே. அந்தப் பரதைகளுக்கும் திருப்தியாப் போயிடும். மாப்பிள்ளைப் பையனுக்கும் போட்டால் நன்னயிருக்கும், அதுதான் முக்கியமாய் நான் யோசிக்கிறது. ஊருக்குப் போனல் அம்மாமிகூட நீங்க செய்தது சரிதான்னு ஒப்புக் கொள்ளுவாள்னு நெனைக்கிறேன்.

ரா.—(ஏதோ ஆழ்ந்தயோசனையில் இருந்தவர் போல் சற்று மௌனமாயிருந்து) பொம்மனாட்டிகளுக் கென்ன, வீட்டிலிருக்கிறதை வாரிப் பொண்ணுக்குச் சாச்சுப்பிட்டா திருப்திதான். அவதான் கலியாணம் ஆனது மொதல் இந்தக் கடுக்கனை மாப்பிள்ளைக்குப் போட்டுடணும்னு ஒத்தக் காலிலே நிக்கறளே. கலியாணத்தும் போதே போடணும்னு குதிச்சா.

பி.—'ஓகோ, அப்படயா சங்கதி, பழம் நழுவிப்பாலிலே விழுந்தாப்பலே ஆச்சு' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு, வெளிப்படையாய்)—அப்படியே செஞ்சிருந்தா, ரூபாய்க்கு ரூபாய் மிச்சம் ஸபைக்குப் பெருமையாயுமிருந்திருக்கும்.

ரா.—பெருமைக்கென்ன, எல்லாம் பணத்தைக் குடுக்கர பெருமைதான். பணம் ஆப்படற வழியெத்தான் காணும்.

பி.—மறுபடியும் பணம், பணம் இங்கிரேளே. நான் தான் பணம் குடுக்காத வழி ஒண்ணு சொன்னேனே.

ரா:—நல்ல வழி! 200 வருஷமா வீரப்பட்டி சாம்பையன் கும்பலிலிருந்த கடுக்கனைக் கழட்டிக் குடுத்துடச் சொல்லறயே! எனக்கும் கடுகத்தனை புள்ளையிருக்கு, ஆயிரம் வியாதியும் வெக்கையுமா, அது நன்னயிருக்க வாண்டாமா?

பி.—மாமா, முன்னயே சொன்னேனே, என் பேரில் காண்டுப் படாதேயுங்கோன்னு. நீங்கள் எப்படிச் செய்தால் எனக்கென்ன? ஏதோ, ஒங்க நல்ல சுபாவத்தையும் அவா கூத்துக்கட்டி அடிக்கிறதையும் பாத்து எனக்குத் தெரிஞ்ச யுக்தியைச் சொன்னேன்.

ரா.-கோபிக்காதே, அப்பா, நீ சொன்னதில் எனக்கு வருத்தமில்ல, தலைமுறைதத்துவமா வந்த நகையைக் குடுக்கறதுன்ன மனசுக்குச் சங்கடமாயிருக்கு.

பி.—யாருக்குக் குடுக்கப் போறேள்? மாப்பிள்ளைக்குத்தானே. மருமகனுக்காக் கின சோத்தை மகனுக்கிட்டு வயித்தெரிஞ் சாளாமுன்னு ஒலகவழக்கு. மருமகனுக்கு கொடுப்பதைப்பத்தி இப்படி வருந்து வாளோ?

ரா.—எனக்குப் பிள்ளையும் மாப்பிள்ளையும் எல்லாம் ஒண்ணுதான். இருந்தாலும் —(கண்ணில் ததும்பி நின்ற ஒரு சொட்டு நீரை இடது கைவிரலால் சுண்டியெறிந்து, மூக்கைச் சிந்தி, ஒரு கனைப்புக் கனைத்துக் கொண்டு)—ஏதோ நடக்கறது நடக்கட்டும், நல்ல வேளையாக் கிழவியில்லையே. அவளிருந்தால் ஆயிரங்காலத்து ஸாமான் வீட்டை விட்டுப் போகச் சம்மதிப்பாளா? (என்று சொல்லித் தன் பெண் கலியாணத் துக்கு முதல் வருஷம் இறந்து போன தன் தாயை நினைத்துக் கொண்டு சிறிது நேரம் சும்மாயிருக்கிறார். பிச்சுக்குப்பனும் அவரிடத்திலே ரொம்ப அனுதாபங் காட்டுபவன் போல் மௌனம் சாதித்து விட்டு)

பி.—அப்போ, நான் சொன்ன யோஜனை சரிதானே.

ரா.—வேறென்ன பண்ணறது. ஒன் னிஷ்டம் போல் செய்.

பி.—மாமா, அந்த வார்த்தையைத் தான் சொல்லப்படாது. நீங்கள் என் பேரிலே வருத்தப்படறதாயிருந்தால் நான் கிட்ட வேவரல்லை. எனக்கேன் ஒடம்புக் கொழுப்பு?

ரா.—அட, உன்னையொண்ணுஞ் சொல்லல்லையப்பா. என் வினையெ நொந்துக் கறேன், அவ்வளவுதான். சரி, நாழியாகறது, சாயந்திரம் நாலுமணி ரயிலுக்குப் போகணும். நீ சித்தெ அவாளைக் கேட்டு, கடுக்கனை வாங்கிக் கொள்ள சம்மதம் தானான்னு தெரிஞ்சு சொல்லேன்.

பி.—சம்மதமில்லாமெ யென்ன, பினதிக் கழுதைகள்! யாருக்கு வேண்டியிருக்கு! ஏதோ ஒங்களைப் பார்த்தால் அங்கலாய்ப் பாயிருக்கேன்னு இதிலே தலையிட்டுக் கிண்டேன். சரி, நான் உள்ளே போய் அதுகளைச் சரிப்படுத்தி வெய்க்கறேன். பழம் பாக்கு வெத்திலையெல்லாம் மூட்டையிலே தானேயிருக்கு? நான் எடுத்து தாம்பாளத்தில் வைக்கிறேன். அஞ்சு நிமிஷம் கழிச்சு வாருங்கோ.

[என்று சொல்லித் தனக்குத் தெரியாமலே கையை ஒரு சொடுக்குச் சொடுக்கிக் கொண்டுபோகிறபோக்கில் சுந்தரத்திற்குக் கண்ணடித்துவிட்டு உள்ளே போகிறான். ராமநாதையர் மனச்சோர்வுடன் திண்ணையில் சாய்கிறார். 'அப்பா' என்று மெல்லிய குரல் காதில் விழ, திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிறார். அடுத்த சந்திலிருந்து தன் பெண் மங்களம் கையைக் காட்டிக் கூப்பிடுவதைக் கண்டு சரேலென்று அவள் சமீபம் சென்று]

ரா.—அம்மா, ஏண்டி இங்கே வந்து நிக்கறே. அந்த ராக்ஷஸி பார்த்தால் வாயிலே போட்டுண்டுடுவோளே.

ம.—இதுவரைலும் பண்ணினத்தைவிட இம்மே என்ன பண்ணிப்பிடப்போறா? அது கடக்கட்டும். நீங்க இத்தனை நாழி பேசிண்டிருந்ததெல்லாம் கேட்டிண்டிருந் தேன். அந்தக் கழிச்சல்தே போறவன் வார்த்தையைக் கேட்டு கடுக்கனைக் கயட் டிக் கொடுக்காதேயுங்கோ.

ரா.—சே, அப்படிச் சொல்லாதே, பிச்சுக்குப்பன் நல்ல பையன். அவன் என்ன பண்ணுவன், அவாள் சொன்னத்தெச் சொன்னன்.

ம.—அவா, ஒங்கமாப்பிள்ளை, ஒண்ணுஞ் சொல்லல்லே. நீங்க ஆத்தங்கரைக்குப் போனபோது கூடத்திலே சந்தை யெரச் சலாக்கேட்டுது. அம்மாவுக்கும் புள்ளைக் கும் ஏகதர்க்கம். அவா, "எனக்குக் கடுக் கனும் வாண்டாம் ஒண்ணும் வாண்டா" முன்னு சொன்ன, மாமனருக்குப் பரிஞ் சுண்டு பேசரான்னு அம்மாக்காரி ஒப்பாரி வெய்க்க ஆரம்பிச்சுட்டா. ஒடனே மாமனர் இருக்காரே, சாது, புள்ளே பேரிலே எறிஞ்சு விழுந்தார். அதுக்கு அவா ஒண் ணும் பதிலே சொல்லல்லே, விர்ருன்னு வெளிலே போயிட்டா.

ரா.—போகட்டும், அவன் நல்ல புள்ளை யாயிருக்கானே, நம்ம கஷ்ட சுகந்

தெரிஞ்சு, அதுதான் நமக்கு வேண்டியது. (என்று சொல்லிக் கொண்டே முகத்தில் கொஞ்சம் சந்தோஷக்குறியோடு வலது காதுக் கடுக்கனைக் கழட்டுகிருர்).

ம.—ஏன், அப்பா, கடுக்கனைத்தான் நான் குடுக்க வாண்டாமிங்கறேனே, எதுக்குக் கயட்டரேள்? அவாதான் கடுக்கன் வாண்டாமுன்னுட்டாளே.

ரா.—கடக்கு, அவன் தான் போட்டுக் கட்டும், அவன் போட்டுண்டாயென்ன நம்ம கிட்டு போட்டுண்டா யென்ன? பிச்சுக்குப்பன் கூட நடராஜனுக்கு அது ரொம்ப அழகாயிருக்கு மிங்கரான்.

ம.—அய்யோ, அந்தக் குல்லேரி பேச்சை நம்பறேளே, எங்க நாத்தாளுராம்படையானுக்கு ஜோடுதாரீன்னு அவன், ரெண்டு பேருமாச் சேந்துண்டு ஏதாவது லவுன்ஸ் அடிக்கிரத்துக்குன்னு பாப்பன்.

[ராமநாதையர் ஒன்னும் சொல்லாமல் நிற்கிருர். அவர் முகம் பசியாலும் மன வருத்தத்தாலும் வாடியிருக்கிறது. அதை கவனித்ததும் மங்களத்துக்குக் கண்ணீர் வருகிறது.]

ம.—ஏன், அப்பா, காலம்பரல்லேருந்து சாப்படல்லியே, ஹோடல்லேயாவது போய் கொஞ்சம் ஆகாரம் பண்ணிட்டு வரப்படாதா? நீங்க வந்ததும் வராததுமா, நான் எலேயிலே சாதத்தெ வெச்சுக்கிண்டு அப்போ தான் ஒக்காந்தேன், வீட்டுக்கு எஜமானியிருக்காளே, விடுவிடுன்னு உள்ளே வந்து பொண்ணெக் கூப்பிட்டு, “ராஜம், சோத்திலே தண்ணெக்கொட்டு. மணி ரெண்டாகப் போறது (பன்னெண்டு கூட ஆகல்லே) சோத்துக் கடை விரிச்சபடி தான் வழியிலே போற கழிச்சல்லே போறவனுக்கெல்லாம் வடிச்சுக் கொட்டறது தான் வேலையாப் போச்சு”ன்னு சொன்னுள். பொண்ணும் ரொம்ப சுருசுருப்பா ஜலத்தைக் கொட்டிப்பிட்டாள்.

ரா.—அது கடக்குக் கழுதை, சாப்பாட்டுக்கென்ன, ஊருக்குப் போய்ச் சாப்பட்டாப் போறது. நான் நாலு மணி ரயிலுக்குப் போறேன். சமத்தாயிரு, மாசக் கடைசியிலே அம்மாவை வரச்சொல்றேன், பத்து நாளைக்கு ஊருக்கு வந்துட்டுப் போகலா முன்னு அவா கிட்டச் சொல்லி ஒன்னை அழச்சுண்டு வரச்சொல்லி விட்டா, வா.

[என்று சொல்லிக் கொண்டே இடது காதுக்கடுக்கனையும் கழட்டுகிருர். மங்களம் இன்னும் ஜாஸ்தி கண்ணீர் விட்டுக் கொண்டு]

ம.—விடறசேதியேது. ராப்பகலா ஒழைக்கறத்துக்கு அப்பறம் ஆளுன்னு பாத்துவைக்கணும். வேலை கடந்துட்டுப் போகட்டும், ஒடம்புலே தெம்பிருக்கிற வரையில் செய்யரேம், தினம் போது விடிஞ்சா திட்டும், வசவும், அடியும் ஒதையும் தான் பொருக்க முடியல்லே. போராத்துக்கு, வாய்க்கு வாய், விதியில்லாததூன்னும் நாதியில்லாததூன்னும், ஒரு வேளை சோத்துக்கு வழியில்லேன்னும், “தாய் தோப்பனும், தாய்தோப்பன்! இப்பேர்ப்பட்ட தாய் தோப்பனைப் பாத்ததேயில்லை, ரெண்டு ரூபாய்க்கி ஒருதுணியெக்காணும், நல்ல நாள் பெரிய நாளுன்னு”ன்னெல்லாம் என்ன மாலாசு பண்ணருு! அது தானு சொல்லறேன், செஞ்சதுக் கெல்லாம் என்ன நல்ல பேர் வந்துட்டுது, இப்போ போய் 200 ரூ. கடுக்கனைக் கயட்டிக்குடுக்கப் போறேளே. அதுவும், ஏன், அப்பா, வருஷத்துக்கொரு நாளும் அதுவுமா, இன்னிக்கா கடுக்கனைக் கயட்டரது? நீங்க கயட்டிப்பாத்ததேயில்லியே, எண்ணை தேச்சுக்கறபோதுகூட அதைக் கயட்ட மனசு வராதே ஒங்களுக்கு?

ரா.—ஆமாம், எனக்கு இம்மே என்ன வேண்டியிருக்கு, ஏதோ நீங்க எல்லாம் நன்னயிருந்தாச் சரிதான். ‘மாமா’ என்று கூப்பிடும் பிச்சுக்குப்பன் குரல் காதிலே விழ, அவசரமாய்) சரி, நீ உள்ளே போ, ஆராவது வரப்போறு. ஊருக்குப் போய்ட்டு வறேன். எது நடந்தாலும் வாயத்தறக்காதே. எப்பொவுமே இப்படியிருந்துடாது.

[மங்களம் கண்ணைத் துடைத்துக் கொண்டு சந்து வழியே பின்புறமாய் வீட்டுக்குள் போகிருள். ராமநாதையரும் கண்ணைத் துடைத்துக் கொண்டு சம்பந்தி

வீட்டு ஆளோடியண்டே வருகிருர். அங்கே நிற்கும் பிச்சுக் குப்பனைப்பாத்து]

ரா.—சித்தெக் கண்ணையசந்துட்டேன் போலேருக்கு. ரொம்ப நாழியாக் கூப்ப டறையோ ?

பி.—இல்லையில்லே, வாருங்கள் சாமா னெல்லாம் எடுத்துத் தயாராய் வச்சிருக் கேன் (அவர் கடுக்கனில்லாக் காதுகளைக் கண்டு அரைச்சிரிப்புச் சிரித்துக்கொண்டு) நீங்களும் ஏற்பாடாய் இருக்காப்பிலி ருக்கே.

---

காக்ஷி 6

[இருவரும் உள்ளே போகிருர்கள். பேபரில் ஆழ்ந்திருந்த கலியாணமையர் மேலண்டை தாழ்வாரத்தில் விரிக்கப் பட்ட ரத்தின கம்பளத்தின் மேல் பேபரில் லாமல் காணப்படுகிருர். அவருக்கு முன் ராமநாதையர் வாங்கிக் கொண்டு வந்த தாம்பாளங்களில் புடவை, மஞ்சள் குங்கு மம், பழம், பாக்கு வெற்றிலை ஒன்றிலும், வேஷ்டி முதலானது இன்னென்றிலும் வைக்கப் பட்டிருக்கின்றன. சமயற்கட்டு வாசப்படியண்டையில் காவேரியம்மாள் கத்தித்திட்டின போர்வீரன் போல் நிற்கி ருள். வாசற்படிக் குள்புறத்தில் அவள் பெண் ராஜமும் பேத்தி ருக்மிணியும் வழியை மறைத்துக் கொண்டு நிற்கிருர் கள். உள்ளே வரும்போதே பிச்சுக்குப் பன் சம்பந்தியை உபசரிக்கும் முறையில் ராமநாதையரைப் பார்த்து]

பி.—வாங்கோ, மாமா, ஒக்காருங்கோ. (ராமநாதையர் ஒரு புறமாய் உட்காரு கிருர்.)

க.—ஸ்நானம் ஆச்சா ? ஏண்டி, ஐயர் வாள் சாப்பிடல்லே போலிருக்கே, எலே போடலாமா ?

கா. அதையேங் கேக்கரேள். ஒங்க மாட்டுப் பொண் இருக்காளே, ஒரு நாளு மில்லாத் திருநாள், நான் சாப்பிட்டுக் கை யலம்பினதும் அலம்பாததுமா சாதத் திலே தண்ணியெக் கொட்டி வெச்சிருக் காள்.

க.—அசடு!—அது போகட்டும், சட்டுன் னு ஒரு சாதத்தை வடிச்சுக் கொழம்பை வைக்கப்படாதோ ?

கா.—அதுக்குத் துப்பிருக்க வேண்டா மோ ? இதெல்லாமா ஒத்தர் சொல்லுவா! அதுக்கென்ன பண்ணறது, பொண் வளத்த அழகு அது. ஒரு காரியங்கவெ ஒரெழவில்லே, எப்போ பாத்தாலும் சுருட்டிச் சுருட்டிண்டு ஓம் இழுதறதும், பாக்கிப் போது சோப்புப் போட்டு அலம் பறதும், அழகு பண்ணிக்கறதுக்குந் தான் சரியாயிருக்கு. குடும்பக் காரியம் ஒண்ணு தெரியல்லே.

க.—(சிரித்துக்கொண்டு) —அதெல்லாம் நூதனம், ஒன்னெப்போலே மடிஸஞ்சியா யிருக்குமா ?

கா.—ஆமாம், நூதனம்! ஏன், நம்ம ராஜம் இல்லியா, அவளுக்குப் பன் னெண்டு வயசுலே கலியாணம், இந்த நாள்ளே பதினெட்டு, இருவதிலேல்லாம் பண்ணுருளே நாகரீகமா, அப்படிப் பண் ணல்லே. அப்பொவே பம்பரமாச் சுத் துவோ. எல்லாம் புள்ளே பொண்ணு களெக் கொண்டறத்திலேருக்கு.

க.—அதை ஐயர்வாளிடத்தில் சொல்லி என்ன பிரயோசனம்! வீட்டுக்குள்ளே யிருக்கறவாள்ளு கவனிக்கணம்.

பி.—அம்மாமி, நாட்டுப் பொண்ணெ வரச் சொல்லுங்கோளேன். சம்மந்திக்கி நாலு மணி ரயிலுக்கு ஊருக்குப் போகணு மாம், நாழியாகரதே.

க.—ஏன், இன்னிக்கித் தங்கி நாளைப் போகப்படாதோ ?

ரா.—இல்லே, ஆத்தில் ஒத்திருமில்லே, தனி வீடு, ஈரளைக்கு ஆள் கொஞ்சம் வேலைக்கு விட்டிருச்சேன். இப்போ தங்கறத்துக்கில்லே. இன்னும் பத்து நாள் ளே பொம்மனுட்டியை வரச் சொல்ல றேன், கொழந்தையை அனுப்புங்கோ, சங்கராந்திக்கி மின்னேடே கொண்டு வந்து விட்டுடரேன்.

கா.—(தன் கணவனைப் பார்த்துச் சொல் லுபவள் போல)—அதெல்லாம் இப்பொ

அனுப்பச் சரிப்படாது. ஆரு மாசமான பெண்ணெ வீட்டிலே வெச்சுண்டு ஓண்டியாக் கடந்து மாரடிக்க முடியாது என்னாலே.

ரா.—(நயமாக, தீனசுரத்தில்)—பத்து நாளேக்காவது வந்திருந்துட்டு வரட்டும், அஞ்சாறு மாசம் ஆச்சே இங்கே வந்து.

கா.—ஏன், இங்கே வந்திருக்கறது காட்டிலே வாசம் பண்ணாறாப்பிலேயிருக்கோ? இங்கேயிருக்கற வாள்ளாம் சிங்கம், புலி, கடிச்சுப்படறுளாக்கம்! குசாலா அழச்சுண்டு போகட்டும், அங்கேயே வெச்சுக்கட்டும். என் தானந்தரமான கொழந்தைக்கிப் போயும் போயும் அதிசயமா ஆம்படையா தேடி வந்தேளே, பை பையாப் பணத்தெ வெச்சுக்கிண்டு கிளிமாதிரிப் பொண்ணுகள் எத்தனையோ வந்துதே, பாவி, பண்ணப்படாதோ. என்துக்குரி அதிர்ஷ்டம்!

[என்று சொல்லி, வருத்த மேலீட்டால் கண்ணை மறைக்கும் கண்ணீரைத் துடைப்பவள் போல் புடவை தலைப்பால் கண்ணைக் கசக்குகிறுள். இதைக் கண்டு மத்தியஸ்தம் பண்ணுபவன் போல்]

பி.—அது போகட்டும்னு, நடந்தது நடந்து போச்சு. பொண்ணுக்கென்ன, நல்ல அதிர்ஷ்டசாலி. செறுசுதானே, அப்பா அம்மாவைப் பாக்கணம்னு இருக்காதா? ஆனு மாமா விஷயம் தெரிஞ்சவரில்லையா? இங்கே யிருக்கிற சௌகரியம் தான் அவருக்கு தெரிஞ்சிருக்கே. அவர் தான் இப்போ பாத்துட்டார், ஊருக்குப் போய் வேணுமானு அவ தயாரை வரச்சொன்னு நாலு நாளேக்கிருந்து போகட்டுமே.

[என்று சொல்லிக் கொண்டே, ராமநாதையர் இந்த ஏற்பாட்டை ஒப்புக் கொள்ளுவது நலம் என்று விளக்குவது போல் கண் ஜாடை செய்து விட்டு, மெதுவாய்த் தன் காதைத் தடவுகிறுன். குறிப்பை அறிந்து கொண்டு அவரும் மடியில் வைத்திருந்த கடுக்கன்களைக் கையிலெடுத்து வேஷ்டி வைத்திருந்த தாம்பாளத்தில் வேஷ்டியின் மேல் வைத்து சம்பந்தியைப் பார்த்து]

ரா.—அப்பறம் ஓங்கள் சௌகரியம், நான் என்ன சொல்லப் போறேன். கொழந்தை ஏதோ மின்னைப் பின்னை இருந்தாலும் நீங்கதான் வகிச்சுக் கொண்டு போகணும். அசடோ, சமத்தோ, எப்பொ ஓங்காத்துக்கு வந்துட்டாளோ, நீங்கதான் இழுத்து மூடிண்டு போகணும். என்னிடத்திலே ஆயிரங் கொறையிருந்தாலும், அதையெல்லாம் அவளிடத்திலே பாராட்டப்படாது, அவ்வளவு தான் நாங் கேட்டுக்கரேன்.

கா.—அதுக்காக, பொண்ணெப் புக்காத்திலே விட்டுட்டா அப்பறம் ஏன்னு கேக்கறதில்லையா? நல்ல நாள் பொல்லா நாள் கூடக் கடையாதா?

ரா.—அப்படி நான் ஒண்ணும் தவருதலாக நடக்கல்லியே. ஏதோ அப்பப்போ பொன் வைக்கர இடத்திலே பூ வெச்சுண்டு தானேயிருக்கேன். (சற்று தயங்கி, மறுபடி சம்பந்தியைப் பார்த்து) நான் கலியாணத்தின் போது சொன்ன வார்த்தைப்படி நடக்கல்லேனு சொன்னீளாம் கடுக்கன் அரணுளுக்காக அப்பவே ரூபா 150 கொடுத்துட்டேனே.

க.—(வெகு கோபமாய்)—ஓய், என்னங்காணும் புரிச்சுக் கட்ட ஆரம்பிச்சுட்டீர். 150 ரூபாய் கொடுத்துட்டீரே அதிசயமாய், அதிலே பேர் வெட்டி யிருந்துதோ? ரூ. 3000 கலகலன்னு கொணந்து கொட்டினுங்கணும், வாண்டாமுன்னேன், என் புத்தியெ செறுப்பாலடிக்கணும், ஏதோ ஸம்ஸாரியாயிருக்கிரே, பிரத்தியார் சுகம் துக்கம் தெரியும்னு நெனைச்சேன். பொண்ணும் நமக் கடங்கின சரக்காயிருக்கும்னுன்னு பண்ணினேன். என்னவோ நூத்தம்பது ரூபா கொடுத்துட்டேன்னு பீதிக்கிறீரே, புள்ளையாராட்டமா அப்படியே இருக்கும், இல்லா போனு குட்டிபோடும், மாப்பிளை மாடி வீடுகட்டலாமுன்னு நெனைச்சீரோ? அதுக்கெல்லாம் எங்கேயாவது ஓரியாயிருக்கிற புள்ளையைப் பாத்துக் கொடுத்திருக்கணும்.

ரா.—(இந்த ஆத்திர வெள்ளத்தில் தடுமாறிப் பெற்றேன் பிழைத்தேன் என்று கரை கண்டவர்போல்)—நான் ஒண்ணும் வித்தியாஸமாச் சொல்லல்லியே, இவ்வளவு கோபம் கோவிச்சுக்கிரீளே. கடுக்கன் அரணுளுன்னு சொன்னதால் அதுக்குப் பணம் கொடுத்துட்டேனேன்னு சொன்னேன். அது தப்புன்ன மன்னிக்கணும்.

க.—ஆமாங்காணும், கலியாணத்திலேருந்து இன்னித் தேதிவரையில் எவ்வளவோ பிரகிருதங்கள் நடந்திருக்கே, அதுக்கெல்லாம் எங்கள் அந்தஸ்துக்குத் தகுந்தபடி என்ன பண்ணினீர்? இன்னைத்தாரான என்னென்னவோ பண்ணியிருப்பா, அதெல்லாம் நமக்கழகில்லேனு நான் பேசாமே யிருந்தா ஏதோ ஏமாந்தவன்னு எண்ணிப்பிட்டாப்பிலேயிருக்கு!

[பிச்சுக்குப்பன் ராமநாதையரைப் பார்த்து வெகு வேகமாய் கண்ணை மூடித் திறந்தும் தலையை அசைத்தும் வேறு ஜாடைகள் செய்தும் அபாய அறிவிப்புப் பண்ணுகிறான். அவர் மனம் ஒடிந்தவராய் எழுந்திருந்து மேல் வேஷ்டியை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு சம்பந்திக்கு சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்து]

ரா.—நான் தெரியாத்தனமாய் ஏதாவது செய்திருந்தாலும் க்ஷமிக்கணும். இந்த ரெண்டு வருஷமாய் விளைவு வெள்ளாமை யெல்லாம் ஒண்ணும் சுகமில்லே, பணத்துக்கு ரொம்பத் தட்டாய்ப் போச்சு. இல்லாபோன எனக்கும் நன்ன செய்யணும்முனு ஆசைதான். கூடக் குறைய இருந்தாலும் நீங்க ஒண்ணும் மனசிலே வெச்சுக்கப்படாது. கையிலே பணமாப் படல்லே. இந்தக் கடுக்கனை மாப்பிள்ளை போட்டுக்கட்டும். எனக்கென்னத்துக்குக் கடுக்கன் இனிமேல்,

[என்று சொல்லி துக்கத்தை மறைக்காச் சிரிப்புச் சிரிக்கிறார். பிச்சுக்குப்பன் 'பேஷ்' என்று சொல்லுபவன் போல் தலையை அசைக்கி ஆமோதிக்கிறன்.]

க.—(ரொம்ப சாந்தமாய்)....ஏன், உமக்கென்ன அப்படிப் பிரமாதமாய் வயசாயிட்டது. ஆனப் பழசு போனப் புதிசு வறது, ஏண்டா பிச்சுக்குப்பா? (என்று விகடமாய்ப் பேசுவதாய் நினைத்துச் சிரிக்கிருர்.)

பி.—ஆமாம், மாமா, அவருக்கென்ன, மகராஜன். அம்மாமி, நாட்டுப் பொண்ணையும் புள்ளெயுங் கூப்பிடுங்கோ. நடராஜன் எங்கே, காணுமே.

கா.—(தன் பேத்தியைப் பார்த்து)—அடி, அவளைக் கூப்பிடுடி (திரும்பிப் பிச்சுக்குப்பனுக்குப் பதில்) ஆமாம், நடராஜன் போரத்தெவரத்தெ எங்கிட்டச் சொல்லிண்டுதான் போரான்! ஏன், இந்த ரயில்லே ஏத்திவந்திருக்கே பிரமாதச் சீரு, இது அவன் நேர வந்து கும்பிடு போட்டு வாங்கிக் கணமாக்கும், எந்த நாளைக் கடுக்கனே, எவ்வளவு எண்ணை எறங்கியிருக்கோ, உலாந்தா பாழைபோறதோ?

ரா.—(மனத்துக்குள்) நாய்க்குத் தெரியுமா நல்ல முத்தின் யோக்கிதை (வெளிப்படையாய்) ஆமாம், வெகு காலத்துக் கடுக்கன்தான்.

[என்று சொல்லித் தன்னையறியாமலே பெருமூச்சு விடுகிறார். மங்களம் சமயல் கட்டு வாசற்படியண்டே வந்து தலை குனிந்து நிற்கிறாள்.]

கா.—பாக்கிப் பேரிடத்திலே நாணலைக் கோணலைக் காணுமே, அப்பாவைக் கண்டதும் வெக்கம் வந்துட்டதோ?

க.—அம்மா, இப்படி வா. அப்பாவுக்கு நமஸ்காரம் பண்ணு.

[பண்ணுகிறாள். பிறகு பாக்கியிருந்த புருஷர்களுக்கும் பண்ணித் தன் மாமியாருக்குப் பண்ணக் கிட்டே அண்டுகிறாள்.]

கா.—போரும் போரும், எல்லாம் பண்ணித்தான் கடக்கு. ஓங்கப்பா குடுக்கறத்தை வாங்கிண்டு உள்ளே போய்க் கொஞ்சம் காப்பி கொண்டா. ரயிலுக்குப் போகணுமாம்.

[மங்களம் அவ்வாறே செய்யத் தன் தகப்பனரண்டையில் போய் நிற்கிறாள். அவர் புடவை முதலியவை வைத்திருக்கும் தட்டைக் கையிலெடுத்து வாய் திறவாமல்

அவளிடம் நீட்டுகிறார். அவள் தலையை நிமிர்த்தி ஒரு நொடி நீர் ததும்பின கண்களோடு அவர் முகத்தை நோக்கி, கையை நீட்டித் தட்டை வாங்கிக்கொண்டு உள்ளே போகிறாள். ஒருவரும் பேசவில்லை. 5 நிமிஷத்தில் ராஜம் காப்பி கொண்டு வந்து எல்லோருக்கும் கொடுக்கிறாள். ராமநாதய்யர் மருந்து விழுங்குவதுபோல் அதை உள்ளே செலுத்திவிட்டு, எல்லோரிடத்திலும் ஸமஷ்டியாகச் சொல்லிக்கொண்டு மடிஸஞ்சியை எடுத்துக்கொண்டு வெளியே செல்லுகிறார். காலடிச் சத்தம் கேட்க, சுந்தரமய்யர் திரும்பி மேற்கே பார்த்துப் படுத்துக்கொள்ளுகிறார். திண்ணைக் கோடியில் நடராஜன் படுத்திருக்கிறான். தூங்குவதுபோல் தென்பட்டதால் அவனிடம் சொல்லிக்கொள்ளாமல் ராமநாதய்யர் கீழே இறங்குகிறார். அவருக்குப் பின்னாலேயே வெளியே வந்த பிச்சுக்குப்பன் சுந்தரமய்யர் முதுகில் ஓங்கிச் சொட்டு வைத்துவிட்டு, திண்ணையில் ஒரு உந்தல் உந்தி அவருக்கடுத்தாப்போல் படுத்துக்கொண்டு, "நம்ம வேலை முடிஞ்சு போச்சு, இனிமே ஒன் ஸாமர்த்தியம்" என்று பூரிப்பாய்ச் சொல்லும் வார்த்தை ரயிலுக்கு நாழியாய் விட்டதென்று விரைந்து செல்லும் ராமநாதையர் காதில் விழுந்திருக்காது.]

---

## அங்கம் II

[அன்றைய சாயந்திரம் 5-மணி சுமார் மூசூர் ரயில்வே ஸ்டேஷன் ப்ளாட்பாரத்தில் ஒரு வாதா மரத்து நிழலில் ராமநாதையர் உட்கார்ந்திருக்கிறார். பிச்சுக்குப்பன் வாயில் வெற்றிலையடைத்து ஒரு கையில் வெற்றிலை மடிப்பும் இன்னொரு கையில் சோட்டாத் தடியுமாகக் காணப்படுகிறான். எங்கேயோ பார்த்துக் கொண்டு வந்தவன் ராமநாதையரைக் கண்டதும் திடுக்கிட்டு அடுத்த நிமிஷம் வெளிப்படையாய்ச் சந்தோஷக் குறியும் உள்ளூரக் குறும்பும் காணும் முகத்தோடு அவரை அணுகிப் பெரிய கும்பிடு போட்டு]

பி.—என்ன, அண்ணா, இத்தனை நாழி ஊரிலேயிருப்பேள்னு நனெச்சேன். ரயில் தவுரிப் போய்ட்டுதா?

ரா.—ஆமாம், என்ன, நீயும் ஊருக்குக் கிளம்பிட்டயா?

பி.—அதென்னத்தைச் சொல்லச் சொல்ரேள். பிறத்தையாருக்குத் தாக்ஷிண்யப் படறவன் பாடு என்னிக்குந் திண்டாட்டந் தான்.

[எதையோ நினைத்துக் கொண்டிருந்த அவர், அவன் சொல்லுவதை மனதில் வாங்காமற் போனாலும், மரியாதைக்காக]

ரா.—ஏன், அப்படியென்ன நேந்துது?

பி.—ஒண்ணுமில்லே, இந்த சுந்தரம், இருக்கான்னோ, தொடகாலிப்பய, அவனெழவுக்காகத்தான் இவ்வளவு அவஸரமாப் போக வேண்டியிருக்கு. நாளைக்கொருகணக்கு தீத்தாகணும், இல்லாத போனா அந்தப் பாவி பேர்லே நம்மூர் ராமகிருஷ்ண செட்டி ஒரு தாவா பண்ணிடுவான்.

ரா.—என்ன ஸமாசாரம்?

பி.—ஒங்களுக்குத் தான் தெரியுமே சுந்தரத்தின் ஸமாசாரம், எங்கே முச்சீட்டாடறாளோ அங்கே அதே நிமிஷம் ஆஜர். கழுகுக்கு மூக்கிலே வேர்க்கறாப்பிலே, போய்த்தாந் தொலையறானே, பேசாமே வேடிக்கை பாக்கப்படாதா? எந்த இடமாயிருந்தாலும் சரி, என்ன மேஜையாயிருந்தாலுஞ்சரி அவனும் ஒக்காந்துடணும் ஒரு கைக்கி அந்த ஆட்டத்திலே. ஒங்களுக்குத் தெரியாததா மாமா, (ராமநாதையர் அதை ஒப்புக்கொள்ளாமல் தலையை அசக்குகிறார். அதைக் கவனிக்காதவன் போலவே) மலைமுழுங்கி மகாதேவனாயிருக்கான் ஒவ்வொத்தன். சரி, நம்ம சுந்தரம் கடுக்கன் (அந்த வார்த்தையைக் கேட்டதும் ராமநாதையர் யரோ தன்னைக் குச்சியால் குத்துவது போல் திடுக்கிடுகிறார்) அரணாள், இடுப்பிலே குண்டஞ்சு வேஷ்டி, டாப்பு ஜெரப்பிலே ஒண்ணுங் கொரச்சலில்லியே,—மாமனார் இருக்கற வரையிலும், மாமனாருக்கு ஒங்களைப் போல எள்ளுங்கறத்துக்கு முன்னாலே எண்ணேனு

சொல்லற நல்ல சம்பந்தி இருக்கறவரை யிலே அவனுக் கென்ன கவலே!—இவ னேக் கண்டதும் அந்தப் பயல்கள்ளாம் ஈ மொய்க்கருப்பலே மொச்சிண்டுடறுன், 'அண்ணு, ஒரு கை' ன்னு உபசாரம் பிர மாதப் படரது, இந்த ஏப்ளாப்பிச்சத் துக்கு உச்சிகுளுந்து போறது. சட சடன்னு பத்து ஆட்டம், கேக்கணுமா, எல்லாம் தோல்விதான், இடுப்புத் துணி தான் மிச்சப்படற வழக்கம்.

ரா.—ஆமாம், இதுக்கும் ராமகிருஷ்ண செட்டி என்னவோ பண்ணப்போறுன் னியே, அதுக்கும் என்ன சம்பந்தம்?

பி.-வந்துட்டேன், அவஸரப்படரேளே! போன வருஷம் நம்மூர் பெரியாத்து சேஷய்யர் பெண் கலியாணம் நடந்து தோன்னே, பிரமாத தடபுடல், 10000 ரூபாய் செலவு. அதிலே, கேக்கணமா, நம்ம "பாய் காட் ப்ரதர்ஸ்" எல்லா ரும் வந்திருந்தா, அகண்ட ஸங்கீர்த் தனம் தான் அஞ்சு நாளும், இஸ்பேட், ஆட்டீன், கிளாவருன்னு. சுந்தரம் முதல் மூணு நாள் அந்தப் பக்கம் வரல்லே, எனக்கே ஆச்சரியமாயிருந் தது. அப்புறம் விசாரிச்சா, அவாப்பாக்கு ஒடம்பு ரொம்பச் சரிப்படல்லே (அப்பறம் ஒரு மாசத்துக்கெல்லாம் அவர் செத்துப் போய்ட்டார், அதான் ஒங்களுக்குத் தெரி யுமே), அவன் விஷயம் அவருக்கு நன் னுத் தெரியுமானதால் அவனே அந்தண் டையின்னண்டை போகப்படாதுன்னுட் டார். நாலா நாள் ராத்திரி ஊர்கோல மோல்லியோ? அதைச் சாக்கு வெச்சுண்டு ராத்திரி முழுக்கக் கச்சேரி போட்டான் கள். ராத்திரி 12—மணியிருக்கும். அவப் பா சித்தெ கண்ணசந்தாப்பிலேயிருக்கு, சுந்தரம் அவருக்கு டிமிக்கி குடுத்துட்டு கூர்ச்சம் மாதிரி வந்து நிக்கறுன். பழைய கதைதான்ரெண்டுநாழிலே. அம்மா அரிசிப் பானேலே வச்சிருந்த 50 ரூபாய் அவளுக் குத் தெரியாமெக் கொணந்துட்டான், அது 'குளோஸ—', ஒடனே காதுக்கடுக்க னெ வெச்சான், அதுவும் போச்சு. பய லுக்கு அறெட்டி கண்டுபோச்சு. ஆட்டத் தைவிட்டு எழுந்தோடிவந்து ஆத்துத்திண் ணேலே படுத்துண்டு அசந்து தூங்கிண்டி ருந்த என்னே வந்து தட்டி எழுப்பினன், 'என்னடா இவ்வளவு அவசரம், நடு ராத் திரிலே'ன்னேன். 'பிச்சுக்குப்பா, நீ தான் என்னேடே கூடப்பொறந்த பொறப்பு என்னெக் காப்பாத்தணும், இல்லாபோனு புள்ளெ குட்டியெ இழுத்துண்டு நான் எங்கேயாவது ஆத்துலே கொளத்திலே விழவேண்டியது தான்னுன். அதெல்லாம் வயத்துப் புள்ளே நழுவுறப்பிலே பேசு வான். எனக்கு அவன் சுபாவம் நன்னுத் தெரியும், என்ன பண்ணறது, பழகின தோஷம், "என்னடா ஆபத்து வந்துட் டுது?" ன்னேன். கடுக்கன் தொலஞ்சு போன விவரத்தெச் சொல்லி, "அதை என் தலயெவெச்சாவது மூட்டாகணும்" (ஒன் தலைக்குக் காலணு யாரு கொடுப்பா?ன்னு எம்மனசிலே நெனச்சுண்டேன்). "போன வருஷம் இந்த மாதிரி ஒரு தரம் ஏமாந்து போனேன். அந்தக் கடங்காரன் அப்பா கிட்ட வந்து "இதைப் பார்த்தேளா, ஒங்க பிள்ளே கடுக்கன். சீட்டாட்டத்தில் தோத் துட்டான்"னு காட்டினன். வந்துட்டுது அவருக்குக் கோவம், அவா தாத்தாமுத் தாத்தா போட்டிண்டிருந்த கடுக்கன் அது. (ஒங்கள் கடுக்கன் மாதிரிப் போலே ருக்கு மாமா, என்று ஒரு விஷமச் சிரிப் போடு இடுக்கோடிடுக்காய் ஒரு ஷராப் போட்டான் இங்கே பிச்சுக்குப்பன். "ரெண்டாம்பேருக்குத்தெரியாமே பொட் டிலேருந்து 200 ரூபா பணத்தையெடுத் துக் குடுத்து அதை மூட்டிண்டு அன்னிக் கே ஒரு உயில் பண்ணி எங்கம்மாக் கப்ப றம் சொத்து ஜாடாவும் சந்தான ராமஸ் வாமி கோவிலுக்குச் சேரதுன்னு எழுதி வெச்சுட்டார். எல்லாம் அவரா சம்பாதிச் சது, உயில் சொல்லும்னுட்டா வக்கீல் எல்லாரும். அம்மா கிட்டே மன்னுடி னேன். அவள் மாசக்கணக்காய் அவரெக் கொழஞ்சாங் கொட்டுக்கொட்டி ஸந்தான ராமஸ்வாமியெ வேண்டிப் பொறந்த புள் ளேக்கிச் சொத்தில்லாமெ அவருக்கு வெச் சா அது அவருக்கே சம்மதமாகுமா ?ன் னு யுக்தியாச் சொல்லி, மெதுவாக் கிழ வனே சரிப்படுத்தினு. அதுவும் உயிலே மாத்தரேன்னு ஒப்புக்கிண்டுது. ஆனு,

"இம்மே சீட்டைக் கையாலே தொட்டா அன்னிக்கே வீட்டை விட்டு வெரட்டிப் புடுவேன், இம்மே மொகாலோபனம் பண்ணமாட்டேன்'னு சபதம் கூறித்து. இப்பொ என்னடா பண்ணுவேன், பிச்சுக் குப்பா! ஆத்துக்குப் போனவுடனே கடுக்கனெங்கேங்குமே?'' ன்னு அழ ஆரம்பிச்சான். இந்தக் கண்டராவியெப் பாக்க முடியல்லே. சாவுக்கார் ராமகிருஷ்ண செட்டி கிட்டப் போய் ப்ராமிஸ்ஸரி நோட்டு இழுதிக் குடுத்து 200 ரூ. வாங்கி கடுக்கனெ மூட்டுக் குடுத்தேன். பல்லெ இளிச்சுண்டு வீட்டுச்குப் போனுன். அவ்வளவுதான்; ஏன்னு கேக்கல்லே, மாசம் 18 ஆச்சு, செட்டி புடுங்கித் திங்கருன். சுந்தரத்துக்கென்ன, அவன் மேலே ரயிலா ஓடறது? நான்னு இழுதிக்குடுத்திருக்கேன்.

ரா.—ஏன், நீ இழுதிக் குடுப்பானேன்?

பி.—இந்தக் காவடிப் பயலே நம்பி செட்டியா குடுத்துடரவன்? நல்ல வேலே பண்ணினேனே! அந்த அய்யரு சமாசாரம் நமக்கு வாண்டாம். நீங்க இழுதிக் குடுக்கறதுன்னச் சொல்லுங்கோ''ன்னன். தலே விதியேன்னு இழுதிக் குடுத்தேன். 10 நாள் மிந்தி நோட்டீஸ் விட்டுட்டான். அவன்தான் என்ன பண்ணுவன், வட்டி காலணக்கூடக் குடுக்கல்லே, இத்தனேக்கும் கொறஞ்ச வட்டி.

ரா.—எவ்வளவு?

பி.—கிரம வட்டிதான்னு, நாத்துக்கு இருவத்தி நாலு.

ரா.—அதுவா கிரம வட்டி?

பி.—(சிரித்துக்கொண்டு)—ஓகோ, ஒங்களுக்குத் தெரியாதா? ஆமாம், கடன் வாங்கினன்னு தெரியும்?

ரா.—அது கடக்கட்டும், இப்பொ பணம் வசூல் பண்ணறத்துக் கென்னபண்ணினே.

[பிச்சுக்குப்பன் இடுப்பில் சுருகியிருந்த வெள்ளிப் பொடி டப்பியை எடுத்து ஒரு சிமிட்டாப் போட்டுக்கொண்டு, அவரிடம் நீட்டுகிறுன். வேண்டாமென்று தலையை யசைத்துக்கொண்டே ஜவ்வுத்தாளில் மடித்த ஒரு சிறு பொட்டணமதிலிருக்கக்கண்டு வயிற்றைச் சொரேலென,]

ரா.—அதென்ன பொட்டலம், பொடி டப்பீலே பந்தோபஸ்தா வச்சிருக்கியே.

பி.—(மறுபடி சிரித்துக்கொண்டு)—அதுதான்னு பணத்துக்கு வழி (என்று சொல்லும்போதே பொட்டணத்தைப் பிரிக்கிருன். தன் கடுக்கன்கள் அதிலிருக்கக் கண்டு ராமநாதையர் பிரமிக்கிருர்.)

பி.—என்ன, மாமா, இடியிடிச்சாப்பிலே ருக்கேளே. ஆமாம், ஒங்க கடுக்கந்தான். அந்த விபரீதத்தை என்ன சொல்லச் சொல்லரேள். நான் மூனு நாளாப் பணத்துக்கு வந்து தொங்கிண்டிருந்தேன். அந்தப் 'பய' எங்கிட்ட பணமேது காசேதூன்னுட்டான். எனக்கின்ன பண்ணறதுன்னு புரியல்லே. சரி, ஊருக்குப் போய் எங்கேயாவது ஏற்பாடு பண்ணி செட்டிக்குத் தொலேக்சுப்பிட்டு சுந்தரத்தும் பேரிலே நடவடிக்கை நடத்தறதுன்னு தீர்மானம் பண்ணினேன். போருமான அசாமிதான், அப்பாதான் செத்துப்பூட்டாரே, சொத்தெல்லாம் வந்துட்டுது. இப்படியிருக்கச்சே, நீங்க வந்தேளா. ஏதோ, ஒங்க ஸ்நேகம் ஆச்சேன்னு சந்தோஷப்பட்டுண்டு, மறுபடி அவனேத் தனிச்சு ஒரு வார்த்தை கேட்டேன். "அப்பா, சுந்தரம், ஒனக்கு ஆபத்துக் கொதவினத்துக்கு இப்படிப் பண்ணறயே இது தர்மமா? ஓம் மேலக்கொல்லேயையாவது இழுதிக் குடேன், நான் அதை வித்துச் செட்டிக்குத் தொலேக்கறேன்''ன்னேன். அதுக்கு இந்தப் பெரிய மனுஷன், "அதெப்படி முடியும்? தலே முறை தத்துவமா வந்த சொத்து. மேலும், மைனர் இருக்கு. எத்தனேயோ புடுங்கல்''னன். " அப்பொ வாங்கின கடன் விட்டுப்புடும்னு நெனேக்கறே''ன்னேன். "ஓ, அவ்வளவு ஸ்தாயிலேருந்தால், ஒன்னலானதொப்பண்ணிக்கோ''ன்னன், அந்தக் காலாடி. என் புத்தியைச் செறுப்பாலடிக்கணம். காக்

கடுதாசி அப்பொவே எழுதி வாங்கிருந்தா இந்தப் போலி வழக்கெல்லாமில்லியோல்லியோ? இப்பொ என்ன பண்ணறது, திருடனுக்குத் தேள் கொட்டினுப்பிலே ஆய்ப்போச்சு, சும்பத்தனத்தை யார் கிட்டே சொல்லிக்கிறது. "ஏண்டா, சுந்தரம், எத்தனெ காலமடா இப்படி மோசம் பண்ணனும்னு நெனச்சுண்டிருந்தே? ஒனக்குப் புள்ளெ குட்டி நன்னுயிருக்க வாண்டாமா?"ன்னேன். 'சுருக்'கின்னுப் பிலேருக்கு, 5 பிள்ளை பொறந்து 6, 6 மாசத்திலே செத்துப்போய், ராமேசுரம் போய் ஒரே கல்லாய் சுவாமியைக் கல்லிப் பொறந்திருக்கு இப்போ ரெண்டு வயசாகிறதே அந்தப் புள்ளை. இதுக்குத் தலையைக் காலை வலிக்கப்போறதேன்னு பயந்துட்டான் ஆசாமி. ரொம்ப சிநேகமாப் பேசறவன் போலே, "வாஸ்தவத்திலே இருந்தாத் தரமாட்டேனு, பிச்சு? பணம் இப்போதிக்கிக் களம்பற வழியெக் கானும். ஒண்ணுவாணுப் பண்ணரேன். ஒரு சாமான் தரேன். அதை வித்து எடுத்துக்கோ"ன்னுன்.

ரா.—அய்யோ, பாவி, இதுக்கா—

பி.—முழுக்கக் கேளுங்கோன்னு. அந்த தப்பிலிப்பய எண்ணத்தெ நாங்கண்டேனு! ஏதோ வந்தவரையில் வரட்டும்முனு, 'சரி, கொண்டா'ன்னேன். 'இன்னும் ஒரு நாழிக்கெல்லாம் தரேன்'னுன். சரின்னு, கடைக்குப் போய் கொழந்தைகளுக்கு ஏதாவது வாய்ண்டுபோவோமுன்னு புறப்பட்டேன். நாலு மணியாச்சு வீடு வந்து சேர, சுந்தரம் வாசக் கொரட்டிலே நின்னிண்டிருந்தான். என்னைக் கண்டதும் சட்டுனு கீழயிறங்கி விடுவிடுன்னு மேற்கேயழச்சுண்டு போனுன். வீடு கண் மறைஞ்சதும் 'இதெப் பாத்தியா'ன்னு கையைத் தறந்தான். ஒங்க கடுக்கன் இருந்துது, ஒரு நாழிமின்னேதானே ஒங்ககிட்டே வாங்கிக் கொடுத்தேன். 'அட, பாவி, இது ஒங்கிட்ட எப்படிடா ஆப்பிட்டுது'ன்னேன். 'எல்லாம் வெசயை முடுச்கற எடத்திலே முடிக்கினுத்தானு வர்ரது. அந்த அசட்டுப் பிராமணன் (இந்த மாதிரி அந்த அயோக்கியப் பயல் ஒங்களைச் சொன்னுன், மாமா) இந்தக் கிழவனும் கிழவியும் படுத்தினபாட்டிலெ கடுக்கனைக் குடுத்துட்டுப் பேர்யிட்டுதா? அந்தக் கிண்ணுரக் கிழங்கள் அதை அமுக்கியுடப் பாத்துது. 'ஒங்க புள்ளேதான் எனக்குக் கடுக்கன் வாண்டாங்கரானே? இது எண்ணெ வேறே எறங்கிருக்கு, பிரிச்சு ஒரு மோதரம் கட்டி வேணுமானு அவனுக்குப் போடலாம். இன்னெண்ணை ஒரு புல்லாக்கா ஒக்கப்பண்ணலாம், நம்ம ராசம் ரொம்ப நாளா ஆசைப்பட்டிண்டிருக்கா'ன்னு எங்க மாமியார். இதை ரேழிலேருந்து கேட்டிண்டிருந்தேன். ஒரு யோசனை தோணித்து. விடுவிடுன்னு கொல்லெ ரேழிக்கிட்டப் போய் "யாருடி அங்கே"ன்னு ஒரு சத்தம் போட்டேன். நம்ம பாய் சாயப்பு 'என்ன'ன்னுள். 'கிளம்பு, ஊருக்கு, ரயிலுக்கு நாழியாச்சுன்'னேன். 'என்ன, ஒங்களுக்குப் பைத்தியங் கியித்தியம் பிடிச்சுப்போச்சா, கார்த்தியும் அதுவுமா, இன்னிக்கிக் களம்பு வாளோ?"ன்னு. பளாருன்னு ஒரு அறை விட்டேன். 'கார்த்திகைக்கு நீ பொரந்தாத்திலே சீராடு, நான் ஜெயிலுக்குப் போரேன்'னேன். அவ அழ ஆரம்பிச்சா. கூட்டங் கூடிப் போச்சு. அவளைக் கரகரன்னு இழுத்துண்டு கொல்லேலே போய்க் கதவைச் சாத்தித் தாப்பாள் போட்டுண்டு இந்தக் கடுக்கனை வாங்கித் தந்தயாப் போச்சு, இல்லா போனு பூணலையறுத்துண்டு சன்னியாசம் வாங்கிண்டு காசிக்குப் போய்டுவேன்'னேன், பயந்துட்டா. (இதெச் சொல்லிக்கிண்டே கொர்வமா சிரிக்கிறுன், அதிசயமா அவனுக்குத்தான் அன்பான பொண்டாட்டி வந்துட்டான்னுட்டு). "இதுக்கா இவ்வளவு அமக்களம்?" னுட்டு உள்ளே போய் அம்மாக்காரிண்டே சமாச்சாரத்தெச் சொல்லிக் கண்ணீரைக் கரகரன்னு கொட்டி 'அவருக்கேதாவது வந்துட்டா அப்பறம் எனக்கென்ன வெச்சிருக்கு, எங்கேயாவது ஆத்திலே கொளத்திலே விழ வேண்டியதான்'னு கொலு வெச்சா. 'இதென்னடி பிரமாதம், அசடே'ன்னு சொல்லி, கடுக்கனைக் கொணாந்து குடுத்து, 'இந்தா, இதை வச்சு எங்கேயானும் பணம் வாங்கிக்

குடுக்கச் சொல்லு'ன்னு அவ அம்மா. நம்ம பாரியை இதை நம்மிடம் ஸமர்ப்பிச்சுட்டாள்''னு கதையை முடிச்சான். 'ஏண்டா, அந்த ஸாதுப் பிராமணன் தன் மாப்பிள்ளைக்கின்னு பொகு நாளை சொத்தாயிருந்தாலும் போனுப் போறதுன்னு குடுத்தார், அதை இப்படிக் கொள்ளையடிக்கலாமா?'ன்னேன், 'வடையெண்ணச் சொன்னுளா, தொளையெண்ணச் சொன்னுளா? ஓங்காரியத்தை நீ பாத்துண்டு போவையா, அனுவசிய வம்பளக்றயே, அவ்வளவு தர்ம பிரபுன்னு, என்னைப் பணங்கேக்காதே, ஊருபோய்ச்சேரு'ன்னுன் அந்த அடுமாண்டு போறவன். நான் என்ன பண்ணறது, ஸ்வாமி, நானும் புள்ளை குட்டிக்காரன். ஆனு எனக்கு ரொம்ப வருத்தமாத்தானிருக்கு. 'ஏதுடா, நாம சொல்லி மாமா கடுக்கனைக் குடுக்கறதுன்னு சம்மதிச்சாரே. நம் கையாலேயே அதை விக்க வேண்டியிருக்கே'ன்னு நெனைக்க நெனைக்க வேதனையாயிருக்கு. ஆனு நான் வேறேயென்ன பண்ணரது, செட்டி யமனுட்டமா காத்திண்டிருக்கானே. வட்டியும் மொதலும் 250 ரூ.க்கு மேலே ஆகறது. இது பழயகாலத்துக் கட்டடம் ரூ. 150க்கு மேலே ஒத்தரும் கொடுக்க மாட்டா போலேருக்கு. பாக்கியெ எங்கேயாவது வாங்கிக் குடுக்க வேண்டியது தான்.

ரா.—(இவ்வளவு நாழி வாயைத்திரவாமலிருந்தவர் ஏதோ வழி தெரியாமல் தடுமாறுபவனுக்கு வெளிச்சம் கண்டது போல்)—அப்போ, கடுக்கனை விக்கத்தாம் போரியாக்கும்.

பி.—வேறென்ன பண்ணறது, மாமா? இல்லாபோனு எம்பவுஷுக்குக் கடுக்கன் வேறையா? (என்று தன்னைத் தானே குரும்பாய் இகழ்வது போல் சிரிக்கிறுன். பிறகு,) ஏன் என்னயோஜிக்கிரேள்?

ரா.—யோஜனை ஒண்ணுமில்லை. ஏதோ அஞ்ஞானத்தினுலே வாஞ்செ, அவ்வளவு தான்,

பி.—ஏன், நீங்களே வாங்கிக்கலாமுன்னு? அடடா, அப்படியே செய்யலாமே, இது எட்டலைப் பாருங்கோ என்புத்திக்கி.

ரா.—(சோகந் தொனிக்கச் சிரித்துக் கொண்டு)—என்னப்பா, பரியாஸம் பண்ணறே, 250 ரூ. பணமிருந்தா கடுக்கனை நான் ஏன் கயட்டரேன்?

பி.—அதென்ன, மாமா, அப்படிச் சொல்லறேள், பணம் ஒருபிரமாதமா, ஓங்ககிட்டே என் பணம் இருந்தாப் பொட்டிலே இருக்காப்பலே. ஒரு காக்கடுதாசி எழுதி எறிஞ்சுப்புட்டு கடுக்கனை வாங்கிண்டு போங்கோ, நாளுங்கழமையுமா, ஆத்திலே, இல்லாபோனு, வருத்தப்படுவா.

ரா.—(கண்களில் ஜலம் ததும்ப)—அப்பா, நீ நல்ல பிள்ளை. நோட்டெழுதி தரலாம், ஆனு இன்னும் ரெண்டு வருஷத்திற்குப் பணம் கொடுக்க முடியாதே.

பி.—இதோ வந்துட்டேன்.

[என்று சொல்லி, ஸ்டேஷன் பிளாட்பாரத்திலுள்ள வெற்றிலை பாக்குக் கடைக்காரனிடமிருந்து சொப்பிடி வித்தைக்காரன் போல கடுதாசி மைக்கூடு பேனு ஸ்டாம்புள்பட அரை நொடியில் ஆஜர் படுத்தி, அவரிடம் நீட்டி]—

பி.—மெதுவாக் குடுங்கோன்னு. கடுதாசு கூட நமக்குள்ளே வேண்டியதில்லே, இந்தப் பாவி சுந்தரத்திண்டே மாட்டிண்டத்திலேருந்து எதெக் கண்டாலும் பயமாயிருக்கு. சந்தேகம் பொல்லாது.

ரா.—(எழுதிக் கொண்டே)—வட்டி என்ன போடறது?

பி.—கிரம வட்டிதான், சொன்னேனே, நூறுக்கிருபத்திநாலு.

ரா.—(தாழ்மையாயும் நயமாயும்)—ரொம்பக் கடுமையாயிருக்கப்பா, ஏதாவது கொறைக்கப்படாதா?

பி.—இல்லெ, அண்ணு. நான் என்ன பண்ணறது. நானும் பொறத்தையானுக்குக் குடுக்கறவன் தானே.

ரா.—அப்பறம் ஒன்னிஷ்டம்.

[எழுதி முடித்து ஸ்டாம்பை ஒட்டி கையெழுத்துப் போடுகிறுர் ராமநாதய்யர். ரயில் வரும் சமயம், போர்டர் மணி

படித்து விட்டான். பிச்சுக் குப்பன் அங்கே தற்செயலாய் வந்தவன் போல் வந்த தன் சினேகிதனும் பிளாட்பாரம் கடை சொந்தக் காரனுமான ராமஸ்வாமி முதலியாரைக் கூப்பிட்டு]

பி.—முதலியார்வாள், இதிலொரு சாக்ஷி போடுங்கோ.

ரா.—ஒகோ, அய்யர் அரை நாழி வீண் போது போக்ரதில்லே!

[என்று சிரித்துக்கொண்டே சொல்லிக் கையெழுத்துக் கடிதத்தைப் படிக்காமலேயே போடுகிறார். வண்டி ஸ்டேஷனுக்குள்ளே வருகிறது. பிச்சுக்குப்பன் மரியாதையாய் ராமநாதையரை வண்டியில் ஏற்றி]

பி.—கடுக்கனை ஜாக்கிரதையாய் காதிலே போட்டுக்குங்கோ. ஊருக்குப் போய் கடுதாசு போடுங்கோ [என்று உபசாரம் பண்ண, அவரும் விடை பெற்றுக் கொள்கிறார், ரயிலும் கிளம்புகிறது.]

ரா.—என்ன ஐயர்வாள், சரியான வேட்டுத்தானே?

பி.—ஏதோ, ஸ்வாமி புண்ணியத்திலே நடந்துவர்ரது. பொடிக்கடைக்காரனுக்கு தம்பிடிக்கு தம்பிடி லாபம், நம்ம வியாபாரம் முதலில்லாவியாபாரம்தானே, முழுக்க லாபம் தான்! ரொம்ப சந்தோஷம், போய் வரட்டுமா? என் வண்டியும் வந்துட்டாப் போலேருக்கு, சித்த மின்னே போறேன், அங்கே அவ்வளவு கூட்டமாயிருக்காது.

(இருவரும் வெவ்வேறு திக்கில் செல்லுகிறார்கள்.)

திரை.

[இந்த நாடகத்தின் நடிப்பு முதலிய உரிமைகள் ஆசிரியரைச் சேர்ந்தன.]



எச்சரிக்கை!!
ஸிரோலின் ரோச்சை
இத்தருணமே உபயோ
கிக்க ஆரம்பியுங்கள்
ஸிரோலின்
'ரோச்'
இருமல், மற்றும் மார்க்
கோளாறுகளுக்கு பல
ராலும் உபயோகிக்கப்படுவது

# அ ரி சி

●

[இந்தியாவின் ஜீவ உணவான அரிசியைப்பற்றிக் கூனூர் ஆஹார ஆராய்ச்சிப் பரிசோதனைச் சாலையில் கண்டு பிடிக்கப்பட்ட பல உண்மைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு, அகில இந்திய கிராமத் தொழிற் சங்கத்தார் எழுதி வெளியிட்ட புஸ்தகத்தின் மொழி பெயர்ப்பு.]

ஆ. வே. ஜெயராமன் (தமிழ்ப்படுத்தியவர்)

## I

### அரிசியின் ஊட்ட மதிப்பு.

உலகத்தில் மனிதர்கள் ஆகாரமாக உபயோகப்படுத்தக்கூடிய தானியங்களில் அரிசி மிகவும்முக்கியமானது. அரிசிஉலக ஜனத்தொகையில் 'பாதிக்கு ஜீவ உணவாக இருக்கிறது. ஜப்பான்,' சைனு, பிலிப்பைன் தீவுகள், கிழக்கிந்தியத் தீவுகள், இந்தோ—சைனு, பர்மா, இந்தியா, இந்நாடுகள் உலக உற்பத்தியில் 90 சத விகிதம் அரிசி உற்பத்தி செய்கின்றன. இந்தியர்கள் ஏறக்குறைய பாதிக்குமேல் அரிசியை முக்கிய உணவாக எடுத்துக் கொள்கிறார்கள். 1935–36ல் இந்தியாவில் மூன்றில் ஒரு பங்கு நிலத்தில் நெல்லும் மற்ற தானியங்களுடன் சாகுபடி செய்யப்பட்டது. இந்தியர்கள் பொதுவாக ஜீவ உணவை அதிகமாகவும் மற்ற உணவுகளைத் தருந்தாற்போல் குறைவாகவும் உண்பது வழக்கம் கூனூர் பரிசோதனைச் சாலையில் நம் நாட்டிலுள்ள ஜீவ உணவுகளைப் பரிசோதனை செய்ததில், அரிசியில் தான் 80 சத விகிதத்துக்குமேல் உஷ்ணம் இருக்கிறதென்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

நெல்லுக்குள் இருப்பது என்ன என்று ஒரு பச்சைக் குழந்தையைக் கேட்டால் கூட, அவர்கள் சிறிதும் தயங்காமல் 'அரிசி' என்பார்கள். நெல்லின்மேல் உள்ள தோலான உமியை நீக்கினுல் அரிசி உள்ளே இருப்பது தெரியும். அந்த அரிசியை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம். (1) மேல் பாகம் அல்லது புறணி, (2) முளை, (3) பெரும் பகுதியாக இருக்கும், ஸ்டார்ச் அல்லது கஞ்சிப் பசை. மேல் பாகமான புறணியிலும், முளையிலும், உள்ளே பெரும் பகுதியாக இருக்கும் கஞ்சிப் பசையிலிருப்பதைவிட ஊட்டங் கொடுக்கும் பொருள்கள் அதிகமாய் அடங்கி யிருக்கின்றன. அளவில் அவ்விரண்டும் அரிசியில் ஆறில் ஒரு பங்கு இருந்தாலும், சத்துள்ள பொருள்கள் அவைகளில் தான் அதிகமிருக்கின்றன. அவைகளில் பாதிக்குமேல் உலோக சம்பந்தமான பொருளும், கால் பங்கு புரோடீனும் (Protein) எல்லா வைடமினகளும் (Vitamin) கொழுப்பும் அடங்கியிருக்கின்றன. உமியை நீக்காமல் அரிசியை உண்ணமுடியாது. நெல்லை சாதாரண முறையில் குத்தினுல் கூட அரிசியின் மேலுள்ள புறணியும், முளையும் நீங்கி அழிந்து விடுகின்றன. அரிசியின் உருவமும் ஆகிருதியுந்தான் இதற்குக் காரணம்.

சாதாரணமாக இந்தியாவில் நெல்லை மர உரலிலோ அல்லது கல் உரலிலோ குத்தி, பிறகு உமி, தவிடு முதலியவைகள் போகப் புடைத்து அரிசியை வேறுக்குவது வழக்கம். ஆனல் இக் காலத்தில் நெல்குத்துவதென்றால் அது

பழைய காலத்துச் சம்பிரதாயம் என்று எண்ணி, நெல்லை மெஷினில் அரைத்துக்கொண்டு வந்து விடுகிறார்கள். அவ்விதம் நெல்லை மெஷினில் அரைப்பதினால் அரிசியின் உயர்ந்த பாகம் என்று கூறப்படும் புறணியும் முளையும் அடியோடு அழிந்து விடுகின்றன. அவ்விதமின்றி உரலிலோ அல்லது அரைப்பதற்கென்றே தயார் செய்த யந்திரத்திலோ நெல்லை அரைத்தால் முளை அழிந்து போனாலும் முக்கால் வாசி புறணியாவது அழிந்து போகாமல் அரிசியுடன் ஒட்டிக் கொண்டிருக்கும்.

கூடியமட்டும் புறணியும் முளையும் அழியாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமானால், நெல்லைப் புழுக்கித்தான் ஆக வேண்டும். நெல்லில் ஜலத்தை விட்டுப் பிசறி, அதைத் தகுந்த பாத்திரத்தில் போட்டு வேக வைப்பதற்குத்தான் புழுக்கல் என்று பெயர். அவ்விதம் புழுக்கிய அரிசிக்குப் புழுங்கல் அரிசி என்று பெயர். நெல்லை அறுத்து, அடித்துச் சேகரித்த உடனே காயப் போட்டுப் புழுக்கி, சாப்பாட்டுக்கு உபயோகப்படுத்தலாம். பச்சை அரிசி உண்பவர்கள், நெல்லை சில மாதங்கள் குதிரில் போட்டுப் பழைய நெல்லாக்கி விட்ட பிறகு தான் உபயோகப் படுத்தவேண்டும். இல்லாவிட்டால் புது அரிசி உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது.

மேலே கூறப்பட்ட முறையில் புழுக்கிய அரிசி பச்சை அரிசியைவிட அதிக சத்துள்ளது எனக் கண்டு பிடித்திருக்கிறார்கள். புழுக்கும் பொழுது வைடமின்களும், ஊட்டங்கொடுக்கும் உணவுகளும், புறணியிலிருந்தும் முளையிலிருந்தும் கிளம்பி அரிசிக்குள் சென்று ஸ்டார்ச் அல்லது கஞ்சிப் பசையுடன் கலந்து விடுகின்றன. இந்தியாவில் சில இடங்களைத் தவிர மற்ற இடங்களில் புழுங்கல் அரிசியைத் தான் அதிகமாக உபயோகிக்கிறார்கள். அதிலும் மில்லில் அரைக்கும் அரிசியைவிடக் கையால் குத்தும் அரிசியில் தான் சத்துக்கள் அதிகமிருக்கின்றன.

## (1) அரிசியிலுள்ள உணவுப் பொருள்கள்

நாம் உட்கொள்ளும் உணவில் மூன்று அம்சங்கள் இருக்க வேண்டும். (1) உடலின் வளர்ச்சிக்கும், நரம்புத் தளர்ச்சி ஏற்படாமலிருக்கவும் அப்பப்பொழுது தகுந்த ஊட்டம் கொடுக்கும் பொருள்கள். இவைகளை ப்ரோடீன்கள் (Proteins) என்பார்கள் (2) இருதயம் அடித்துக் கொள்ளவும் சுவாசப்பை தன் வேலையைச் செய்யவும், நரம்புகளும் தசைகளும் ரத்த ஓட்டத்தை அபிவிருத்தி செய்யவும், வயிறு உணவை ஜீரணம் செய்யவும் சக்தியைக் கொடுப்பதற்குக் கொழுப்பும் கார்போ ஹைடிரேட்டும் அவசியம். (3) உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதற்கு உலோக சம்பந்தப்பட்ட உப்புக்களும், வைடமின்களும் அவசியம் வேண்டும்.

ஜீவ உணவில் எல்லா சத்துக்களும் இல்லாவிட்டால், அவைகளைக் காய்கறி பதார்த்தங்களிலிருந்து அடைய வேண்டும். அரிசியில் ப்ரோடீன், வைடமின் ஏ, பி, ஸீ. பஞ்சிப்பசை, கொழுப்பு இவைகளைத் தவிர இரும்பு சத்தும், கால்ஷியம் (Calcium), பாஸ்பரஸ் (Phosphorus) முதலிய உப்புக்களும் இருக்கின்றன. கைக்குத்தல் அரிசியில் இருக்கும் ப்ரோடீனும், பாஸ்பரஸும், வைடமின் 1·பியும் நம் தேக வளர்ச்சிக்குப் போதுமானது. மற்ற சத்துக்களை வேண்டிய அளவு வேறு பதார்த்தங்களில் தான் நாம் அடைய வேண்டும்.

### ப்ரோடீன்

ப்ரோடீன் உடல் வளர்ச்சிக்கும், நரம்புத் தளர்ச்சி உண்டாகாமல் இருப்பதற்கும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய முக்கிய உணவு. மற்ற தானியங்களிலிருப்பதைக் காட்டிலும் இது அரிசியில் குறைவாகத்தான் இருக்கிறது. அரிசியில் இதன் அளவு கீழே தரப்பட்டிருக்கிறது.

(100 கிராம் எடைக்குக் கணக்கு எடுத்திருக்கிறது.)

| | | |
|---|---|---|
| கைக்குத்தல் (பச்சை) | .... | 7·1 கிராம். |
| ,, (புழுங்கல்) | .... | 7.2 ,, |
| மில் அரைப்பு (பச்சை) | .... | 6·2 ,, |
| ,, (புழுங்கல்) | .... | 6·1 ,, |

கோதுமையில் அரிசியில் இருப்பதை விட அதிக ப்ரோடீன் இருந்தாலும், அதிகப் பலன்தரவில்லை என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். ஓர் ஏழைக்கு ப்ரோடீன் உணவு வேண்டுமென்றால், அதை அவன் அரிசியில் தான் அடைய வேண்டும்.

பாஸ்பரஸ்

பாஸ்பரஸ் தசை வளர்ச்சிக்கு இன்றியமையாதது. ரத்த விருத்திக்கும் அது முக்கியமானது. அரிசியில் மற்ற தானியங்களைக் காட்டிலும் பாஸ்பரஸ் குறைவாகத் தான் இருக்கிறது. அதுவும் முக்கால் பாகம் பாஸ்பரஸ் அரிசியின் புறணியில் தான் இருக்கிறது. ஆதலால் புறணி அரிசியில் அதிகமாக இருந்தால் தான் பாஸ்பரஸும் அதிகமாக இருக்கும். மில் அரைப்பினால் 20 சத விகிதம் பாஸ்பரஸ்தான் அரிசியுடன் ஒட்டிக் கொண்டிருக்கும். புழுங்கல் அரிசியில் கூட இதே அளவு பாஸ்பரஸ் தான் மிச்சப்படுகிறது.

| | | |
|---|---|---|
| கைக்குத்தல் (பச்சை) | .... | 0.28 |
| ,, (புழுங்கல்) | .... | 0·26 |
| மில் அரைப்பு (பச்சை) | .... | 0·13 |
| ,, (புழுங்கல்) | .... | 0·14 |

கால்ஷியம்.

தேகத்திலுள்ள எலும்புகளும், பற்களும் போதிய வளர்ச்சியை அடைய கால்ஷியம் அவசியம் வேண்டும். இருதயம் தன் வேலையை ஒழுங்காகச் செய்யவும், வெட்டுப்பட்ட இடத்தின் வழியாக அதிக ரத்தம் ஓடாதபடி ரத்தம் உறையவும் கொழுப்பிலிருந்தும், இரும்பிலிருந்தும், அவைகளுடைய சத்தை அந்தந்த அவயவங்கள் எடுத்துக் கொள்ளவும் இது உதவி செய்கிறது. பலதரப்பட்ட அரிசிகளைப் பரிசோதித்ததில், அவைகளில் கால்ஷியம் ரொம்பவும் குறைவாக இருக்கிறதென்று தெரிய வருகிறது. ஒருவன் 600 கிராம் அளவுள்ள அரிசியை உண்டால், அவனுக்கு ·03 லிருந்து ·06 கிராம் வரை தான் கால்ஷியம் கிடைக்கிறது தேக வளர்ச்சிக்கு வேண்டியதில் இது சதாங்கத்தில் ஒரு பங்கு தான் இருக்கிறது.

கொழுப்பு:—எல்லா தானியங்களைப் போல் அரிசியிலும் கொழுப்பு குறைவாகத் தான் இருக்கிறது. ஆனால் உடலுக்கு எவ்வளவு கொழுப்பு தேவையென்றும், கொழுப்பைக் குறைவாக எடுத்துக் கொண்டால் அதனால் உடம்பு வளர்ச்சி குன்றி விடுமா என்றும் தெரியவில்லை.

இரும்பு:—உடலில் ரத்தம் விருத்தியாவதற்கு இரும்பு அத்தியாவசியம். சுவாசப் பையிலிருந்து பிராண வாயுவை உடலிலுள்ள பல அங்கங்களுக்கு ரத்தம் எடுத்துச் சொல்ல இது உதவியாக இருக்கிறது. உண்ணும் உணவில் வேண்டிய அளவு இரும்பின் சத்து இல்லாமல் ஜனங்கள் பலக்குறைவும், அதிகக்களைப்பும், ரத்தமின்மையும் அடைகிறார்கள். நாம் உண்ணும் அரிசியிலோ மேற்கூறிய இரும்பின் சத்து மற்ற தானியங்களைக் காட்டிலும் மிகவும் குறைவாக இருக்கிறது. அதுவும், மில்லில் குத்தும் அரிசியில் அணுவளவு கூட இல்லையென்று தான் கூற வேண்டும்.

வைடமின் 1 பி.

உடல் வளர்ச்சிக்கு வைடமின் 1 பி, மிகவும் அவசியமானது. (1) இவ்வுணவு, மூளையையும், நரம்புகளையும், இருதயத்தையும், குலையையும், உமிழ் நீர் ஊற்றுக்களையும், மூத்திரப் பையையும் சுத்தி செய்து வலுப்படுத்துகிறது. (2) அங்கங்களின் தசைகளையும், வயிற்றின் தசைகளையும் நல்ல நிலைமையில் இது வைத்துக் கொள்கிறது. (3) ஜீரண சக்தியைக் கொடுக்கிறது. வைடமின் 1 பி, நிறைந்த உணவைச் சாப்பிட்டால், அது உணவை நாக்கிற்கு ருசிகரமாய்ச் செய்வது மட்டுமல்லாது, நன்றாக ஜீரணமுமாக்குகிறது. அத்துடன் மட்டுமல்லாது கழிவுப்

பொருள்களை அவ்வப்பொழுது உடம்பிலிருந்து கழித்து விடுகிறது. வைடமின் 1 பி (Beri–beri) பெரி–பெரி என்னும் வியாதியையும் வரவொட்டாமல் தடுக்கிறது. இவ்வியாதி நரம்புத் தளர்ச்சியை உண்டுபண்ணி முடக்கு வாதத்துக்கு இடங் கொடுக்கிறது. அதல்லாமல் இருதயத்தையும் அது பாதிக்கிறது. அவ்வியாதி அதிகமானால் இருதயம் நின்று விடுவதுண்டு. ஆனால் தகுந்தபடி சிகிச்சை செய்தால் குணமுண்டாகும்.

அரிசியில் இந்த வைடமீன் நிறைய இருக்கிறது. ஆனால் அது என்டாஸ்பெர்ம் என்று சொல்லும் படியான கஞ்சிப் பசையில் ஏதோ சிறிதளவு இருக்கிறது. முழுவதும் முளையிலும் புறணியிலுந்தான் இருக்கிறது. மில் அரைப்பினால் முளையும் புறணியும் அழிந்து போவதனால் எல்லா வைடமினும் தவிட்டுடன் சென்று விடுகிறது. வைடமின் போதிய அளவு இல்லாத அந்த அரிசியை உட்கொள்ளுவதால் வியாதிகள் பல நம்மை நெருங்குகின்றன. மில்லில் நெல் அரைக்கும் பொழுது, ஒன்று இரண்டு நெல் விழுமானால், "ஓய் மெஷின் மேன், இன்னுங் கொஞ்சம் அழுத்திப்பிடி" என்று பலர் கூறுகிறார்கள். இந்த 'அழுத்திப் பிடிப்பினால்' அரிசி வெள்ளை முத்துக்களைப் போல வந்து விழுகின்றது. சமைத்தால் 'சாதம் தும்பப்பூ மாதிரி இருக்கு' என்று பாராட்டி விட்டுச் சாப்பிட்டுச் செல்கிறார்கள். ஆனால் அதனால் உடம்புக்கு ஏதாவது அனுகூலம் உண்டா என்று சற்றும்






யோசனை செய்ய மாட்டேனென்கிறார்கள்.

அதிக அரைப்பினால் கிடைத்த அரிசியை உட்கொள்வதால் தான் 'பெரி–பெரி' என்ற முடக்குவாத நோய் உண்டாகிறதென்று 25 வருஷங்களுக்கு முன்பேயே கண்டு பிடித்திருக்கிறார்கள். புழுங்கல் அரிசியைச் சாப்பிடுகிறவர்கள் இவ் வியாதிக்குத் தப்பி விடுகிறார்கள். அவ் வியாதியினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு புழுங்கல் அரிசி உணவைக் கொடுத்தால் உடனே அவ்வியாதியினின்றும் சொஸ்தமாகி விடுகிறார்கள். கைக்குத்தல் அரிசியை உபயோகித்ததில் தான் மேற் கூறிய நன்மைகள். ஆனால் புழுக்கிய நெல்லை 'அமுக்கிப் பிடித்து' அரைத்தால் கூட போதுமான அளவு வைடமின் 1பி யை தன்னுள் நிறுத்தி வைத்துக் கொள்கிறது.

தானியங்களில் தான் வைடமின் 1பி அதிகமாக இருக்கிறது. பருப்பு தானியங்களிலும் இது அதிகமாக இருக்கிறது. ஆனால் நாம் இப்பருப்பு உணவுகளை அதிகம் உட்கொள்வதில்லை. ஆதலால் எல்லா தேசத்து ஜனங்களும் அவரவர்களுடைய ஜீவ உணவுகளிலிருந்து தான் இந்த வைடமினை அடைகிறார்கள்.

கீழ்க்கண்ட அளவு ஒவ்வொரு தானியத்திலும் வைடமின் 1பி இருக்கிறது.

(மைக்ரோ கிராம் அளவு)

| | |
|---|---|
| கோதுமை ... | 5·3 |
| சோளம் ... | 2·9 |
| ராகி .... | 3·0 |
| மரவள்ளிக்கிழங்கின் மாவு .... | ·6 |
| உருளைக் கிழங்கு .... | ·8 |
| கைக்குத்தல் அரிசி (பச்சை) | 2·3 |
| ,, (புழுங்கல்) .... | 2.9 |
| மில் அரைப்பு (பச்சை) .... | 1·1 |
| ,, (புழுங்கல்) ... | 2.9 |

மேற் காட்டிய அட்டவணையிலிருந்து கைக்குத்தல் அரிசியில் 1 பி வைடமின் அதிகம் இருக்கிறதென்று தெரிகிறது. கூனூர் ஆராய்ச்சி சாலையில், ஜப்பானிய யந்திரம், மரயந்திரம், உரல் முதலிய கருவிகளைக் கொண்டு எட்டு வித நெற்களை அரைத்து, அவைகளிலுள்ள 1பி வைடமினை ஆராய்ச்சி செய்ததில் கீழ்க்கண்ட அளவு ஒவ்வொன்றிலும் இருந்தது.

## (மைக்ரோ கிராம் அளவு)

| | மரயந்திரம் | ஜப்பான் யந்திரம் | நம் நாட்டு உரல் | மில்லில் | கைக்குத்தல் | மில்லில் |
|---|---|---|---|---|---|---|
| | பச்சை | | | | புழுங்கல் | |
| 1. | 2·3 | 2·5 | 2·1 | 0·6 | 2·1 | 2·1 |
| 2. | 3·2 | 3·7 | 2·9 | 1·3 | 2·4 | 2·0 |
| 3. | 3·3 | 2·7 | 1·5 | 1·0 | 2·7 | 2·6 |
| 4. | 2·6 | 2·9 | 2·1 | 1·3 | 2·4 | 1·6 |
| 5. | 3·2 | 2·9 | 2·1 | 1·3 | 2·0 | 1·7 |
| 6. (a) | — | — | 3·9 | 1·2 | — | 2·9 |
| 6. (b) | — | — | 2·5 | 0·8 | 2·7 | 1·9 |
| 7. | — | — | 2·3 | 0·6 | 2·5 | 2·1 |
| 8. | — | — | 2·4 | 0·9 | 2·4 | 2·6 |
| சராசரி | 2·9 | 2.9 | 2·4 | 1·0 | 2·4 | 2·2 |

மர யந்திரத்திலும், ஜப்பான் யந்திரத்திலும் அரைத்த அரிசியில் 1 பி வைடமின் அதிகமாக இருக்கிறது. புழுங்கல் அரிசியிலும் பச்சை அரிசியில் உள்ள அளவுதான் வைடமின் இருக்கிறது. புழுக்கிய நெல்லை மில்லில் அரைத்தால் கூட வைடமின் அதிகமாக அழிந்து போவதில்லை. மில்லில் அதிகமாக அரைத்தால் கூட புழுங்கலரிசி வைடமினில் எவ்வளவு நஷ்டமும் உண்டாகாது. புழுக்கும் பொழுது முளையிலிருந்தும், புறணியிலிருந்தும் வைடமின் உள்ளே கஞ்சிப் பசையுடன் கலப்பதால், மில்லில் அரைக்கும் பொழுதுகூட வைடமினுக்கு எவ்விதக் கெடுதலும் நேரிடுவதில்லை.

தற்காலத்தில் மில்லில் நெல்லை அரைக்கும் பொழுது, அரிசி நான்கு வித மாறுதல்களை அடைகிறது. ஒவ்வொரு மாறுதலிலும் வைடமின் இருக்கும் அளவு கீழ்க்கண்டவாறு.

(மைக்ரோ கிராம் அளவு)

| | | |
|---|---|---|
| உமி தவிர்க்கும் பொழுது | .... | 4·0 |
| முதல் மெருகு கொடுப்பதில் | ... | 1·8 |
| இரண்டாவது ,, | .... | 1,0 |
| மூன்றாவது ,, | .... | 0·7 |

இந்நான்கு படிகளையும் தாண்டி அரிசி பளபளவென்று மின்னிக் கொண்டு கடைக்குச் செல்கிறது.

### வைடமின் 2 பி. அல்லது நிகோடினிக் திராவகம்

வைடமீன் 2 பி. கூட 1 பியைப்போல உடல் வளர்ச்சிக்கு அத்யாவசியமானது. கைக் குத்தல் அரிசியில் இந்த சத்து 4 அல்லது 5 மில்லிகிராம் சத விகிதம் இருக்கிறது. ஆனால் மில்லில் அரைத்த அரிசியிலோ கைக் குத்தல் அரிசியில் இருப்பதில் மூன்றில் ஒரு பங்குதான் இருக்கிறது. இதனால் வைடமின் 2 பி முளையிலும் புறணியிலும் அதிகமாக இருக்கிறதென்று தெரிகிறது. புழுங்கலரிசியில் இந்த வைடமின் மில் அரைப்பினால் அதிகம் அழிவதில்லை. வைடமின் 2 பியைப் போல இதுவும் நெல் வேகும் பொழுது முளையிலிருந்தும் புறணியிலிருந்தும் அரிசிக்குள் சென்று கஞ்சிப் பசையுடன் கலந்து விடுகிறது.

வைடமின் ஏ:—அரிசியில் இந்த வைடமின் மிகவும் சிறிய அளவு தான் இருக்கிறது. ஆனால் இந்த வைடமின் வேண்டுவோர் இதை வேறு ஆகாரத்திலிருந்து தான் எடுத்துக் கொள்ள வேண்டும்

வைடமின்ஸி:—இது அரிசியில் சிறிது கூட கிடையாது. ஆனால் நெல் முளை விடும் பொழுது, இந்த வைடமின் உண்டாகிறதாம்.


**சந்தாதாருக்கு அறிக்கை.**

சந்தாத் தொகையைச் செலுத்தாமல் பாக்கி வைத்திருப்பவர்கள், பாரத மணி ஆபீஸிலிருந்து 'ரிமைண்டர்' கடிதத்தை எதிர்பாராமல் வருஷசந்தாத் தொகை ரூ. **3—0—0**யும் தாமதிக்காமல் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**மானேஜர்.**

# பிராயச் சித்தம்

எச். வைத்தியநாதன்

('ஸ்ரீ பிரேம்சந்த்' எழுதியதை 'லக்ஷ்மீபதி' மொழிபெயர்த்தது)

ஆபீஸிற்கு நேரம் கழித்துச் செல்வது தமக்குப் பெருமை என்று சிலர் எண்ணியிருக்கிறார்கள். எவ்வளவுக்கெவ்வளவு உத்தியோகம் உயர்ந்ததோ அவ்வளவுக்கவ்வளவு நேரம் கழித்துச் செல்வதுடன், மாலையிலும் சீக்கிரமாக வீட்டிற்குத் திரும்ப வேண்டுமென கருதுவர் சிலர். இதைத் தவறாமல் அனுஷ்டிப்பவர்களுள் ராமலிங்கமும் ஒருவர்.

இராமலிங்கம் டிஸ்டிரிக்ட்போர்ட் ஆபூஸில் ஹெட்கிளார்க் அவர் வழக்கம் போல் மணி பதினொன்றடிக்கும் சமயத்தில் (பத்து மணிக்கே வரவேண்டியவர்) ஆபீஸிற்குள் நுழைந்தார். அதுவரை நிச்சப்தமாய் இருந்த இடம் இராமலிங்கம் வந்தவுடன் பரபரப்புடன் காணப்பட்டது. வாசற்படியின் பக்கத்தில் தூங்கி வழிந்து கொண்டிருந்த பாராச் சேவகன் இராமலிங்கத்தைப் பார்த்து திடுக்கிட்டெழுந்து அசட்டுச் சிரிப்புடன் சலாம் செய்தான். அச்சமயம் ஓர் சேவகன் ஓடிச் சென்று அவருடைய சைக்கிளை வாங்கி வைக்க, மற்றொருவன் அவர் போகும் வழியிலுள்ள கதவைத் திறந்து வைக்க, இவ்வளவு உபசாரங்களையும் அலக்ஷ்யமான பார்வையுடன் ஏற்றுக் கொண்டு தன் அறைக்குள் பிரவேசித்து, ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டே தனது ஆசனத்தில் அமர்ந்தார். சற்று நேரம் சென்ற பிறகு தபால்காரன் ஓர் ரிஜிஸ்டர் கவரைக் கொடுத்து கையெழுத்து பெற்றுக் கொண்டு சென்றான்.

இராமலிங்கம் கவரைப் பிரித்துப் பார்த்தார். அவ்வளவுதான் திடீரென்று நாற்காலியில் சாய்ந்து விட்டார். "அட, மடையா, உனக்கா இந்த அதிர்ஷ்டம்"? என்று அவரது வாய் கூறியது.

கடிதத்தில் இருந்த விஷயம் சாதாரணமானதுதான். ஆபீஸில் சுமார் ஆறுமாத காலமாகக் காலியாயிருந்த காரியதரிசி வேலைக்குப் பாலசுந்தரம் என்பவர் வரப் போகிறார் என்ற விஷயமே அதில் இருந்தது.

பார்ப்பதற்கு இது சிறு விஷயமாக இருந்தபோதிலும் இதனால் ராமலிங்கம் நிலைகுலைந்து விட்டார். அந்த வேலை தனக்குக் கிடைக்கும் என்று எதிர் பார்த்திருந்தார். அதுதான் கிடைக்கவில்லை. அந்த இடத்தில் வேறு எவனையாவது போடக்கூடாதா? இந்த பால சுந்தரம் தான் அகப்பட்டானா? தான் மனப்பூர்வமாக வெறுக்கும் பாலசுந்தரம் தனக்குமேல் அதிகாரியாக வந்தால் ராமலிங்கத்திப் பொறுக்குமா? ஆகையால் மனதிற்குள் பாலசுந்தரத்தையும் அவனை நியமித்த அதிகாரியையும் பலவிதமாக நிந்தித்தார். அதனால் அவர் மனது கொஞ்சம் சமாதானமடைந்தது.

ராமலிங்கமும் பாலசுந்தரமும் குழந்தைப் பருவமுதல் ஒருவரையொருவர் நன்றாய் அறிந்தவர்கள்; பி. ஏ. வரை இருவரும் சேர்ந்தே படித்தவர்கள்; பாலசுந்தரம் பி. ஏ. பரிக்ஷையில் முதன்மையாகத் தேறிக் கலாசாலையிலிருந்து வெளியேறினர். ஆனல் ராமலிங்கமோ இரண்டு வருஷம் அப்பரிக்ஷையையே படையெடுத்து வெற்றியடையாமல், கடைசியாக ஜில்லா போர்ட் ஆபீஸில் ஓர் குமாஸ்தாவாக அமர்ந்தார். மூன்று வருஷங்களுக்குள் தலைமைக் குமாஸ்தாவானர்.

இவ்வளவு நாட்களுக்குப் பிறகு அந்த பாலசுந்தரம் தனக்கு மேலுள்ள பதவி

யில் வந்தமர்வதை நினைக்க நினைக்க ராம லிங்கத்தின் உள்ளம் கருக ஆரம்பித்தது. என்ன நினைத்தால் தான் என்ன? அவ ரால் என்ன செய்யமுடியும்? அப்படி இருந்தபோதிலும் அவர் சும்மா இருக்க வில்லை. என்ன தந்திரம் செய்து பாலசுந்தரத்தை அவ்விடமிருந்து சீக் கிரமாகக் கிளப்பலாம் என்று யோசித் தார். வஞ்சகமே வடிவெடுத்ததுபோன்ற அவருக்கா புத்தி தோன்றாது?

சற்று நேரம் சிந்தனைசெய்தபின் அங் குள்ள மற்ற குமாஸ்தாக்கள் எல்லோரை யும் அழைத்துப் புதிய காரியதரிசியைப் பற்றி கயிறு திரிக்கத் தொடங்கினர்.

ராமலிங்கம் :—என்ன ஸார்! சமா சாரம் தெரியுமா? இனிமேல் நீங்கள் எல்லாரும் உஷாராயிருக்க வேண்டும். ஏதோ ஞாபகமறதி அல்லது அஜாக்கிர தையினால் சிறிய தவறு ஒன்று செய் தால் பாலசுந்தரம் என்ன விழிக்கிறீர்கள்! அவர் தான் புதிய காரியதரிசி, லகுவில் விட்டுவிட மாட்டார். கவனமிருக்கட்டும்.

ஒரு குமாஸ்தா :—ஏன், அவ்வளவு கண்டிப்பான மனிதரா என்ன?

ராமலிங்கம் :—எல்லாம் இன்னும் இரண்டொரு தினங்களில் தெரிந்து விடுமே. நான் எதற்காக அனாவசியமாக ஒருவரைப்பற்றிக் கோள் சொல்லவேண் டும். ஆசாமி நல்லவன் தான். ஆனால் முன் கோபி. எப்பொழுதும் மூக்கு நுனியில் தான் கோபம் இருக்கும். தன் னுடைய தவறுகள் ஒன்றும் தெரிந்து கொள்ளாமல் பிறருடைய வேலையில் குற் றம் கண்டுபிடித்துக் கொண்டே யிருப் பான். இப்பேர்ப்பட்ட மனிதர்களிட மிருந்து தப்புவது எளிதல்ல. நீங்கள் எல்லோரும் இனிமேல் ஆபீஸ் சிப்பந்தி கள் மாத்திரம் அல்ல. நாள் முழுவ தும் அவருடைய வீட்டிலேயே ஆஜரா யிருக்க வேண்டும். ஒருவன் மார்க்கெட் டுக்குப் போவது, ஒருவன் அவருடைய குழந்தைகளைக் கவனித்துக் கொள்வது, இப்படி ஏதாவது சிச்ருஷைகள் செய்து கொண்டிருந்தால் பிழைக்கலாம்.

ஒருவன் :—அதென்ன, அவ்வளவு சிடு மூஞ்சியா?

ராமலிங்கம் :— நான் சொல்வதி லென்ன இருக்கிறது. விடிந்தால் தெரி கிறது வெளிச்சம். நாளை வந்துவிடுகிறார். நீங்களே அறிந்து கொள்ளலாமே.

பாலசுந்தரத்தைப்பற்றி இவ்வளவும் சொல்லியபின் தான், ராமலிங்கத்தின் ஆத்திரம் ஒருவாறு தணிந்தது.

பாலசுந்தரம் ரயிலிலிருந்து இறங்கினர். ராமலிங்கத்தைக் கண்டதும் மனமகிழ்ந்து ஆலிங்கனம் செய்து கொண்டார். ‘நான் உன்னை எதிர்பார்க்கவேயில்லை. உன்னைப் பார்த்து எவ்வளவோ நாளாயிற்று. இங்கு என்ன உத்தியோகத்திலிருக் கிறாய் உன்கூட வந்திருப்பவர்கள் யார் என்று கேள்விகளை அடுக்கிறார்.

ராமலிங்கம் :—உனது ஜில்லா போர்டு ஆபீஸில் தான் நான் ஹெட்கிளார்க் காக இருக்கிறேன். இவர்கள் எல் லோரும் ஆபீஸ் சிப்பந்திகள். நீ புதிய எஜமானல்லவா? உன்னை வர வேற்க வந்திருக்கிறார்கள்.

இதைக்கேட்ட பாலசுந்தரம் புன்சிரிப் புடன் அவர்களுக்கு வந்தனம் கூறி ஒவ் வொருவராகக் கைகுலுக்கிப் பழக்கம் செய்துகொண்டார். நீங்கள் எல்லோரும் எனக்காக இவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டாமே. என்னை உங்கள் சகோதரனைப்போல எண்ணுங்கள். நாம் எல்லோரும் ஒற்றுமையுடன் உண்மை யாக உழைத்தால் ஆபீஸிற்கு நல்ல கீர்த்தி ஏற்படும். உங்களுடைய தலை மைக் குமாஸ்தாவும் நானும் குழந்தை முதல் ஒருயிரும் ஈருடலுமாக வளர்ந்த வர்கள்’. என்றார்.

அப்பொழுது ஒரு குமாஸ்தா, ராம லிங்கம் முன் கூறியதை நினைத்துக் கொண்டு ‘என்ன இருந்தாலும் நாம் எல்லோரும் மனிதர்கள் தான். ஏதோ தவறு நடந்துவிட்டாலும் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்றான்.

பாலசுந்தரம் :—அதைப்பற்றி சொல்ல வேண்டுமா என்ன? அதைத்தான் நானும் விரும்புகிறேன்.

இப்படியாகப் பேசிக்கொண்டே எல்லோரும் ஸ்டேஷனுக்கு வெளியே வந்து பிரிந்து போனார்கள். தன்னுடைய வாக்கு சாதுர்யத்தினால் பாலசுந்தரம் எல்லாருடைய மனதையும் கவர்ந்து கொண்டார். போகும்பொழுது சிப்பந்திகளுள் கீழ்வரும் சம்பாஷணை நடந்தது.

"ஆசாமி நல்லவனாகத் தோன்றுகிறதே"

நமது ராமலிங்கமவர்கள் சொல்வதை கவனித்தால் ராட்சதனாக யிருப்பான் போல தோன்றிற்று."

"முதன் முதலில் எல்லோரும் இப்படித்தான் தேன் ஒழுகும்படி பேசுவார்கள். இது எல்லாம் வெளிவேஷமோ என்னவோ?"

"என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? ஆளைப் பார்த்தாலே தெரியாதா வேஷம் போடுகிறானென்றும் இல்லையென்றும். இவ்விதமாக புதிய காரியதரிசியைப்பற்றி பேசிக்கொண்டே எல்லோரும் சென்றார்கள்.

பாலசுந்தரம் வந்து ஒரு மாதமாகி விட்டது. ஆபீஸ் சிப்பந்திகளும் மற்றுமுள்ள வேலைக்காரர்களும் அவர்மேல் உண்மையான அன்பும் மதிப்பும் வைத்திருந்தனர். அவரிடம் பழகுகிறவர்கள் எல்லாருமே அவரை விரும்பினார்கள். ராமலிங்கத்திற்கு இதெல்லாம் வேம்பாயிருந்தன. பாலசுந்தரத்தின் நற்குணங்களைப் பற்றிப் பேசும் ஒவ்வொரு குமாஸ்தாவின் வார்த்தையும் இராமலிங்கத்திற்கு தேள் கொட்டுவதுபோல் தோன்றிற்று. எப்படியாவது பாலசுந்தரத்தின் புகழில் அழியாக் களங்கத்தை உண்டாக்கி விடத் தீர்மானித்தார். ஆனால் அவர் பாலசுந்தரத்தினிடம் பேசும் பொழுதெல்லாம் அன்பு ததும்பப் பேசுவார். பாலசுந்தரமோவெனில் ராமலிங்கத்தின் உண்மை குணங்களை அறிந்து கொள்ளாமல் அந்தரங்கமுள்ள நண்பராக நினைத்து பழகி வந்தார்.

அக்கிரமம் செய்பவனுக்குத் தகுந்த சந்தர்ப்பத்தை அளிக்கும் விஷயத்தில் பகவான் சற்றும் தயங்குவதில்லை. ஆகவே ராமலிங்கத்திற்கும் அதற்குரிய சந்தர்ப்பம் எளிதில் கிட்டியது.

ஒரு நாள் ராமலிங்கம் காரியதரிசியின் அறைக்குச் சென்றார். பாலசுந்தரம் அங்கு காணப்படவில்லை. ஏதோ வேலையாக வெளியில் சென்றிருந்தார். மேஜையின்மேல் நோட்டுக்களாக ரூ ஐயாயிரம் வைக்கப்பட்டிருந்தது. அதைக் கண்டதும் ராமலிங்கம் என்ன செய்தார் என்று சொல்ல வேண்டியதில்லை. அவர் சிருஷ்டிக்க நினைத்த பாலசுந்தரத்தின் களங்கத்திற்கு அப்பணம் மையமாக உதவிற்று. நாலாபுறமும் பார்த்தார். ஒருவரும் தென்படவில்லை. அறையிலிருந்து வெளியே வந்து பார்த்தார். மறுபடியும் சரேலென்று அறைக்குள் வந்து ரூபாயை நிஜார் பையில் மறைத்தார். வெளியே வந்தார். வாசற்படியண்டை நிற்கவேண்டிய சேவகன் அப்பொழுதுதான் எதிரேயிருந்த வெற்றிலை பாக்குக் கடையிலிருந்து வந்தான். ராமலிங்கம் அப்பொழுதுதான் அங்கு வந்தவர் போல செகரட்ரி உள்ளே இருக்கிறாரா என்றார்.

ப்யூன் :—உள்ளே இல்லிங்க இப்பதான் வெளியே போனாங்க. யாருடனே பேசிக்கொண்டிருக்கிறாங்க.

ராமலிங்கம் :—இவ்வளவு அஜாக்கிரதையாக ஏன் இருக்கிறார். மேஜையின்மேல் எவ்வளவோ விஷயங்களடங்கிய கடிதங்களும் தஸ்தாவேஜிகளும் இருக்கின்றன. ஒவ்வொரு கடிதமும் லக்ஷம் விலைபெறும். கதவையும் திறந்து போட்டிருக்கிறார். என்றைக்காவது ஏதேனும் எக்கச்செக்கமாக முடிந்தால் யார்தான் என்ன செய்வது? உள்ளே யாரும் போகாதபடி ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். என்று சொல்லி விட்டுக் கதவையும் இழுத்து மூடிக் கொண்டு தன்னறைக்குச் சென்று நாற்

காலியில் அமர்ந்தார். அங்கு அவர் உடல் மாத்திரம் அமர்ந்ததேயொழிய உள்ளம் அமரவில்லை. குற்றமுள்ள நெஞ்சு அல்லவா? ஆகையால் குறுகுறு வென்று குடைந்து கொண்டிருக்கிறது. ஆகையால் ரூபாய் நோட்டுகளை எடுத்து அலமாரியில் பழைய பேப்பர்களின் அடியில் ஒளித்து வைத்தார். ஒருவித மாக மனதைத் திடப்படுத்திக் கொண்டு தன் வேலைகளை கவனித்தார்.

சற்று நேரம் சென்றது. பாலசுந்தரம் தன்னறைக்குச் சென்றார். மேஜை மேல் ரூபாய் நோட்டு இல்லை என்பதைக் கவனிக்கவில்லை. சற்று நேரத்தில் ஓர் மனிதன் சலாம் செய்து நின்றான். ஏன் இவ்வளவு தாமதம். பத்து மணிக்கு வரும்படி சொல்லி யிருந்தேன் அல்லவா? உனக்காக வெகு நேரமாகப் பணத்தை வைத்துக்கொண்டு காத்திருக்கிறேன். சரி ரசீது எழுதிக் கொடு என்று சொல்லிக்கொண்டே மேஜைமேலுள்ள ரூபாய் நோட்டை எடுக்க கையை நீட்டினார். மேஜை மேல் இருந்தாலல்லவோ கையில் அகப்பட; அங்குமிங்குமுள்ள காகிதங்களை நீக்கிப் பார்த்தார். "ஹா! நோட் எங்கே போயின. நான் இங்கே தான் வைத்திருந்தேன். எங்கே போயிருக்கும் நன்றாக ஞாபகமிருக்கிறதே". யாராவது ஜாக்கிரதையாக எடுத்து வைத்திருப்பார்களென்று எண்ணி 'என்மேஜை மேல் வைத்திருந்த ரூபாய் நோட்டுகளை எடுத்தீர்களா' என, ராமலிங்கம் திடுக்கிட்டு "என்ன ரூபாய் நோட்டுகளா, எனக்குத் தெரியாதே. அவைகளை காணவில்லையா? நான் உங்களைப் பார்க்க வேண்டுமென்று அங்கு வந்தேன். ப்யூன் நீங்கள் வெளியே நீங்கள் வெளியே போயிருப்பதாகச் சொன்னான். உடனே ப்யூனிடம் சொல்லி கதவுகளையும் சாத்திவிட்டு வந்தேன்".

பாலசுந்தரம்:—ஐயோ, ஒன்று இரண்டு இரண்டு இல்லையே. சுளை சுளையாக ஐயாயிரம் ரூபாய்களல்லவா?

ராமலிங்கம்:—ஐயாயிரமா? தேடிப் பார்த்தீர்களா. என்ன அநியாயம் இது.

பாலசுந்தரம்:—எங்கும் காணவில்லை. நான் என்ன செய்வேன்? என் கையில் கூட பணம் இல்லையே!

ஆபீஸ் முழுவதும் இச்செய்தி தீ போல் பரவிற்று. யாவரும் பரபரப்புடன் அங்கும் இங்கும் தேடினார்கள். பாலசுந்தரம் மனம் குழம்பிப் போய் அப்படியே ஒரு நாற்காலியில் சாய்ந்து விட்டார்.

அதிகம் சொல்வதற் கொன்றுமில்லை. மறுநாட் காலையில் பாலசுந்தரம் தற்கொலை செய்து கொண்டுவிட்டதாக செய்தி பரவிற்று. இதைத் தவிர அவரால் ஒன்றும் செய்வதற்கில்லை.

மறுநாட் காலையில் கூட்டம் கூடிற்று. ராமலிங்கத்திற்கு இந்த செய்தி எட்டியதும் மின்சாரம் தாக்கினதுபோல் தோன்றிற்று. அவர் பாலசுந்தரத்திற்கு ஓர் தீங்கு செய்ய விரும்பினாராலும், அதற்காக இவ்விதம் யோசிக்காமல் தற்கொலை செய்துகொள்வார் என்று நினைக்கவேயில்லை. "அட, பாவி மனுஷா! உன் புத்தி இப்படியா போகவேண்டும். இவ்விதம் செய்வாய் என்று எனக்கு தெரிந்திருந்தால் உன் காலில் விழுந்து என் குற்றத்தை ஒப்புக்கொண்டிருப்பேனே. என்றும் ஆறாத ஓர் மனோவியாகூலத்தை எனக்கு உண்டு பண்ணிவிட்டாயே." இவ்விதம் பலவாறாக சிந்தித்துக் கொண்டே பாலசுந்தரத்தின் வீட்டிற்கு வந்தார். அவர் மனதில் பாலசுந்தரத்தின்மேலிருந்த வெறுப்புமாறி ஒருவித புதிய உணர்ச்சி ஏற்பட்டது.

இதற்கு முன் ராமலிங்கம் அடிக்கடி பாலசுந்தரத்தின் வீட்டிற்கு வந்திருக்கிறாராலும் அவர் மனைவியுடன் பேசியறியாதவர். அவள் காலில் விழுந்து கதறி உண்மையை கூற வேண்டுமென்று தோன்றிற்று. பாலசுந்தரத்தின் பிள்ளைகளிருவரும் ராமலிங்கத்தைக் கட்டிக் கொண்டு அழுதார்கள். கூடத்தின் மத்தியில் பாலசுந்தரத்தின் பிணம் கிடத்தப்

பட்டிருந்தது. பக்கத்தில் அவருடைய மனைவியும் பெண்ணும் கதறிக்கொண்டிருந்தனர். இக்காக்ஷியை கண்டு ராமலிங்கமும் மனமுருகிக் கண்ணீர் விட்டு அழுதது ஆச்சரியமேயில்லை.

டாக்டர் வந்து பிணத்தைப் பார்த்துவிட்டு தற்கொலை தான் என்று சொல்லிப் போய்விட்டார். போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் வந்திருந்தார். அவருக்கு ராமலிங்கத்தின்மேல் சிறிது சந்தேகம் இருந்தது. ஆனால் ராமலிங்கத்தின் தோற்றமும் பாலசுந்தரத்திற்கும் அவருக்கும் உள்ள நட்பும் அச்சிறிய சந்தேகத்தையும் விலக்கிவிட்டன. ஆயினும் இன்ஸ்பெக்டர் ராமலிங்கத்திடம் சில கேள்விகள் கேட்டார். ஒரு விதமான முகமாறுபாடும் இல்லாமல், கண்ணில் பெருகிய நீருடன் பதிலளிக்கவே இன்ஸ்பெக்டர் மனதிலிருந்த சம்சயம் அடியோடு விலகிற்று. சிறிது நேரங்கழித்து 'செய்ய வேண்டியகிரியைகளைச் செய்யுங்களென்று சொல்லிப் போய்விட்டார்.

பிறகு ராமலிங்கம் மனதைத் திடப்படுத்திக்கொண்டு கமலாவிடம் பேசலானார்.

"அம்மா! எதிர் பாராமல் இக்கஷ்டம் வந்து விட்டதே. என்ன இருந்தாலும் இந்த பணத்திற்காக இப்படிச் செய்வார் என்று நான் கனவில் கூட கருதவில்லை."

"ஐயோ அதைப்பற்றி பேசி என்ன பயன்; எந்தப் படுபாவி இந்த மாதிரி செய்தானோ அவன் குடும்பமும் இப்படியே நாசமாகட்டும்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட ராமலிங்கத்தின் ஹிருதயமே நின்றுவிடும் போலாகிவிட்டது. இருந்தாலும் தன்னை சமாளித்துக் கொண்டே........"உம்"... ....என்றார்.

"நேற்று அவர் இருந்த நிலைமை கொஞ்சமும் சந்தேகிக்கும்படியாகவே இல்லை. வழக்கம்போல குழந்தைகளுடன் விளையாடினர். சரியாகவே சாப்பிட்டார். கொஞ்சமும் கவலை கொண்டவராகவே தோன்றவில்லை. நான் தான் பணத்திற்கு என்ன செய்வது என்று கேட்டுக்கொண்டே யிருந்தேன். அதற்கு அவர் ஏதாவது வழி செய்து விடலாம் என்றார். கடைசியில் இந்த வழிதான் தோன்றிற்று என்றாள் கமலா.

ராமலிங்கம் அவளுக்குத் தேறுதல் கூறி குழந்தைகளைச் சமாதானப்படுத்தி மேற்கொண்டு நடக்கவேண்டிய காரியங்களைத் தானே நடத்தினர். எல்லாக் கிரியைகளும் ஒழுங்காக நடந்தன. தன் நண்பனுக்குத் தான் செய்த கடுந்துரோகத்திற்குப் பிராயச்சித்தமாக அவன் மனைவி மக்களுக்கு உதவி செய்யத் தீர்மானித்தார். பாலசுந்தரத்தின் மனைவி தன் குழந்தைகளுடன் கிராமத்திற்குப்போகத் தீர்மானித்தாள். அவளுக்கு வேறு உறவினரோ, பணமோ கிடையாது.

இவ்விஷயங்களை யறிந்த ராமலிங்கம் "அம்மணி, நீங்கள் ஓரிடத்திற்கும் போகக்கூடாது. தங்கள் கணவரும் நானும் சொந்த சகோதரர்களுக்கு மேலாக இருந்தோம். சகோதரர்களின் குடும்பங்கள் ஒன்றாக இருக்குமல்லவா? ஆகவே நீங்கள் யாவரும் என் வீட்டிலேயே என் மனைவி மக்களுடன் வசிக்கவேண்டும். உங்களைப் பாதுகாப்பது என் கடமை.'' என்றார். இதைக்கேட்ட கமலா தன் நன்றியைக் கண்ணீரால் வெளியிட்டாள். ராமலிங்கத்தின் மனைவியும் கமலாவிடம் அன்புடன் நடந்து கொண்டாள். தான் செய்த அடாத காரியத்திற்குத் தகுந்த பிராயச்சித்தம் செய்துவிட்டதாக எண்ணி ராமலிங்கம் சமாதானமடைந்தார். அவர் செய்த வேலை என்னவென்று அவருடைய மனசாட்சிக்கும் அந்த சாக்ஷாத் ஈஸ்வரனுக்குமே தெரியும்.

பாலசுந்தரத்தின் புதல்விக்குத் தகுந்த வரனைத் தேடி மணம் செய்து வைத்தார். அவருடைய புத்திரர்களிருவரும் இப்பொழுது காலேஜில் படித்துக்கொண்டிருக்கின்றனர்.

# பாத்திரமறிந்து பிச்சையிடு

பாரமார்த்திகன்

லோகானுபவமுள்ள ஒவ்வொருவரும் "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்னும் பழமொழியை கேட்டிருப்பார்கள். அதன் உத்தம பாவங்களை உணர்ந்தும் அனுபவித்தும் இருப்பார்கள். ஆனால் நடைமுறை வாழ்க்கையில் இதை அனுசரித்து நடப்பவர்கள் ஒரு சிலர் தான். உத்தமமான காரியங்களுக்காக அதில் ஈடுபட்டுள்ளோர்கள் அக்காரியம் சரிவர நடத்துவதற்காக பிறருதவியைத் தேடினால் அவர்களுக்கு வேண்டிய அளவு உதவி செய்ய முன் வருபவர்கள் அதிகமாகவில்லை. அதுகாரணம் பற்றி அந்தக்காரியம் நடத்தக் கூடாமலே போய் விடுகிறது. நிஷ்பிரயோஜனமான, தாத்கால சில்லரை சந்தோஷத்தை அளிக்கக்கூடிய ஓர் காரியத்தில் ஈடுபட்ட ஓர் கூட்டத்தார் அக்காரியத்தை உத்தேசித்துப் பொருளுதவிக்காக வெளியில் சென்றால், அவர்கள் எதிர் பார்த்திருப்பதை விட அதிகமான வசூலுடன் அவர்கள் திரும்புகிறார்கள். ஜனங்களுக்கு மேற்கூறிய விஷயம் தங்களனுபவத்தில் தெரிந்திருக்கும். அதைப்பற்றி அவர்கள் விசனித்தும் இருப்பார்கள். ஒரு சிரேஷ்டமான காரியத்தில் ஈடுபட்ட சாமான்ய ஜனங்களின் முயற்சி பலன் படாமல் போவதையும், வீண் தமாஷுக்காக ஏற்பட்டுள்ள ஓர் காரியத்தில் ஈடுபடும் செல்வாக்குள்ள கனவான்களின் முயற்சி விமரிசையாக நடந்தேறுவதையும் நாம் பார்த்துக் கொண்டே இருக்கிறோம். ஆனால் நல்ல காரியங்களைச் சரிவர நடத்த வேண்டுமென்ற அந்தரங்க ஊக்கமும் யோக்கியதையும் உள்ளவர்களுக்கு ஈசுவரானுக்கிரகம் இல்லாதது பற்றித் தான் நான் கவலைப்படுகிறேன். சுய நலத்தைக்கனவிலும் கருதாது, தான் ஏற்றுக் கொண்ட பொதுக்காரியத்திற்காகத் தன் ஆயுளை அர்ப்பணம் செய்திருப்பவர்களுக்கு ஈசுவரானுக்கிரகம் இல்லையென்றால், இது ஜனங்களின் துரதிருஷ்டமென்றே சொல்ல வேண்டும். பொருள் கொடுத்துதவி செய்ய யோக்கியதையுள்ளோர்கள் தங்கள் பொருளை துர்வினியோகம் செய்கிறார்களே யொழிய நல்ல காரியத்திற்குக் கொடுத்துதவி செய்ய அவர்களுக்கு மனம் வரவில்லை. நல்ல எண்ணம் இருப்பவர்களுக்குப் பொருள் கொடுத்துதவி செய்யும் யோக்கியதை இல்லாமலிருக்கிறது. இது ஜனங்களின் துரதிருஷ்டமா, அல்லது நற்காரியங்களில் ஈடு பட்டவர்களின் துரதிருஷ்டமா?

லக்ஷ்மியின் அருளானது மேற்கூறிய வாறு நல்ல எண்ணங்களுள்ளவர்களிடம் வெகு குறைவாகவும், கிருபணிகளிடம் அதிகமாகவும் இருப்பதை, விவேகிகளும், ஞானிகளும் எவ்வாறு ஆமோதிக்கிறார்களென்று தெரியவில்லை. பாபிகளிடம் லக்ஷ்மிவாசம் செய்வது எந்த நியாயத்தில் கட்டுப்பட்டுள்ளது? லோகோபகாரமான நல்ல காரியங்களுக்குப் பொருளுதவி செய்ய இயல்புள்ளோர் அக்காரியத்திற்கு ஒரு உதவியும் செய்ய மனம் வராமைக்குக் காரணம் அவர்களுடைய அக்ஞானமா? அல்லது கிருபணத்தனமா?

"குப்பை உயர்ந்தது; கோபுரம் தாழ்ந்தது" என்ற பழமொழியை என் வீட்டிலுள்ள பெரியோர்கள் சொல்லிக்கேட்டிருக்கிறேன். அனுபவத்தில் அது எனக்கு இப்போது நன்கு விளங்குகின்றது. இகத்திலாவது, பரத்திலாவது ஓர் பலனையும் தரக்கூடாத காரியங்களும், கல்வி, கலை ஞானம், வேறு எவ்விதத்திலாவது ஓர் யோக்கியதை இவை ஒன்றும் இல்லாத ஜனங்களும், நாட்டில் சிறப்பையும் கீர்த்தியையும் அடைந்து வருவதைப்பார்க்கப் பார்க்க, ஒருபக்கம் ஆச்சரியமும், ஒருபக்கம் துக்கமும் உண்டாகிறது.

இதுவும் ஈசுவரன் செய்யும் விநோதமான லீலை யல்லவா?

# அடை ஜபம்

வ. வேணுகோபாலன்

மாருங்கூரை என்ற கிராமத்தில் நாணு ஒரு மிராசுதார். ஆனால் அந்த கிராமத்தில் இருந்தவர்களெல்லாரும் கொழுத்த வைதீகர்கள் தான்; அவர்கள் ஆசாரமும், நியமும் உடையவர்கள்; வேத பாரங்கதர்கள்; சாஸ்திர வித்பன்னர்கள் பலருண்டு. இவ்வளவ சிறந்த வைதீகர்களுக்கிடையில் நாணுமட்டும், வைதீகத் தொடர்பே இல்லாத ஒரு மிராசுதாராக இருந்தான். ஆசாரமோ நியமமோ ஒன்றும் அவனுக்குக் கிடையாது; வைதீகர்களைக் கண்டால் பரிகாசம் செய்வான். ஸந்தியா வந்தன ஜபம் பண்ணுகிறவர்களைக் கண்டால், 'பைத்தியம் பிடித்தவர்களிவர்கள்' என்று கூறி நகைத்துக் கொண்டே போவான்; வைதீகர்களைக் கண்டால் அவனுக்குச் சுத்தமாகப் பிடிப்பதில்லை.

அதோடல்லாமல், கோவில், குளம் ஒன்றும் நாணுவுக்குப் பிடிப்பதில்லை. தூங்கி எழுந்தால் வயலுக்குப் போவான்; மாடுகளைத் தானே மேய்த்து வருவான்; குளிப்பாட்டுவோன்; சாப்பிடுவான்; தூங்குவான். இவைகள் தான் அவன் தினமும் செய்யும் காரியங்கள். 'இவைகளைத் தானே மனிதன் செய்ய வேண்டும்; வீணாக வைதீகர்கள், 'ஜபம், தபம்' என்று வேஷம் போடுகிறார்கள்' என்பது நாணுவின் அபிப்பிராயம்.

வைதீகத்தில் இவ்வளவு விசுவாசமுள்ள நாணுவை வைதீகர்கள் தமக்கு ஜன்மபகையாகக் கொண்டிருந்தார்கள் என்பதில் ஆச்சரியமொன்றுமில்லை; நாணு வீட்டிற்கே அவர்கள் ஒரு பொழுதும் போவதில்லை; ஆனால் நாணுவும் 'விசேஷ காரியங்கள்' ஒன்றும் செய்வதில்லை; வைதீகர்கள் எல்லோரும் நாணுவை விலக்கி வைத்திருநதார்கள்; அவனோடு பேசுவது கூடக் கிடையாது. அவனை ஒரு மனிதனாகவே அவர்கள் கருதவில்லை; ஆடு மாடுகளோடு ஒன்றாகவும் எண்ணவில்லை; 'ஆடுமாடுகள் நான்கு காலல் நடக்கின்றன; நாணு இரண்டு காலால் நடக்கிறான். இவ்வளவே, அவனுக்கும் அவைகளுக்கும் வேறுபாடு என்று எண்ணியிருந்தார்கள்.

ஆனால், நாணுவின் மிதமிஞ்சிய உபத்திரவங்களை வைதீகர்களால் தாங்க முடியவில்லை; "பாபம், பாபம்! எங்கேயிருந்தோ இந்த அனாசாரச் சண்டாளன் நம் ஊரில் வந்து பிறந்தானே! இவனை அடக்கு வாரில்லையே" என்று வைது கொண்டிருந்தார்கள். வைதீகர்களில் அனேகம் பேர்கள் நாணுவைக் கண்டாலே ஒதுங்கிச் செல்வார்கள். அவன், ஏதாவது பேசினாலும் அவர்கள் பதில் பேசாமல் போய் விடுவது. வழக்கம் நாணுவிடம் பயம் கொள்ளாத வைதீகர்களே கிடையாது; அவன் எந்த விஷயத்திலும் கிண்டலாகப்பேசுவது தான் அவர்கள் பயத்திற்குக் காரணம்.

வைதீகத்தில் சேராத நாணு லௌகீகம் தெரிந்தவனோ என்றால் அதுவும் இல்லை; காபி குடிப்பதில் மட்டும் லௌகீகத்தைக் கொண்டாடினான்; உண்மையாக அவன் 'வடிக்கட்டின முட்டாள்' என்பதை யாரும் உணரவில்லை.

o o o

ஒரு நாள் திடீரென்று நாணுவுக்கு, இருமலும், ஜுரமும் வந்து விட்டது; அது ஒரு சோதனையாகவே இருந்தது. ஸ்மரணையற்றுப் படுக்கையாய்க் கிடந்தான்; பாவம்; அவனுக்கு, அவன் மனைவியைத்தவிர வேறு துணை ஒருவருமில்லை; பக்கத்திலே அவனுக்குப் பிரியமான, எருமையும், அதன் கன்றுக்குட்டியும், கட்டப்பட்டிருந்தது; நாணுவுக்கு வர வர உடல் மெலிவடைந்தது. ஊரில் ஒருவரும் எட்டிக் கூடப்பார்க்கவில்லை.

"ஐயோ! ஆரம்பத்திலிந்தே, நான் தான் சொன்னேனே? நீங்கள் கேட்டேளா? அது தான் உங்களை இப்படிப் படுத்துகிறது." என்றாள் அவன் மனைவி.

"என்னடீ சொல்றே நீ; விஷயத்தைச் சொல்லேன்; எனக்கு ஒண்ணும் புரியல்லே; என்ன பண்ணச்சொல்றே" என்று இருமிக் கொண்டே நாணு பதில் சொன்னான்.

"ஆமாம், எத்தனை தரம் சொல்றது; ஜபமா, மந்த்ரமா ஒண்ணும் கிடையாது." என்றாள் மனைவி.

"ஓகோ அதைச் சொல்றையா? ஆமாம்; நான் ஏதாவது செய்யலாம்னுதான் நினைச்சேன்; ஒரு வைதிகனவது எட்டிப் பார்க்க மாட்டேன் என்று இருக்கானே!" என்றான் நாணு.

"ஆமாம்; வைதீகன் வந்து...உங்களைப் பார்க்கிறன்; உங்களைக் கண்டாலே எல்லோரும் ஒடிப் பதுங்குகிறர்களே! நீங்கள் போய்த் தான் மன்றாடிக் கேட்டுக் கொள்ள வேண்டும்" என்றாள் மனைவி.

"ஆமாம்; யாரிடம் போகலாம் சொல்லு பார்ப்போம்" என்றான் நாணு.

"என்னைக் கேட்கிறேளே! சாமு கனபாடிகள் ரொம்ப ஆசார சீலர்; அவரிடம் ஏதாவது கேட்டுக் கொள்ளுங்களேன்; போனு உடனே உங்களை உட்காரவைச்சு சொல்லுவாரா? என்று இழுத்துப் பேசினுள் மனைவி.

"அதுக்கு என்ன பண்றது? எல்லாத்தையும் இப்பவே சொல்லேன்" என்றான் நாணு.

"போய், ஸ்வாமிக்கு நமஸ்காரம் பண்ருப் போல கனபாடிகளுக்கு நமஸ்காரம் பண்ணுங்கோ" என்றாள் மனைவி. மனைவியின் புத்தி மதிப்படி, வைதிகத்தில் நம்பிக்கை கொண்ட நாணு, எழுந்திருந்து மடிவேஷ்டியைக் கட்டிக் கொண்டு, விபூதியை நன்ருகப் பூசிக்கொண்டு சாமுகனபாடிகள் வீடடை நோக்கிப் புறப்பட்டான். போகும் போதே மறைந்து மறைந்து ஒருவர் கண்ணிலும் படாமல் போனுன்.

சாமுகனபாடிகள் தம் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து ஏதோ ஜபம் செய்து கொண்டிருந்தார். நாணு அங்கே வேகமாய்ச் சென்று அவருக்கு ஒரு நமஸ்காரம் செய்து விட்டுத் திண்ணையில் ஓரமாய் உட்கார்ந்து கொண்டான் சாமுகனபாடிகளுக்கு நாணு அவ்வாறு செய்ததைக் கண்டதும் தூக்கி வாரிப் போட்டது.

"என்னடா! வேஷம் போடறே; இங்கே உனக்கென்ன வேலே? நீ நமஸ்காரம் கூடவா பண்ணுகிறய்?" என்று கூறிக் கொண்டே கனபாடிகள் கோபத்தோடு எழுந்து நின்றார்.

"கனபாடிகளே! க்ஷமிக்கணும்; நான் ரொம்ப காய்ச்சலாய்க் கிடந்தேன்; ஏதோ தெரியாத்தனமாக இவ்வளவு நாளாய் அனுசாரமாய் இருந்து விட்டேன்; என்னை நல்ல வழிக்குக் கொண்டு வருபவர்களுமில்லே; நீங்கள் தான்......" என்றான் நாணு.

"டேய், உன்னைப்பற்றித் தெரியும் எனக்கு; என்னிடம் வேஷம் போடாதே. உண்மையாக உனக்கு, வைதிகத்தில், நம்பிக்கையாவது? வாவாவது? சீ ஓடிப்போ" என்றார் கனபாடிகள.

நாணு அதைப் பொறுத்துக் கொண்டு, "பெரியவாள்; அப்படிக் கோபிச்சுக் கொள்ளக் கூடாது; நான் இப்பொழுது நம்பிக்கையோடு தான் வந்திருக்கிறேன், நீங்கள் நம்பத்தான் வேண்டும்; இது பரிகாஸமில்லே." என்று கூறிக் கொண்டே மறுபடியும் நமஸ்காரம் செய்தான்.

"ஆமாம் அதற்காக நான் என்ன செய்யக் கூடியது?" என்றார் கனபாடிகள்.

"ஏதாவது ஜபம் சொல்லிக் கொடுத்து செய்ய வேண்டிய விதத்தை நீங்கள் சொன்னுல் நான் செய்கிறேன்; உங்களைத் தவிர வேறு வழியில்லே" என்றான் நாணு.

சாமு கனபாடிகள் பார்த்தால் ரொம்ப வாது போல இருப்பார். ஆனல் நல்ல தந்திரசாலி. நாணுவிடம் அவருக்கு உண்மையாகத் துளிக்கூட நம்பிக்கை உண்டாகவில்லே; நன்ருக அவனை ஏற இறங்கப் பார்த்தார்; "ஏதோ யோஜனை செய்து நம்மை ஏமாற்றிக் கேலி பண்ணுவதற்காகவே இவன் வந்திருக்கிறன்; இவனை நம்பி நாம் ஏமாந்து போகக்கூடாது; நாம் இவனை நன்ருக அவமானப் படுத்தவேண்டும்' என்று எண்ணி ஒரு வகையாகத் தீர்மானம் செய்து கொண்டார்.

"டேய் நாணு! நீ எப்படியாவது நல்ல வழியில் திரும்பினுல் போதும் என்று உனக்குச் சொல்லித் தருகிறேன். ஆனல் வெளியில் யாரிடமும், நான் சொல்லிக் கொடுத்ததாகச் சொல்லி விடாதே; என்னை வைவார்கள்; தெரிந்ததா?" என்றார் கனபாடிகள்.

"கனபாடிகளே; அப்படி எண்ணவே வேண்டாம்; ஸத்தியமாக யாரிடமும் சொல்லவில்லே; நீங்கள் அதைப் பற்றிக் கவலேப்பட வேண்டாம்" என்றான் நாணு.

"டேய் நாணு, நீ இவ்வளவு நாளாக, அசட்டுத் தனமாக, 'ஜபம்' என்றுல் ஏதோ பட்டினி கிட்டினி என்று பயந்து கொண்டு பேசாமலிருந்து விட்டாய். ஜபம் செய்வதனுல் ரொம்ப ஸௌகர்யமுண்டு; அதனுல் தான் நாங்களெல்லாம் உரிய காலங்களில், தவருமல் செய்கிறேம். நான் சொல்கிறபடி செய்; தெரிந்ததா?

"ஆஹா, அப்படியே செய்கிறேன்" என்று மிகக் கவனமாய்க் கேட்டான் நாணு.

“ஜபம் செய்வதில் அதிகமாக மந்திரம் ஒன்றும் கிடையாது. ‘ஓம்’ என்பது மாத்திரம் தான்; ஆனுல் அதற்குக் கணக்கு உண்டு. தினமும், காலே, நடுப்பகல், சாயந்திரம் மூன்று வேளையும் செய்ய வேண்டும்; அதற்காக, முதல் நாள் ராத்திரியே, மூன்று வேளைக்குமாக, வேளை ஒன்றுக்கு மூன்று வீதம் ஒன்பது அடைகளைப் பெரிதாகத் தட்டச் சொல்லி அவைகளை மூன்று, 108 பிள்ளல்களாகத் துண்டுபண்ணி, மூன்று பொட்டலங்களாகக் கட்டி மடிசஞ்சியில், மடிவேஷ்டியோடு கட்டி வைக்கவேண்டும். அதைக் காலேயில் எடுத்துச் சென்று ஆற்றிற்குப் போய் ஸ்நானம் செய்து மடிவேஷ்டியைக் கட்டிக் கொண்டு, உட்கார்ந்து, 108 பிள்ளலுள்ள ஒரு பொட்டலத்தை எடுத்து மடியில் வைத்துக் கொள்ளவேண்டும்; மேல் உத்தரீயத்தை எடுத்து நன்ருக மறைத்துப் போர்த்திக்கொண்டு, ஒவ்வொரு பிள்ளலாக வாயில் போட்டு, வாய் திறவாமல், ‘ஓம், ஓம்’ என்று நினைத்துக்கொண்டே மென்று சாப்பிட வேண்டும். பிறரோடு பேசவே கூடாது; 108 பிள்ளலும் ஆனபின்பு, ஆசமனம் செய்து, நமஸ்காரம் பண்ணவேண்டும்; இதேபோல் மூன்று வேளையும் செய்ய வேண்டும். ஆனுல், இந்த ரகஸ்ய ஜபத்தை நான் சொல்லிக் கொடுத்ததாக ஒருவரிடமும் கூறி விடாதே” என்று நிதானமாக நாணுவுக்கு உபதேசம் செய்தார்.

“அடாடா! இப்படி ஜபம் செய்யணும் என்ருல் நான் தவருமல் செய்வேனே! இவ்வளவுதானு கனபாடிகளே, ரொம்ப ஸந்தோஷம். பாருங்கள் இனிமேல் தவருமல் ஜபம் செய்கிறேன்” என்று ஒரு நமஸ்காரம் செய்துவிட்டு வீட்டிற்கு வந்தான்.

தன் மனைவியிடம் விஷயம் முழுவதையும் கூருது, “உபதேசம்” செய்து கொண்டேன்; இனி தினந்தோறும் ஜபம் செய்யப்போகிறேன்” என்று கூறி, அன்றிரவு, கனபாடிகள் கூறியபடி, தன் மனைவியை ஒன்பது அடைகள் தட்டச் சொன்னுன்; மனைவியும் அவன் சொன்னபடி தட்டிக் கொடுத்தாள்; நாணு அதை மறைவில் எடுத்துச் சென்று மடிசஞ்சியில் வேஷ்டியோடு கட்டிவைத்தான்; காலேயில் எழுந்ததும், அதை எடுத்துச் சென்று கனபாடிகளின் உபதேசப்படி செய்தான்.

அன்று முதல், நாணு தினந்தோறும் ஜபம் செய்யத் தவறுவதில்லே. இதைக் கண்ட வைதிகர்களெல்லோருக்கும் மதிப்பு உண்டாயிற்று. சாமு கனபாடிகள் மட்டிலும் நாணுவைக் கடைக்கண்ணுல் பார்த்துக் கொண்டே செல்வார்.

இப்பொழுது நாணு ஒரு சிறந்த வைதிகனுகி விட்டான். நாணுவிடம் உண்டான அபாரப் பிரியத்தால் வைதிகர்களெல்லாரும் ‘வைதிக ரத்னம்’ என்று அவனுக்குப் ‘பிருது’ கொடுத்து அழைக்கலானுர்கள். வைதுகொண்டிருந்த வைதிகர்களே அப்படித் தன்னைக்கூப்பிடுவதைக் கண்ட நாணுவுக்கு அளவிலாத சந்தோஷமுண்டாயிற்று. தனக்கு ஏற்பட்ட மதிப்பிற்குக் காரணமான சாமு கனபாடிகளை மனமாற மனதிற்குள்ளேயே வாழ்த்திக் கொண்டிருந்தான்.


அவ்வூர் சாஸ்திரிகள் ஒருவர் தாம் செய்யும் சிரார்த்தத்திற்கு, ‘வைதிக ரத்னம்’ நாணுவை, பிராமணராக வரிக்க எண்ணி ஒரு நாள் காலேயில் ஆற்றங்கரையில் நாணு ஜபம் செய்யும் இடத்திக்குச் சென்ருர். நாணு மவுனமாக ஜபம் செய்து கொண்டிருந்தான். மந்திரம் ஜபிப்பதற்கு அறிகுறியாக அவன் வாய் மெதுவாக அசைந்துகொண்டிருந்தது. வேஷ்டியை நன்ருய் போர்த்திக்கொண்டு உட்கார்ந்திருந்தமையால் அவன் அடை ஜெபம் செய்வதை, சாஸ்திரிகள் அறிந்துகொள்ளவில்லே.

“நாணு சாஸ்திரிகளே! ஜபம் செய்கிறுப்போலிருக்கிறது, ஒரு காரியமாய் வந்தேன்.” என்ருர் வந்த சாஸ்திரிகள். நாணுவுக்கு வாயில் அடைப்புள்ளல் நிரம்ப இருந்தமையாலும், பேசக்கூடாது, என்று கனபாடிகள் கூறியிருப்பதனுலும், அவன் வாயைத் திறவாமல் கொஞ்சநேரம் இருங்கள் என்று கையால் ஜாடை காண்பித்தான். சாஸ்திரிகளுக்கு வேறு காரியமிருந்தமையால், நாணுவை சீக்கிரம் ஜபத்தை முடிக்கும்படி வற்புறுத்தினுர். நாணுவும் முடிந்தவரையில் ஜாடை காண்பித்தான். சாஸ்திரிகள் கேட்கிற வழியால்லே.

“கொஞ்சம் சீக்கிரம் ஜபத்தை முடித்துவிடும், எவ்வளவு நேரமாய் காத்திருப்பது?” என்ருர் சாஸ்திரிகள்.

நாணுவுக்குக் கோபம் வந்துவிட்டது. ஜபமோ கொஞ்சம் பாக்கியிருந்தது.

(43—ம் பக்கம் பார்க்க.)




## அறிவிப்பு

1941, டிஸம்பர் 31 தேதியோடு முடியும் வருஷத்தில் இக்கம்பெனியின் மொத்த வியாபாரம் ரூ. 1,66,00,000க்கு மேல் ஆகியிருக்கிறது. இந்தத் தொகையில் ரூ. 13,57,524 "நிரந்தர சாச்வத நிதியின்" கீழ் அஷ்யூர் செய்யப்பட்டிருக்கிறது. இதை நம் பாலிஸி ஹோல்டர்களுக்கும், நேயர்களுக்கும், ஏஜெண்டுகளுக்கும் ஸந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்**

(தலைமை ஆபீஸ் :—கல்கத்தா) (ஸ்தாபிதம் 1906)

பிராஞ்சு ஆபீஸ் :

**நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்,**

362, சைனா பஜார் ரோடு, எஸ்பிளனேட், மதராஸ்.

ஸப் ஆபீஸ்கள் : 171, புதுத் தெரு, மதுரை. 5, கெம்பகோடா ரோட், பெங்களூர்.

# அ ஹி ம் ஸை

**கா. சி. வேங்கடரமணி**

## I

இந்த நெருக்கடியில் நமது நாட்டில் அஹிம்ஸையை நிலைநாட்ட மறுபடியும் அசோக மகாராஜனைப்போல் ஒருவர், ஒரு தீர்க்கதரிசி நமது அரசியலில் முன் வரவேண்டும். அவர் தான் மஹாத்மா காந்திக்கு உண்மையான கையாள் ஆவர். மலைச்சாரல்களிலிருந்து வரும் வெள்ளத்தை ஒரு ஜீவநதியாகச் செய்ய எப்படிப் படுகையும், ஒரு லயன் கரையும் அவசியமாக வேண்டப்படுகிறதோ, அப்படியே, மஹாத்மா காந்தியிடமிருந்தும் வெள்ளம்போல் பெருகி வரும் புத்துயிர் அளிக்கும் அஹிம்ஸையைக் காரிய ரூபமாக ஆக்க அசோகன்போல் அரசியலில் நமக்கு ஒரு மன்னன் வேண்டும். ஜன நாயக மந்திய சர்க்காரில் பிரதம மந்திரி வேண்டும். அப்பொழுது தான் அஹிம்ஸை உண்மையில் காரிய ரூபமாய் மாறி வெற்றியடையும். இதையறிந்து தான் நாம் தொண்டு புரியவேண்டும். சட்டதிட்டம் போடவேண்டும்.

## II

ஹிம்ஸையால் ஒரு காரியத்தில் வெற்றி பெறவும், ஒரு யுத்தத்தில் ஜெயிக்கவும் அந்த ஹிம்ஸையைச் சேர்த்துத் திரட்டி ஒரு கட்டுப்பாட்டிற்கடக்கி காரியத்தையோ, யுத்தத்தையோ ஜெயிப்பதுபோல பூர்ண அஹிம்ஸை மூலமாக நாம் வெற்றியடைய வேண்டுமென்றால் அஹிம்ஸையையும் அப்படிச் சேர்த்துத் திரட்டிக் கட்டுப்பாட்டிற்கும் கொண்டு வரவேண்டும். இது தான் நாம் செய்யவில்லை. சொல்லை முழுதும் செயலாக்கவில்லை.

நமது நாட்டிலுள்ள ஏழு லக்ஷம் கிராமங்கள் ஒவ்வொன்றிலும் பொறுக்கியெடுத்த அஹிம்ஸைத் தொண்டர்கள் பத்துப் பேர்வழிகளாவது அஹிம்ஸா யுத்த வீரர்களாக நாமம் போட்டு நிற்க வேண்டும். இப்படி ராமேச்வரம் முதற் கொண்டு ரிஷீகேசம் வரை அஹிம்ஸா யுத்த வீரர்களை, மஹாத்மா காந்தி, சென்ற 20 வருஷகாலத்தில் அமைத்து வைத்துக் கட்டுப்பாடு செய்து தொண்டு செய்வதில் இறக்கி வைத்திருந்தால், இப்பொழுது கொடூரமாய் நடக்கும் கீழ் நாட்டு யுத்தத்திற்கு ஸரியான எதிர்ப்பாக இருக்கும். கக்கும் விஷத்திற்கு மாற்றுன அமிர்தமாயிருக்கும். ஆனால் அப்படி 'ஆர்கனைஸ்' செய்யவில்லை.

அரசியல் காரணங்களாலும், தெய்வீக காரணங்களாலும், மிக்க பாடுபட்டும் இந்தப் பெரிய கட்டுப்பாட்டை நமது நாட்டிலுள்ள ஏழு லக்ஷம் கிராமங்களிலும் மஹாத்மா காந்தியால் அமுலுக்குக் கொண்டுவர முடியவில்லை. அரேபியன் கடலில் வீணுய்ப் போகும் வெள்ளத்தை மேற்குத் திசையிலிருந்து கிழக்கு திசைக்குப் பகீரதன்போல் ஒரு புது கங்கையாகத் திருப்பிவிட்டாரே யொழிய, மேற்கொண்டு அந்த வெள்ளத்தை வாய்க்காலாகப் பிரித்துக் கரைகட்டி ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு வயலுக்கும் திருப்பிக் கொண்டுபோய் பாய வைக்க முடியவில்லை.

## III

ஆகையால் இந்த நெருக்கடியில் நமது நாடு முன்னேற்றமடைந்து சுயராஜ்யம் பெற்றுப் பிறருக்கும் அன்புடன் தொண்டுபுரிய ஒரே ஒரு வழி தானிருக்கிறது. அதாவது, ஹிம்ஸை வழியில் பலத்தையும், வீரத்தையும், வெற்றியையும் பெற்று அந்த வெற்றி

யைச் சமாதானக் காலத்திலும், பிறகும் அசோக மகாராஜனைப் போல் அஹிம்ஸைக்கே தொண்டு புரியும்படி, மேற்சொன்ன வழியில், வகுத்துப் பிரித்துப் பாடுபடவேண்டும். இந்த வழியிலும் அஹிம்ஸா முடிவு லக்ஷ்யமாகக் கைவிடாமல், ஹிம்ஸையில் பாடுபட்டாலும் கூட, முடிவில் நாம் அஹிம்ஸா வெற்றியடையலாம்.

சூரிய பகவானைப்போல் காமக்குரோத மன்னனியில் பிறரை அழிக்காமல் உஷ்ணமும், வெளிச்சமும் பிறருக்குக் கஷ்ட நிஷ்டூரமும் நாசமுமில்லாமல் உலகிற்கு கொடுப்பது ஓர் உயர்தர அஹிம்ஸா வழி. விறகுக் கட்டையை எரித்துப் புகையைக் கிளப்பி முடிவில் உஷ்ணமும் வெளிச்சமும். கொடுப்பது மற்றொரு வழி ; இது ஹிம்ஸையிலிருந்து பிறக்கும் அஹிம்ஸா வழி. பார்வைக்குப் பேதமிருந்தாலும் இதில் உண்டான உஷ்ணமும் வெளிச்சமும் சூரிய வெளிச்சத்தின் ஒரே இனத்தையே சேர்ந்தது. அல்லவா ?

## IV

ஆகையால் மஹாத்மா காந்தி திட்டம் போட்டபடி நமக்கு உத்தமமான அஹிம்ஸை, சூரிய பகவானின் வெளிச்சமும் உஷ்ணமும்போல் இப்பொழுது கிடைக்காவிட்டாலும், ஹிம்ஸை மூலமாகப் பிறகு கிடைக்கக் கூடிய ஒரு சாந்தத்தையும் சமாதானத்தையும் நாம் அடையலாம். இந்த முறையை அரசியலில் நாம் உடனே கையாள வேண்டும். அவ்விதம் கையாண்டால் தான் இந்த நெருக்கடியில் நமக்கு ஏதாவது கொஞ்சம் பலமும் பயனும், சுயேச்சையும் ஏற்படும். இப்படிச் செய்ய இப்பொழுது கைதவறினல், இந்தப் பாரத நாட்டிலுள்ள நாற்பது கோடி ஜனங்களும் நாற்பது கோடி கொசுவுக்கும் கீழ்ப்பதவியை அடைவார்களென்பது நிச்சயம். ஏனென்றல் கொசுவாவது சந்தோஷம் வந்தால் பாடும் பசியெடுத்தால் கடிக்கும்.

## அறிவிப்பு.

அச்சாபீஸ் மாற்றப்பட்டமையால், ஜனவரி மாதத்தில் வெளி வரவேண்டிய 'பாரத மணி' சற்றுக் காலதாமதத்துடன் வெளி வர வேண்டியதாயிற்று. இனிமேல், பிப்ரவரி மாதம் முதற்கொண்டு ஒவ்வொரு மாதமும் காலதாமதமில்லாமல் பத்திரிகை வெளிவரும் என்பதைப் பாரதமணி வாசகர்களுக்கு விஞ்ஞாபித்துக் கொள்கிறேம்.

மானேஜர்.

## அறிவிப்பு.

மாதந்தோறும், உரியகாலத்தில், பாரத மணி, கிடைக்கப் பெறுத வாசகர்கள், உடனுக்குடன் அதைத் தெரிவித்துக் கொள்ளுமாறு வேண்டுகிறேம். ஒரு மாதத்திற்குரிய பத்திரிகையை அந்த மாதத்தின் முப்பது தேதிகளுக்குள் தெரியப் படுத்தினல்தான் அனுப்ப இயலும்.

மானேஜர்.

## பாடம் 14

குழந்தை மணி, விளையாட்டுப்போல நாம் இருவரும் சேர்ந்து இந்தப் பதிமூன்று பாடங்களில், பல விஷயங்களைத் தெரிந்து கொண்டு விட்டோம். நீயும் ஊக்கத்துடன் கவனித்துப் பல கேள்வி களைக் கேட்டு விஷயங்களைத் தெளிவாய்த் தெரிந்துகொண்டிருக் கிறாய்.

பொங்கல் சமயமும் நெருங்கிவிட்டது. உனக்கு ஒரு மாதம் லீவு வேண்டாமா? இந்த வருஷம் சங்கராந்திக்கு உன்னை உன் அக்காவும் அத்திம்பேரும் தங்கள் ஊருக்கு வரவேண்டுமென்று வெகு நாளாய் அழைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

“ திருவாலங்காட்டுக்கா ” வென்று குதூகலத்துடன் மணி கேட் டான்.

“ ஆமாம், திருவாலங்காட்டுக்குத்தான். காவேரிக்கரையோரம். நீ ஒரு மாதத்திற்குக் கிணற்றில் ஜலம் எடுத்துக் குளிக்க வேண்டாம். காவேரியில் நீந்தி விளையாடலாம். சுழலிட்டுச் சிரித்துஓடும் காவேரி யுடன், நீயும் ஒரு புஷ்பம்போல மிதந்து விளையாடலாம். திருவாலங் காட்டுக் காவேரியில் பயமேயில்லை. அவ்விடத்துக் காவேரியில் ஆழமேயில்லை. மேட்டூர் அணை கட்டிய பிறகு ஜலத்தை அளந்து வேண்டிய அளவு தானே விடுகிறார்கள்—பட்டணத்துப் பால்க்காரர் போல்.”

மணி கையைக் கொட்டிக் குதிக்க ஆரம்பித்துவிட்டான்.

நீ இப்பொழுதே நம் வில் வண்டியைக் கட்டிக்கொண்டு வண்டிக் காரன் முருகனோடு தனியாகவே உல்லாஸமாகப் போய் வா.

“ அப்பா, நான் வரும்போது அக்காவையும், அத்திம்பேரையும் அழைத்து வரட்டுமா ?”

“ அவசியம் அழைத்து வா.”

ஊருக்குப் போகுமுன் ஒரு வார்த்தை. இப்பொழுது குழந்தை மணி, நீ இதுவரையில் இந்த இரண்டு பாலபாடத்திலும் தெரிந்து கொண்டவைகளைப் பற்றிச் சுருக்கமாய்ச் சொல்லுவாயா ?

மணி சற்றுத் தயங்கினான்.

“நான் செல்லுகிறேன் கேள். சிருட்டியில் உள்ள பலவிஷயங்களைப் பற்றி நாம் இது வரையில் கொஞ்சம் தெரிந்து கொண்டோம். செடி கொடிகள் முதற் கொண்டு மானிடசாதி வரையிலுள்ள சீவராசிகளைப் பற்றியும், அவைகளின் இயற்கைக் குணங்களைப் பற்றியும் நாம் பொதுவாய்த் தெரிந்து கொண்டிருக்கிறோமல்லவா?

வீட்டிலிருக்கும் ஆடுமாடுகளைப் பற்றியும், காட்டிலிருக்கும் சிங்கம் புலிகளைப் பற்றியும், நீரிலும் நிலத்திலும் ஓடியாடும் பலவித ஜந்துக்களைப் பற்றியும், பலவித மரம் செடி, கொடிகளைப் பற்றியும் பொதுவாய் நாம் ஆராய்ந்தோம். இது இப்பொழுது போதும்.

சந்தோஷமாக உன் அத்திம்பேரின் வீட்டிற்குப் போய் ஒரு மாஸம் இருந்துவிட்டுப் பிறகு நீ திரும்பி வந்தவுடன் மூன்றாவது பால பாடத்தையும் ஆரம்பிப்போம்.

விடுமுறை நாட்களில் புஸ்தகத்தைப் பற்றியும், பள்ளிக் கூடத்தைப்பற்றியும் நினைக்காதே. தாய்ப்பாலருந்திய கன்றுக் குட்டி போல் துள்ளி விளையாடு.

மணி.

---

(38-ம் பக்கம் தொடர்ச்சி)

“அட ஓய்! இன்னும் நாலு புள்ளல் தானே பாக்கி இருக்கிறது; அதற்குள் பிராணனை வாங்கி விடறீரே!” என்று அடையை மென்றபடி கூறினான்.

சாஸ்திரிகள் உடனே திடுக்கிட்டு அவன் வாயைப் பார்த்தார். அவன் வாயில் அடைமா நன்றாகத் தெரிந்தது. கையிலும் நான்கு அடைப் புள்ளல்கள் இருந்தன; அவர் பிரமித்துப் போய் சற்று நின்றார்;

“அட மஹா பாபீ; சண்டாளா! நீ ஜபம் செய்வதாக வேஷமா போடுகிறாய்? அடே! அடையும், தோசையும் பலகாரம் பண்ணுவதா ஜபம்? துரோகி! உன்னை எல்லோரும் நம்பி வைதிக ரத்னமென்று பட்டம் கொடுத்து விட்டார்களே உன்னை, நான், சிரார்தத்திற்குப் பிராமணனாக வரித்தால் என் பிதிருக்கள் நிச்சயமாய் கரையேறி விடுவார்கள்; அடே உன்னை ஈச்வரனே தண்டிக்க வேண்டும்” என்று வசைமாரி பொழிந்து கையில் இருந்த குடத்து ஜலத்தை அப்படியே நாணு தலையில் கொட்டி விட்டுத் திரும்ப்பி பார்க்காமல் சென்று எல்லோரிடமும் விஷயத்தைச் சொல்லிவிட்டார்.

நாணுவுக்கு, சாமுகனபாடிகள் மீது கோபமும் தாபமும் உண்டாயிற்று. கனபாடிகள் தன்னை ஏமாற்றி அவமானப் படும்படி செய்ததை யெண்ணி, அவரை வைது கொண்டே வீடு சென்றான். சாமுகனபாடிகள், அது மூதல் நாணுவின் கண்ணிலேயே தென்படுவதில்லை. அவனும் அன்று முதல் பழைய நாணுவாகவே ஆகிவிட்டான்.


“லங் க்யூர்”

[பவழ பஸ்பம் பூண்டு, ஆடாதொடை இவைகளின் சத்து உள்ளது]

ஆரம்ப க்ஷயரோகம் தீரும்

ஒரு மாத மருந்து விலை ரூ. 2.

வி. பி. மூலம் ரூ. 2–7–0

தன்வந்திரி மிஷின்

130, பெரிய தெரு

திருவல்லிக்கேணி மதராஸ்.

# தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனது

ய மகாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ., பி.எல்.

பாரத யுத்தத்தில் த்ரோணருக்குப் பின் கர்ணன் ஸேனாபதியானான். சல்யனை ஸாரதியாக ஏற்படுத்திக்கொண்டு போர் முனைக்கு வந்தான். நிகரற்ற வில்லாளியான அவனுக்கு அர்ஜுனனே எதிரியானதால் கிருஷ்ண ஸாரத்யத்துடன் அர்ஜுனன் அவனை எதிர்த்தான். வெகு காலமாக ஒருவருக்கொருவர் வைரம் வளர்த்தித் தேக்கி வைத்திருந்த வீராவேசம் வெளியில் வீசியது. அதிபயங்கரமான அஸ்திரங்களை இருவரும் பிரயோகித்தார்கள். ஆச்சரியத்துடன் தேவர்களும் மனுஷ்யர்களும் காக்ஷி கண்டு கொண்டிருந்தார்கள். அங்கங்கள் அறுந்து விழுந்த யானை குதிரைகளாகிற கரைகளின் நடுவே, மஜ்ஜா மாம்ஸாதிகளான சேறு நிறைந்த, மானிடத் தலைகளாகிற கற்கள் மீது, எலும்பு மேடுகளின் இடையே, மடிந்த வீர சரீரங்களாகிற மரங்களை இழுத்துக் கொண்டு, அவிழ்ந்த தலைப்பாகைகள் உதிர்ந்த முத்துமாலைகளாகிற நுரைக் கும்பல்களோடு கூடிய, அம்பு முறிந்த வில்களாகிய மீன்கள் நீந்தும் ரக்த வெள்ளம் பெருகியது. வீரர்கள் இருவரும் வர்ஷிக்கும் அஸ்திரங்களின் ஜ்வாலைகளால் ஆகாயம் பற்றி எறிந்தது. புகைப்படலம் பரந்து திக்குகளை அளாவியது. அஸ்திரங்கள் பறப்பது தென்பட்டதேயொழிய அவைகளை எடுப்பதும் தொடுப்பதும் யாருக்கும் புலப்படவில்லை. "கர்ணா நல்லது. அர்ஜுனா நன்றாய்ப் பிரயோகித்தாய்" என்றிவ்வாறு வீரர்களின் த்வனிகள் நடுவே எழும்பின.

இவ்விதம் கோரமான யுத்தம் நடக்கும்போது குரு சாபம் பெற்ற கர்ணனுடைய ரதத்தின் கால் பூமியில் பதிந்தது. அப்போது அர்ஜுன பாணங்களைத் தவிர்க்கவல்லவனாகாத கர்ணன் மிக்க ச்ரமப்பட்டான். மர்மங்களில் பாணங்கள் தைத்துக் கொண்டன. அதையும் லக்ஷ்யம் செய்யாமல் யுத்தம் செய்தான். ஆனாலும் சிறிது நேரத்தில் தடதடத்துப் போய் கோபத்தினால் சிவந்த கண்களில் நீர் ததும்ப அர்ஜுனனை உரக்கக் கூவி "சற்றுப்பொறு இந்த ரதக் காலை நிமிர்த்துக் கொண்டு யுத்தம் செய்கிறேன். யுத்த கால நீதியைப் பாராட்டு" என்று ப்ரார்த்தித்தான்.

அவனுக்கு க்ருஷ்ணன் உரைத்த பதில் "கர்ணா! உன்போன்ற நீசர்கள் ஆபத்துக்காலத்தில் தர்மத்தைக் கோருவது ஸகஜம் தான். ஏக வஸ்திரம் தரித்த த்ரௌபதியை ஸபை நடுவே இழுத்து அவமானப்படுத்தியபோது உனக்கு தர்மம் ஞாபகத்திற்கு வரவில்லையே! அடே யுதிஷ்டிரனை கபடமாகச் சூதாட்டத்தில் ஜயித்து ராஜ்ய துவம்சம் செய்தபோது தர்மம் எங்கே போனது! பீமன் சிறுவனாயிருந்த போது பாம்பினாலும் விஷத்தாலும் அவனைக் கொல்ல நினைத்தீர்களே. அப்போது தர்மம் ஏன் நினைவுக்கு வரவில்லை! அரக்கு மாளிகையில் பாண்டவர்களை வைத்துக் கொளுத்தினீர்களே அன்று தர்மம் எங்கிருந்தடா! பதின்மூன்று வருஷம் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு வனவாஸம் செய்து திரும்பிய பாண்டவர்களுக்கு மீண்டும் ராஜ்யமில்லை என்று சொன்னவர்களுக்கு என்ன தர்மம் உதவுமடா? வெட்கமில்லாமல் தர்மம் பேசுகிறாயா." இதைக்கேட்டு கர்ணன் பாம்புபோல் சீறினான். குரு சாபத்தினால் அவனுடைய அஸ்திரங்கள் பலவும் காலத்தில் மோசம் செய்பவன ஆனாலும் அவன் ஸ்வயமாய் தபஸ் செய்து அடைந்த நாகாஸ்திரம் ஒன்று வீண் போகாது. அதற்கு அர்ஜுனனை அக்கணமே இரையாக்கி விடுவது என்று தீர்மானித்து வெகு உக்ரமான அவ்வஸ்திரத்தை எடுத்துப் ப்ரயோகம் செய்ய ஆரம்பித்தான். அந்த ஸமயத்தில் பாதாள லோகத்திலிருந்த அச்வ

# தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனது

ஸேனன் என்ற ஒரு நாகம் எழும்பி அங்கு வந்தது. அச்வஸேனன் அர்ஜுனனிடம் பகை கொண்டது. அது தன் தாயுடன் காண்டவ வனத்தில் வசித்து வந்தபோது அவ்வனத்தை அர்ஜுனன் அக்கினிக்கு இரையாக்கினான். தாய்ப் பாம்பு குட்டியைக் கவ்விக் கொண்டு தப்பியோடும்போது அர்ஜுனன் அம்பு எய்து தாய்ப் பாம்பை ஸம்ஹரித்தான். குட்டி தப்பியோடி பாதாளத்தில் புகுந்து கொண்டது. அன்றுமுதல் அச்வஸேனன் என்ற அக்குட்டிப் பாம்பு அர்ஜுனன் மீது வைரம் வைத்திருந்தது. கர்ணன் யுத்தத்தில் அர்ஜுனன் மீது நாகாஸ்திரப் பிரயோகம் செய்வது தெரிந்து இது தான் ஸமயம் என்று அச்வஸேனன் அந்த அஸ்திரத்தில் தன் ஸூக்ஷ்ம ஸ்வரூபத்தினால் புகுந்து கொண்டது. கர்ணன் குறிவைத்தான். ஸாரதியான சல்யன் "கர்ணா கொஞ்சம் தாழ்த்திக் குறிவைக்க வேண்டும். உன் குறி கண்ணிற்குச் சரியாய் இருக்கிறது. கண்டத்தில் குறி வைக்க வேண்டும்" என்று போதித்தான். கர்வியான கர்ணன் "நீ சொல்ல வேண்டாம். கர்ணன் குறி வைத்தால் வைத்தது தான். மறுபடி திருத்துவது என்ற பேச்சுக்கிடையாது" என்று கடுகடுப்புடன் கூறிவிட்டு பாணத்தை எய்தான். அச்வஸேனன் அவ்வஸ்திரத்தில் புகுந்திருந்த ரஹஸ்யம் கர்ணனுக்கும் தெரியாது. அஸ்திரம் கர்ணனுக்கே ஆச்சரியத்தை உண்டு பண்ணிய உக்ரத்துடன் விஷ ஜ்வாலையைக் கக்கிக்கொண்டு பாய்ந்தது. அது வானத்தைக் கிழித்துக்கொண்டு பாய்ந்த போது, மூவுலகும் நடுங்கியது. "ஒழிந்தான் இன்றோடு அர்ஜுனன்" என்று கௌரவர் ஆரவாரித்தனர். க்ருஷ்ணன் நாகாஸ்திரத்தின் ப்ரபாவத்தை அறிந்தவராதலின் அதனின்று அர்ஜுனனைத் தப்புவிக்க ஒரு யுக்தி செய்தார். அஸ்திரம் புருவத்திற்கு நேராக வருவது கண்டு ரதத்தைத் தன் முழு பலத்தையும் கொடுத்துக் காலால் அழுத்தினார். ரத சக்கரங்கள் பூமியில் பதிந்தன. குதிரைகள் மட்டிபோட்டுப் படுத்தன. "ஆஹா என்ன யுக்தி" என்று தேவர்கள் ஆரவாரித்துப் பூ மழை சொரிந்தார்கள், பாண்டவ ஸைன்யங்கள் ஸிம்ம நாதம் செய்தன. நாகாஸ்திரம் அர்ஜுனனின் கிரீடத்தில் பாய்ந்து அதை உடைத்து உதிர்த்தது. அக்கிரீடம், இந்திரன், தன் புதல்வனான அர்ஜுனனுக்கு அளித்தது. என்றும் அது உடைபடாதது. நவரத்னங்கள் பதிக்கப் பெற்று சூர்ய ப்ரகாசமாய் விளங்கியது. அதை தரித்தவனானதால் அர்ஜுனனுக்கு "சிரீடீ" என்ற பட்டம் உண்டு. மஹிமை வாய்ந்த அக்கிரீடம் நாகாஸ்திரத்திற்கு இரையானது. அர்ஜுனன் தலை தப்பியது. க்ருஷ்ணன் காப்பாற்றினார் இருந்தாலும் துக்கத்தையும் அவமானத்தையும் அடைந்த அர்ஜுனன் பட்டு வஸ்திரத்தினால் தலையை மூடிக் கொண்டான். நாகாஸ்திரம் திரும்பிக் கர்ணனின் அம்பறுத்தூணியில் நுழைந்தது. அச்வஸேனன் வெளிக் கிளம்பி கிளம்பி கர்ணன் முன் தோன்றினான். தன் வரலாற்றை தெரிவித்து அந்த நாகாஸ்திரத்தையே மறுபடி பிரயோகிக்கும்படி கர்ணனை வேண்டினான். ஆனால் "ஒரு தரம் பிரயோகித்த அஸ்திரத்தை மறுமுறை பிரயோகிக்க மாட்டேன். அவ்விதமே என் பிரதிக்ஞை" என்று சொல்லி மறுத்துவிட்டான். இது அவன் குந்தி தேவிக்கு செய்து கொடுத்த வாக்குறுதி.

அச்வஸேனன் தானாகக் கிளம்பி அர்ஜுனனை வதைக்க அஸ்திர ரூபமாய் பாய்ந்தான். கிருஷ்ணன் அவனை அர்ஜுனனுக்குக் காட்டினார். அர்ஜுனன் சில பாணங்களால் அச்வஸேனனைத் துண்டித்து எறிந்தான்.

பின்பு நடந்த யுத்தத்தில் கர்ணன் மாண்டான் ஸ்ரீ கிருஷ்ண பகவானின் அனுக்ரஹத்தால், அன்று அர்ஜுனன் தலைக்கு வந்தது. தலைப்பாகையுடன் போய்விட்டது.

# புஸ்தக விமர்சனம்

ஸ்ரீராம சரிதை: [ஆசிரியை, K. S. சங்கரி, T. S. V. கோவில் தெரு. 2-46; மயிலாப்பூர், விலை 7 அணு.]

ஸ்ரீ ராமசரிதை யென்னும் இப்புஸ்தகம் எளிய தமிழ் நடையில் சிறிய வாக்கியங் களுடன் விளக்கமாகவும் சுருக்கமாகவும் எழுதப்பட்டுள்ளது. இப்புஸ்தகத்தை எழுதிய சிறுமி, ஸ்ரீ சங்கரி, ஸ்ரீமத்ராமா யண கதையில் நல்ல பயிற்சியும், பக்தியும் உடையவள் என்பதைத் தமிழன்பர்கள் அறிந்து அச்சிறுமிக்குஊக்கமளிப்பாராக. சிறுவர் சிறுமிகளுக்கு இப்புஸ்தகம் மிக வும் பயன்படும்.

குடும்பஸுகம்: [ஆசிரியர். ரமண தாஸானந்தன். T. S. V. கோவில் தெரு. 2-46, மயிலாப்பூர். விலை 4 அணு.]

குடும்ப ஸுகத்தைப் பற்றிய நன்மை திமைகளை நீண்ட நாள் ஆராய்ந்து அநு பவத்திலறிந்ததை உதாரண முகமாக எழுதி வெளியிட்டுள்ளார் இதனசிரியர். இப்புஸ்தகம் குடும்பத்தவர்களுக்கு ஒரு சிறந்த நற்போதனையாகப் பயன்படும். இந்நூலில் இடையிடையே ஹாஸ்ய ரஸம் ததும்புகிறது. குடும்ப ஸம்பந்தமுள்ள ஒவ்வொருவரைப் பற்றியும் இவ்வாசிரியர் நன்முக விமர்சகம் செய்துள்ளார். நாவல் படித்துப் பொழுது போக்குபவர்கள்கூட இப்புஸ்தகத்தைப் படித்தல் நலம்.

எல்லாம் நானே :—[ஆசிரியர், கா. சு. சேஷகிரி T. S. V. கோவில் தெரு. 2-46. மயிலாப்பூர். விலை 2 அணு.]

எல்லாம் நானே என்று சொன்னல் அவ்விதம் ஆகிவிடமுடியுமா? முடியாது; ஆனல் ஸ்ரீ சேஷகிரி எழுதியுள்ள 'எல்லாம் நானே' என்ற புஸ்தகத்தைப் படித்தால் அவ்விதமே ஆகிவிடலாம் என்று தோன் றுகிறது. இப்புஸ்தகத்தைப் படிக்கும் போது உடம்பு மறந்து, உணர்வு மறந்து உயிர் ஒன்றிப் போய் 'எல்லாம் நாம் தான்' என்பதை நிச்சயமாய் அறிந்து கொள்ளலாம். வேதாந்தக் கடலைக் கடைந்து எடுத்த 'அமுதமென்றே இந் நூலைச் சொல்லி விடலாம்.

ஜோதிவிருக்ஷம் :—[ஆசிரியர். கா. சு, சேஷகிரி, T. S. V. கோவில் தெரு, 2-46. மயிலாப்பூர். விலை 2 அணு.]

வேதாந்த ஜோதியில் திளைத்துக்கொண் டிருக்கும் இந்நூலாசிரியர், தம அநுபவத் தை 'ஜோதி விருக்ஷத்தில்' ஒரு கதை போல எழுதியுள்ளார். இதைப் படிப்பவ ரும் 'ஒரு ஜோதி விருக்ஷத்தை' நிச்சய மாய் சுவப்பனத்திலாவது காண்பார்.

கமலா முதலிய சிறு கதைகள் :—[ஆசிரி யர் ஆர். திருஞான சம்பந்தம்; சக்தி காரி யாலயம். 367, எஸ்பிளனேட் சென்னை. விலை. ரூ. 1-0-0]

சிறுகதை யெழுதும் சிறந்த எழுத் தாளரில் இந்நூலாசிரியரும் ஒருவர். இந் நூலில், உள்ள ஒவ்வொரு நிகழ்ச்சியும் படிப்பவருள்ளத்தைக் கொள்ளை கொள்ளு கிறது. தமிழின் நடைப் போக்கு ஜிலு ஜிலுவென்று தத்திக் குதித்தோடும் ஆற் றைப் போலச் செல்கிறது. தமிழில் நல்ல உயர்ந்த, எளிய நடைச் சித்திரம் என்று கூடக் கூறலாம். ஆனல் இந்நூலிலுள் ளவை முழுவதும் கதைகளென்று கூறுவ தற்கில்லை. சில சிறிய நிகழ்ச்சிகளைக் கூடச் சாமர்த்தியமாக கதையைப் போல அமை த்துள்ளார் ஆசிரியர்.

கல்வி :—[மொழி பெயர்ப்பாளர். தி. சு. அவிஞசிலிங்கம். ஸ்ரீ ராம கிருஷ்ண மிஷன் வித்யாலயம். கோயமுத்தூர் ஜில்லா. விலை அணு 12.]

ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் அவ் வப்போது கல்வி விஷயமாக உபன்ய சித்ததை ஸ்ரீ அவிநாசிலிங்கம் அவர்கள் தொகுத்து மொழி பெயர்த்து 'கல்வி' யென்ற பெயருடன் இந்நூலை வெளியிட் டுள்ளார்கள். இந்நூலைப் படித்தவர் கள், தற்காலக் கல்வியால் சிறிதும் பய னில்லை யென்பதை நன்முக உணர்வார்கள்; படிக்கும் போதே நம்மனத்தில், ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்குகின்றது இந் நூல். ஒவ்வொரு பாகமும் அவசியம் படித்து அநுபவத்திற் கொண்டு வருதற் குரியது, இந்நூலின் மொழி பெயர்ப் பாளருக்குத் தமிழ் நாட்டார் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர்கள்.

# உதிர்ந்த மணிகள்

"ஜெர்மன் தேசயுவர்களுக்குப் போதிக்கப்படும் கல்வியைப்பற்றிச் சிறிது கூற வேண்டியது அவசியம். நாஜிகள், உலகத்தில் மஹாசக்தி அடைந்ததின் ரகசியம் அதுதான். தற்காலதேசியத்தில் ஓர் புதுத் திட்டத்தைக் கண்டு பிடித்த பெருமை நாஜியர்களைச் சேர்ந்தது. புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட கல்வித்திட்டத்தின் வழியே தொழிற்சாலைகளில் சாமான்களைச் செய்து குவிப்பதேபோல மானிடர்களைச் செய்து குமிக்கிறார்கள் என்று தான் கூற வேண்டும். அவர்களுடைய அதிகாரிகளின் போக்கு எவ்விதமிருக்குமோ அவ்விதமே தான் இருக்கும் நாஜி யுவர்களின் மனப்போக்கும்."

வி. இ. எம். ஜோடு.

"நிர்மாணதிட்டத்தில் இடை விடாது உழைத்துக்கொண்டிருந்தால் நாம் எந்த அபாயத்தையும் எதிர்க்கலாம்" அதாவது கிராமங்களை முன்னுக்குக் கொண்டு வருவது. நகரத்திலுள்ள ஜனங்களை கிராமத்தின் அபிவிருத்திக்காக உழைக்கச் சொல்வது. நகரங்களிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தையும், பயத்தையும் இது போக்கிவிடுகிறது. இவ்வித மாறுதல் சமுகத்துக்கே ஒரு புது மேனி கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை இக்காலத்துக்கு வேண்டிய, பீதியில்லாத சமாதானம் எங்கும் நிலவ இது உபயோகப்படுகிறது."

மஹாத்மா காந்தி :

"ஹிந்தி உருது சேர்க்கையைக் கொண்டுவர யாராவது முயற்சி எடுத்தால், அதனால் சௌகர்யம் ஏற்படாது. இவ்விரண்டு பாஷைகளினலொரு போலி மொழி கிடைக்கலாம். ஆனால் அம்மொழியை இரு பாஷையாளர்களும் விரும்பார். அதனால் பாஷையிலும், கலையிலும் பெரும் குழப்பந்தான் விளையும்."

டாக்டர் அமர்நாத் ஜா.

'எவ்விதமிருந்தாலும், வெல்ஸ் பெரியாரும் அவருடைய கூட்டாளிளும் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், பிரிட்டிஷ் ராஜ்யம் மறைந்து தான் போகப் போகிறது. பிரிட்டிஷ் ராஜ்யம் நாம் கண்ட ஓர் கெட்ட கனவு என்று தான் கொள்ளவேண்டும். ஒரு பெரிய புராணத்தில் இது ஓர் சிறிய பக்கமே; அதையும் நாம் திருப்பி விட்டோம்."

ஜவஹர்லால் நேரு.

"ஓரிடத்தில் மஹாத்மா காந்தி, காலேஜில் வாசிக்கும் இந்தியப் பெண்களெல்லாம் கல்வி முடிந்ததும் பொம்மைகள் ராஜ்யத்தில் மறைந்துவிடுகிறார்கள் என்று கூறியதாக நினைவு, இதற்குக் காரணம், வாசித்த பெண்கள் மேல் நாட்டு நாகரீகத்தில் மயங்கி விழுந்து தங்களையும் முட்டாள் தனமாக ஒரு வெள்ளைக்காரியாக்கிக் கொண்டு விடுகிறார்கள். மேல் நாட்டினர்களிடம் இருக்கும் கெட்ட குணங்கள் தான் இவர்களுக்குப் படிகிறது; நல்லகுணம் படிவதில்லை. ஆதலால் நம் நாட்டுப்பெண்கள் நாட்டிற்கு உதவியாக இருக்க வேண்டுமாயின் அவர்கள் மேல் நாட்டு நல்ல குணங்களையும் நம் நாட்டு நல்ல குணங்களையும் எடுத்துக் கொள்ள வேண்டும்."

ஸர். எம். வேங்கடசுப்பராவ்.

---



# அனந்த சயனம்

நடிகர்கள் :

கே. சுப்ரமண்யம், பி.ஏ., பி.எல்.
எஸ். டி. சுப்புலக்ஷ்மி
எம். வி. ராஜம்மா
வி. என். ஜானகி
ஜி. பட்டு அய்யர்

டைரக்ஷன் :

கே. சுப்ரமண்யம், பி.ஏ.,பி.எல்.
ஸி. எஸ். வி. அய்யர்

●

மாக்ஷிமை பொருந்திய திருவாங்கூர் மகாராஜா அவர்களின் மேலான ஆதரவில்

மதருாஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷன் தயாரித்தது

ஜெமினி ரிலீஸ்

